# அம்பாள் அருளாட்சி



ந.அரியரத்தினம்

2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அம்பாள் அருளாட்சி

ந. அரியரத்தினம்

2022

வல்வெட்டித்துறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | அம்பாள் அருளாட்சி |
| விடயம் | : | ஆன்மிகம் |
| ஆசிரியர் | : | ந. அரியரத்தினம் |
| உரிமை | : | ந. அரியரத்தினம், |
| | | ஊரிக்காடு, வல்வெட்டித்துறை, இலங்கை. |
| பிரதிகள் | : | 500 |
| அச்சுப்பதிப்பு | : | தமிழ்ப்பூங்கா, நெல்லியடி, இலங்கை. |
| முதற் பதிப்பு | : | 2022.04.09 |
| பக்கங்கள் | : | 88 |

| | | |
|---|---|---|
| *Title* | : | *Ambal Arul Adchi* |
| *Subject* | : | *Spiritual* |
| *Author* | : | *N. Ariyaratnam* |
| *Copy right* | : | *Author N. Ariyaratnam* |
| | | *Oorikkadu. Valvettiturai, Sri Lanka.* |
| *Copies* | : | *500* |
| *Printers* | : | *Tamilpoonka, Nelliady, Sri Lanka.* |
| *First Edition* | : | *2022.04.09* |
| *Pages* | : | *88* |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| உள்ளே | பக்கம் |
|---|---|
| ஆசியுரைகள் | |
| முன்னுரை | |
| அருளாட்சி - 01 | 01 - 07 |
| அருளாட்சி - 02 | 08 - 14 |
| அருளாட்சி - 03 | 15 - 23 |
| அருளாட்சி - 04 | 24 - 38 |
| அருளாட்சி - 05 | 39 - 44 |
| அருளாட்சி - 06 | 45 - 52 |
| அருளாட்சி - 07 | 53 - 63 |
| அருளாட்சி - 08 | 64 - 69 |
| அருளாட்சி - 09 | 70 - 77 |
| அருளாட்சி - 10 | 78 - 82 |
| அருளாட்சி - 11 | 83 - 87 |
| அருளாட்சி (சிவன்) | 88 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"SIVAGAMA SITHANTHA GNANATHESIGA BANU"
"PIRATHISHDALANKARA SITHANTHA SAAKARAM"
"PIRATHISHDA SIROMANI SRI SUBASVARAM"
SIVASIRI SOMASKANTHA THANDABANIKA THESIGAR
JUSTICE OF THE PEACE (ISLAND WIDE)
DEEN FACULTY OF ORDAINED SAIVA PRIESIS,
CHIFE PRIESTS,
SRI MUTHUMARIAMMAN KOVIL,
VALVETTITHURAI
JAFFNA SRILANKA
T.P.No ; 0212055114,
Cell : 0775940183, 0770849993

உ
சிவமயம்



"சிவாகம சித்தாந்த ஞானதேசிக பானு"
"பிரதிஷ்டாலங்கார சித்தாந்த சாகரம்"
"பிரதிஷ்டா சிரோமணி ஸ்ரீசுபஸ்வரம்"
**சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணிக தேசிகர்**
சமாதான நீதிவான், இந்துமதகுரு பீடாதிபதி.
பிரதமகுரு ஸ்ரீமுத்துமாரி அம்மன் கோவில்.
வல்வெட்டித்துறை.
யாழ்ப்பாணம்.
இலங்கை.

திகதி 25.03.2022

---



# ஆசிச்செய்தி

சந்நிதியானின் பெருமைகளையும் அற்புதங்களையும் ஆனந்தாச்சிரம அக்கிராசனர் மோகன் அடிகளாருடன் கூட இருந்து மத உணர்வுகளை சைவத்தமிழ் சங்க மூலம் வெளிப்படுத்திய அதிபர் திரு.நடராசா அரியரத்தினம் **B.Edu & M.Edu** அவர்கள் ஞானச்சுடர் வாயிலாகவும், தன்னுடைய தனிப்பட்ட வெளியீடுகளாகவும் வெளிப்படுத்தி தன் ஆன்மிக ஞானத்தை ஊருலகறியச் செய்தவர். பணி நிறைவு பெற்று பிறிதொரு நாட்டில் வாழ்ந்து கொண்டிருக்கும் வேளையிலும்கூட தன் சொந்த நாட்டின் தெய்வங்களைப் பற்றியும் தெய்வ அனுக்கிரகங்கள் பற்றியும் பிறரறியும் வண்ணம் பரப்புரைகளைச் செய்து வரும் அவர் வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மனைப் பற்றியும் அம்பிகையின் மாட்சிமையையும் கீர்த்தியையும் பிறர் அறியச் செய்ய வேண்டுமென்பதற்காக வழமை போல இவ்வாண்டும் இலங்கை வந்து தன் அறிவு வங்கியில் சேர்த்து வைத்த அனைத்தையும் எழுத்தாக்கி அம்பாளின் அருளாட்சி எனும் இந்நூலை ஆக்கி எமக்கு அளித்துள்ளார்.

கூரணிந்திருவிழியும் அமுத மொழியும் சிறிய கோவையின் கனி அதரமும் கொண்ட வல்லையின் கோப்பெருந்தேவியானவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளின் மகிமைகளையும் மாண்புகளையும் மக்கள் அறிய வேண்டும் என்பதற்காகவே "அம்பாளின் அருளாட்சி" எனும் இந்நூல் அன்பர் அரியரத்தினம் ஆசிரியப் பெருந்தகையினால் ஆக்கி அளிக்கப்படுகின்றது. அன்பரின் ஆன்மிகப் பண்பாற்றல் அவரை எந்நேரமும் சதா உந்துதல் வழங்கி எண்ணங்களை எழுத்தாக்கியுள்ளது என்றே கூற வேண்டியுள்ளது. எத்தனை கஷ்டங்கள் வந்தாலும் பெருமாட்டியின் திருவடியை மறவாதிருக்க வேண்டும் என்பதும் எக் கஷ்டங்கள் வந்தாலும் அவற்றிக்கிடையே அம்பிகையின் அருட்பார்வை கஷ்டங்கள் அனைத்தையும் நீக்கும் என்பதைக் கூறுவதுமே ஆசிரியரின் முயற்சியாகும். இம் முயற்சியில் ஆசிரியப் பெருந்தகை வெற்றியீட்டி அடியவர்கள் மனதில் நீங்கா இடம் பெற்றுத் திகழ்வார் என்பது என் ஆசியாகும். அம்பிகையின் அருட்கடலை அவர் பெற்றுத்திளைக்க வேண்டும் என்றும் அந்த ஆனந்த சாகரத்துள் அம்பாள் அடியவர்களை அவர் ஆழ்த்துவார் என்ற நம்பிக்கையில் அம்பிகையின் பாதங்களைப் பற்றி இவ்வாசிச் செய்தியை நிறைவு செய்கின்றேன்.

வாழ்க வளமுடன், எண்ணுவார் நெஞ்சில்
நண்ணுவாள் அம்மை!

சுபம்! மங்களம் !

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணிக தேசிகர் J.P.
பிரதமகுரு, வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவில்
வட்வெட்டித்துறை.
ஆதீனகர்த்தர், தென்புலோலியூர் புற்றளைச் சித்தி விநாயகர்
தேவஸ்தானம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்



கிரியா க்ரம ஜோதி, கிரியா கலாப முக்தாமணி
**சிவஸ்ரீ ப.மனோகரக் குருக்கள்**
பிரதம குரு.
வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வர சுவாமி தேவஸ்தானம்,
வல்வெட்டித்துறை.
தலைவர், சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம்.

'Kriya Krama Jothy', 'Kriya Kalapa Mukthamani'
**Shivasri P.Manohara Kurukkal**
*Chief Priest*
*Valambiga Samethe Vaitheeswara Swami Temple,*
*Valveddithurai,*
*President, international Hindu Religius Priest Organitation.*

## ஆசிச் செய்தி



ஆண்டவன் பெருமைகளை நடைமுறை வாழ்க்கையுடன் இணைத்து எடுத்துக்கூறும் பணி மிகச் சிறந்த சமயப் பணியாகும். அம்பாள் அருளாட்சி என்ற இந்நூலினை அரியரத்தினம் ஆசிரியர் அவர்கள் வெளியீடு செய்வது நிறைவைத் தருகின்றது. அதனை மிகவும் வரவேற்கின்றேன்.

வருங்கால சந்ததியினர் அம்பாள் பெருமைகளை அறிந்து கொள்ளும் நூலாக இது அமைகின்றது. நீண்ட காலமாக இது போன்ற அருளாட்சி நூல்களை மட்டுமன்றி சமய ஆவண நூல்களையும் வெளியீடு செய்து வருகின்ற ஆசிரியர் பெருமைக் குரியவர்.

ஆசிரியர் இவ்வாறான பணிகளை எமது சமய மக்களுக் காக தொடர்ந்தும் செய்வதற்கு இறைவன் அருள் கிடைக்க பிரார்த்தித்து நல்லாசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவிக் கின்றேன்.

**03.04.2022** சிவஸ்ரீ ப.மனோகரக் குருக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச்செய்தி



*ஆத்தாளை எங்கள் அபிராம வல்லியை அண்டமெல்லாம்*
*பூத்தாளை மாதுளம்பூ நிறத்தாளை புவி அடங்கக்*
*காத்தாளை அங்குச பாசாங்குசமும் கரும்பு வில்லும்*
*சேர்த்தாளை முக்கண்ணியைத் தொழுவார்க்கு ஒரு*
*[தீங்கில்லையே.*

உலகளாவிய ரீதியில் சைவமும் தமிழும் பின்னிப் பிணைந்து தமிழர்களின் கலாசாரத்திற்கு தனிச் சிறப்பைக் கொடுத்துக்கொண்டு இருக்கின்றன. இவை இரண்டையும் ஒரு நாட்டிற்குள் சிறைப்படுத்தாமல் இன்று உலகம் பூராகவும் எம் மக்கள் அவைகளை எடுத்துச் சென்றுள்ளனர். அந்தவகையில் முத்துமாரி அம்பாள் பக்தர்களும் வல்வெட்டித்துறை மக்களும் தம் கடமைகளைச் செவ்வனே செய்வதனை வெளிப்படுத்தும் ஒரு சான்றாக இன்று கனடா அல்பியன் ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம் திகழ்கின்றது.

வல்வெட்டித்துறையில் குடிகொண்டுள்ள முத்துமாரி அம்பாளின் சிறப்பையும் வல்வை மக்களின் அளவுகடந்த அம்பாள் மீதான பக்தியையும் எடுத்துக்காட்டும் விதமாகவும் அவர்கள் மீது அம்பாள் பொலியும் அதீதமான கருணையை எடுத்துக்காட்டும் விதமாகவும் திரு. ந. அரியரத்தினம் அவர்கள் அம்பாள் அருளாட்சி என்னும் நூலை ஆவணப்படுத்தி வெளியிடுவதை பாராட்டுவதிலும் வாழ்த்துவதிலும் பெருமிதம் கொள்கின்றேன்.

இவர் எழுதுகின்ற அம்பாள் அருளாட்சி என்னும் இந் நூலை வாசிக்கும்போது வல்வெட்டித்துறையையும் அங்கு அருளாட்சி புரியும் அன்னை முத்துமாரி அம்மனையும் நமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனக்கண் முன் கொண்டுவந்து நிறுத்துவதோடு அவளின் அற்புதங்களை எண்ணி மேனி சிலிர்க்கவும் செய்கின்றது.

அம்பாள் அருளாட்சி எனும் நூலை அடியார்களுக்குத் தருகின்ற தொண்டன் அரியரத்தினம் அவர்களை பாராட்டுவதோடு அம்பாளின் அருள் கொண்டு ஆசீர்வதிக்கின்றேன். எல்லோருக்கும் பயன்படும் வகையில் காலத்தால் அழியாத சிறந்த படைப்புக்களை இவர் மென்மேலும் கொடுக்க வேண்டும். அம்பாளின் ஆசி இவருக்கு என்றென்றும் கிடைக்க வேண்டும் என்றும் அடியேன் அம்பாளை மனதார வேண்டு நிற்கின்றேன்.

ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்
1771, அல்பியன் றோட்,
கனடா.
25.03.2022

ஆகம கிரியா நிபுதர்
சி. ஆறுமுகக்குருக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

இலங்கை மக்களால் மட்டுமன்றி உலகத்தவராலும் அறியப் பட்ட மண் வல்வை மண். இத்தகைய பெருமைமிக்க வல்வை மண்ணில் உள்ள மக்கள் அனைவராலும் உணரப்பட்ட கண் கண்ட தெய்வம் வல்வை முத்துமாரி அம்மன். ஆன்மிக உண்மை களும் ஆன்மிக உணர்வுகளும் அடுத்த சந்ததியினருக்கு கடத்தப் படுவது எல்லா வகைகளிலும் அவசியமானது. அதிலும் எமது அடுத்த சந்ததியினர் எமது மண்ணின் மணத்தை அறியாதவர் களாக, உணராதவர்களாக இருந்துவிடுவார்களோ என்ற ஏக்கம் எம் எல்லோருக்கும் இருக்கிறது. இந்த சூழ்நிலையில் அம்பாளது அருளாட்சிகளை இதுபோன்ற நூல்களுக்கூடாக வெளிப் படுத்துவது, ஆவணப்படுத்துவது எல்லாம் எம் எல்லோருடைய வரலாற்றுக் கடமையாகும்.

அம்பாளது திருவுள்ளப்படி அம்பாள் இட்ட பணியை நிறை வேற்றுகின்ற முயற்சியாகவே இந்த சிறிய நூல் வெளியீடு அமைகிறது. இந்நூலில் இடம்பெறுகின்ற அருளாட்சிகள் அனைத்தும் அம்பாளுடைய கருணையினால் அடியேனுக்கு கிடைத்தவையாகும். இவ்வாறு கிடைத்து இங்கே வெளியிடப் படுபவை ஒரு துளி அளவு மட்டுமே. இவைபோன்ற அருளாட்சி கள் ஏராளம் இடம்பெற்ற வண்ணமுள்ளதை அடியார்கள் நன்கு அறிவார்கள். அவைகளும் வெளிவர வேண்டுமென்பதே அனைவரதும் பெருவிருப்பமாகும்.

வல்வை மண்ணை சேர்ந்த எமது மூதாதையர்கள் தாம் ஈட்டிய செல்வத்தை ஆலய திருப்பணிகளுக்கும், ஆலயத் திருத் தொண்டுகளுக்கும் மற்றும் தர்ம காரியங்களுக்கும் மிகத் தாராள மாகவே செலவுசெய்த சிறப்பிற்கும் பெருமைக்குமுரியவர்கள். அடியேனது மூதாதையர்களும் இவ்வாறான இறை கைங்கரியங் களில் ஈடுபட்டமை நாம் செய்த பாக்கியமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது தாயார் திருமதி நடராசா வள்ளியம்மாளின் பேரன் வல்லிபுரம் முருகுப்பிள்ளை தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்தின் தீர்த்தக் கிணறு மற்றும் மூலஸ்தான கதவு, சட்டவிளக்கு போன்ற திருப்பணிகளை தனது உபயமாக மேற்கொண்டுள்ளார். இதேபோன்று வல்வை வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வர சுவாமிகளது ஆலயத்தின் பிரமாண்டமான சூரனையும் இந்தியாவிலிருந்து கொண்டுவந்து உபயமாக வழங்கியுள்ளார். 1898ஆம் ஆண்டு உபயமாக வழங்கப்பட்ட இந்த திருப்பணிக்கு இன்னும் இருவர் உதவி யுள்ளனர். இதேபோன்று வல்வை முத்துமாரி அம்மனது சூரனையும் அடியேனது பூட்டனாரான வ. முருகுப்பிள்ளை அவர் களே முழு உபயமாக வழங்கி சூரன்போர் திருவிழாவினையும் நடாத்திவந்துள்ளார். தற்பொழுது அவர் பரம்பரையிலுள்ளவரும் அடியேனின் தாய்மாமன் வழி உறவுள்ளவருமான திருமதி தங்கராசா மகேஸ்வரி (கட்டிமணி) அதனை நடாத்தி வருகின்றார்.

இதேபோன்று எமது தாயார் திருமதி நடராசா வள்ளியம்மாள் வாலாம்பிகா சமேத வல்வை வைத்தீஸ்வர சுவாமிகள் ஆலயத்தின் திருக்கல்யாண மண்டபத்தை தமது உபயமாக வழங்கி எமக்கு வழிகாட்டிச் சென்றுள்ளார். மேலும் ஆதி வைரவர் ஆலய கோப்பிச ஓடுகளையும் முழுமையாக தனது திருப்பணி உபயமாக வழங்கியுள்ளார். அடியேனது மூதாதையர்கள் போலவே வல்வையின் தற்போதைய தலை முறையினரின் மூதாதையர்களும் இவைபோன்று ஏராளமான திருப்பணிகளை வல்வை முழுவதும் அமைந்திருக்கும் ஆலயங் களுக்கு உபயமாக வழங்கி தாமும் புண்ணியத்தைத் தேடி தமது சந்ததிக்கும் புண்ணியத்தை தேடி வைத்துச் சென்றுள்ளனர்.

நாம் வெறும் கருவிகள் மட்டுமே. இறைவன் இட்ட பணியை பிறப்பின் கடமையாக கருதிச் செயற்பட வேண்டும் என்பதே அடியேனது உணர்வாகும். அம்பாளின் அருளாட்சி என்ற இந்த நூல் தொடர்பான செயற்பாட்டையும் அடியேன் அவ்வாறே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருதுகின்றேன். இந்த சிறிய நூல் ஒரு கூட்டு முயற்சியின் பிறப்பு. நூலில் இடம்பெறும் அருளாட்சிகளை வழங்கியவர்கள் மற்றும் இவை தொடர்பான உதவிகள், ஒத்துழைப்புக்கள், ஆலோசனைகள் என நேரடியாகவும் மறைமுகமாகவும் பங்களிப்புச் செய்தவர்கள்தான் இந் நூலின் சொந்தக்காரரர். இவர்களது இந்த தூய்மையான பங்களிப்புத்தான் அடியேனுக்கு எல்லா வகைகளிலும் உந்துசக்தியாக அமைந்தது. குறிப்பாக சாமி அப்பாத்துரை அவர்களது உதவி ஒத்துழைப்புக்கள் சுட்டிக் காட்டப்பட வேண்டியவை. இவர்கள் அனைவருக்கும் அடியேனது நன்றிகளும் வாழ்த்துக்களும்.

வல்வை முத்துமாரி அம்மன் பிரதம குருக்கள் சிவஸ்ரீ சோ. தண்டபாணிக தேசிகர் அவர்கள் அறுபது ஆண்டுகளாக அம்பாளுக்கு இறைபணி மேற்கொண்டு வருகின்ற பெரும் பாக்கியம் பெற்றவர். வல்வையில் மூன்று தலைமுறையினர் அவரைக் குருக்களாக அழைக்கின்ற பெரும்பேறும் அவருக்கு வாய்த்துள்ளது.

இதேபோன்று வைத்தீஸ்வர சுவாமிகள் தேவஸ்தான பிரதமகுரு சிவஸ்ரீ ப.மனோகரக் குருக்கள், அவரின் தந்தையார் பரமேஸ்வரக் குருக்கள், அவரது புதல்வன் பிரசன்னக் குருக்கள் ஆகிய மூன்று தலைமுறையினர் உற்சவ கால குருக்களாக கடமையாற்றுவதை எம்மையொத்த வயதினர் காண்பதற்கு அடியார்களாகிய எமக்கும் பேறு கிடைத்துள்ளது. மேலும் கனடா முத்துமாரி அம்மனது பிரதம குருக்கள் சி.ஆறுமுகக் குருக்கள் வல்வை மக்களுக்கு கிடைத்த பொக்கிஷமாகக் கருதப்பட வேண்டியவர். அம்பாளுடைய முழுமையான அருளாட்சிக்கு உட்பட்டவராகவும் கனடாவாழ் வல்வை மக்களால் பெரியவர் என மனம் நிறைந்து அழைக்கப்படுகின்ற பெருமைக்குரியவராகவும் அவர் காணப்படுகின்றார். இந்த மூவருடைய ஆசிச் செய்திகளும் இந் நூலிற்கு மூன்று மகுடங்கள் போல சிறப்பையும் ஒளியையும் வீசிக் கொண்டிக்கின்றன. இவர்கள் அனைவருக்கும் சிறியேனது சிரம் தாழ்த்திய பணிவான வணக்கங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந் நூலிற்குரிய கட்டுரைகளை வழமைபோல நேர்த்தியாகவும் நிறைவாகவும் தட்டச்சு செய்தது மட்டுமன்றி அட்டைப் படவடிவமைப்பு உட்பட நூல் தொடர்பான அனைத்து செயற்பாடுகளுக்கும் திருமதி மஞ்சுளா கமலதாசன் தனது அர்ப்பணிப்பான சேவையை வழங்கியுள்ளார். தமிழ்ப்பூங்கா அச்சகத்தினரும் நூலை நேர்த்தியாக அச்சிட்டுள்ளனர். அட்டைப்பட அம்பாள் திருப்படத்தை படப்பிடிப்பாளர் கிருஷ்ணா வழங்கி உதவியுள்ளார்.

எல்லாவற்றிற்கும் மேலாக பிரதம குருக்கள் சிவஸ்ரீ சோ. தண்டபாணிக தேசிகர் அவர்கள், ஆலய தர்மகர்த்தா சபைத் தலைவர் நா. வர்ணகுலசிங்கம் மற்றும் அவருடைய நிர்வாகத்தினர் அனைவரும் நூல் வெளியீடு தொடர்பாக தமது முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்கியுள்ளனர். அது மட்டுமன்றி உற்சவ காலத்தில் ஆலயத்திலேயே இந்நூல் வெளியீடு செய்வதற்கும் அனுமதியும் ஆதரவும் வழங்கியுள்ளனர். இதேபோன்று இந்நூல் கனடா முத்துமாரி அம்மன் ஆலயத்திலும் அறிமுக வெளியீடாக வெளியிடப்படவுள்ளது. அதற்கு அந்த ஆலய நிர்வாகத்தினரும் தமது ஒத்துழைப்புக்களை வழங்கியுள்ளனர். இவர்கள் அனைவருக்கும் அடியேனது உளப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அனைத்தும் அம்பாளுக்காக.

அம்பாளை வணங்கி அற வாழ்வு வாழ்ந்து அனைவரும்
இன்புற்று இருப்போமாக.

நன்றி

*04.04.2022* இறை தொண்டில்
தொடர்புக்கு : *6479626417* ந. அரியரத்தினம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருளாட்சி - 01

இளமைக்காலத்தில் வாடி ஒழுங்கை என்பது அடியேனுக்கு மிக பரிச்சயமான ஒழுங்கை. இதேபோன்று ஒட்டுமொத்த வல்வை மக்களது உள்ளங்களிலும் என்றும் நீங்காத இடம் பிடித்திருக்கும் ஒரு ஒழுங்கையாகவும் வாடி ஒழுங்கை இருந்து வருகிறது. சிறு வயதிலிருந்தே நாம் எல்லோரும் வல்வை முத்துமாரி அம்மன் ஆலயம், அதன் மகிமை, அதன் சிறப்பு பற்றி எல்லாம் பார்த்தும், கேட்டும், அறிந்தும், உணர்ந்தும் வளர்ந்து வந்தவர்கள். இவ்வாறான உணர்வுகளை உள்வாங்கியவாறு தான் நாம் தினம்தினம் அம்பாளை வணங்கி பூரண நிறைவுடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். அம்பாள் மூதாட்டி வடிவில் வாடி ஒழுங்கையால் நடந்துவந்தார். இவ்வாறு மானிட உருவில் நடந்துவந்து இன்று கோயில் கொண்டிருக்கின்ற தாசில்தான் மணலிலிருந்து காலம் காலமாக அடியார்களுக்கு கருணை மழை பொலிந்து கொண்டிருக்கிறார் என்பதும் நாம் உணர்ந்தவையே.

சமுகத்தை பற்றி உள்வாங்கும் அறிவு அடியேனுக்கு ஏற்பட ஆரம்பித்த சிறுவயதுப் பராயம் அது. அப்பொழுதுதான் அம்பாள் வல்வையில் கோயில் கொண்டிருக்கின்ற வரலாற்றின் ஆணி வேர் பற்றியும் முதன்முதல் உள்வாங்கிய தருணம் இப்பொழுதும் நன்கு ஞாபகத்தில் உள்ளது. மூத்தவர்கள் மூலம் அம்பாள் கோடியாக்கரையிலிருந்து வருகைதந்த அற்புத வரலாற்றை கர்ணபரம்பரை கதையாக முதன்முதல் உள்வாங்கியது பசுமரத் தாணிபோல இன்றும் அடிமனதில் பதிந்துள்ளது. உண்மையில் அது அப்பொழுது பக்தி நிறைந்த பரவசமூட்டும் கதையாக அடியேனுக்கு அமைந்திருந்தது. அது மட்டுமல்ல ஆன்மிகம் தொடர்பாக இவ்வுலக வாழ்வில் உள்வாங்கிய முதலாவது அனுபவமாகவும் அது அமைந்திருந்தது எனக் கூறலாம். அம்பாளுடைய வரலாறு அம்பாளுடைய ஆலயத்திற்குள் பிரவேசிப்பதற்கு முன்பே ஆலயத்தின் வாசலில் மேற்கூரையில் மிகத் தெளிவாக ஓவிய வடிவில் வடிவமைக்கப்பட்டிருப்பதை நாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று பார்க்கின்றோம். இவை எல்லாம் அடியேனது வாழ்வியலில் பின்நாளில் உள்வாங்கிய விடயங்கள். ஆனால் வல்வை முத்துமாரி அம்மன் தொடர்பாக முதன்முதல் உள் வாங்கிய அந்த கர்ண பரம்பரை கதைதான் அடியேனது ஆழ் மனதில் இன்றுவரை ஆழமாகப் பதிந்திருக்கிறது.

இதேபோன்று கர்ண பரம்பரைக் கதையாகவோ, நூல்கள் வாயிலாகவோ, அடியார்களின் உரையாடல்களின்பொழுதோ, ஆலய முகப்பு ஓவியத்தினை உற்றுநோக்கியோ ஏதோ ஒரு மார்க்கமாக நாம் எல்லோரும் அம்பாளுடைய அற்புத வரலாற்றை அறிந்தே வைத்திருக்கின்றோம். இங்கே அம்பாள் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்ற வல்வை மண்ணுக்கு நாடி வந்து கோயில்கொண்டு கருணைசெய்து எம்மை காத்தருளு வதனை நாம் எல்லோரும் எமக்கு கிடைத்த பெரும் பேறாகவே கருதி வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். எம் எல்லோருடைய இந்த உணர்விற்கும் உயிர் கொடுப்பது போன்ற ஒரு அற்புத நிகழ்வு அண்மையில் அரங்கேறியுள்ளது. இந்த அற்புதத்தை அம்பாளே வெளிப்பட்டு நிகழ்த்தி எம் எல்லோரையும் பரவச மடையச் செய்துள்ளமைதான் எமக்கு கிடைத்த பெரும் பேறாகும். இதனை இங்கே அம்பாளுடைய மெய்யடியார்களுடன் பகிர்ந்து கொள்கின்றோம்.

திரு. சாமி அப்பாத்துரை தற்பொழுது கனடாவில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற அன்பர். இவர் மதுரை மீனாட்சி அம்மனை தினமும் மனமுருகி வழிபட்டு வருகின்ற ஒரு மெய்யடியவர். இவ்வாறு மீனாட்சி அம்மனை வழிபடுவது இப்பிறவியில் தனக்கு கிடைத்த பெரும் பாக்கியமாகக் கருதி வாழ்ந்து வருகின்றார். சங்கானையில் பிறந்து தற்பொழுது கனடாவில் வாழ்ந்து கொண்டிருக்கும் சாமி அப்பாத்துரைக்கு வல்வை முத்துமாரி அம்மனது அனுக்கிரகமும் கிடைத்துவருகிறது. கனடா முத்துமாரி அம்மன் ஆலயத்துடன் தொடர்பானவர்கள் சாமி அப்பாத்துரையை சற்று ஆழமாகவே அறிந்து வைத்துள்ளதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்கமுடிகிறது. சில வருடங்களுக்கு முன்பு அடியேன் திரு. சாமி அப்பாத்துரையுடன் இயல்பாக உரையாடிக் கொண்டிருந்த தருணம் அது. அப்பொழுதுதான் அடியேன் எதிர்பார்க்காத ஒரு விடயத்தை அவர் என்னுடன் பகிர்ந்துகொண்டார். அம்பாள் வல்வையம்பதியில் கோயில் கொண்ட வரலாற்றை அச்சொட்டாக அப்படியே அடியேனுக்கு வெளிப்படுத்தினார். இது எனக்கு ஆச்சரியமாகவும் வியப்பாகவும் இருந்தது.

என்னை அறியாமலே இது எப்படி உங்களுக்குத் தெரியும்? இதனை யார் உங்களுக்கு கூறினார்கள்? இது கனவில் கண்ட காட்சியா?... என்ற இயல்பான வினாக்களை ஆர்வத்துடன் அவரிடம் வினவினேன். இவை எல்லாவற்றிற்கும் சாமி அப்பாத்துரை தனது இயல்பான பாணியில் எனக்கு விடை பகர்ந்தார்கள். தனது குரலை தணித்து ஆறுதலாக மெதுவாக **"எனக்கு முத்துமாரி அம்மன் ஆலயம் பற்றி எதுவும் தெரியாது பாருங்கோ இவை எல்லாம் அம்பாளே எனக்கு வெளிப்படுத்திய அற்புதம்"** என உள்ளம் உருகி பயபக்தியுடன் அடியேனுக்கு தனது உணர்வு களை பகிர்ந்து கொண்டார்கள்.

சந்நிதியானுடைய கருணையுடன் சந்நிதியானுடைய அற்புதங்களை அடியவர்களுடன் நூல்கள் வாயிலாக பகிர்ந்து கொள்கின்ற பணியை அடியேன் நீண்ட காலமாக மேற்கொண்டு வருகின்றேன். தற்பொழுது அம்பாளுடைய அற்புத நிகழ்வுகளையும் அவ்வாறு அடியவர்களுக்கு வெளிப்படுத்த வேண்டுமென்ற ஒரு உள்ளுணர்வு அடியேனுக்குள் அண்மைக்காலமாக உருவாகிக்கொண்டிருந்தது. இதனால் சாமி அப்பாத்துரை சில வருடங்களுக்கு முன்பு அடியேனுடன் பகிர்ந்துகொண்ட அம்பாளுடைய அந்த அற்புத நிகழ்வை மீண்டும் ஒருமுறை அவரிடமிருந்து விபரமாக அறிவதற்கு எனது உள்ளம் தூண்டியது.

இதனை அறியும் நோக்கத்துடன் 20.11.2021 ஞாயிற்றுக் கிழமை முற்பகல் சாமி அப்பாத்துரை அவர்களுடன் தொலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசியில் தொடர்புகொண்டேன். என்ன ஆச்சரியம் அடியேன் இது தொடர்பாக எதுவும் அப்பொழுது அவரிடம் கேட்கவில்லை. அம்பாள் தொடர்பாக தானாகவே உரையாட ஆரம்பித்தார். நிறைவில் அம்பாள் வல்லையில் கோயில் கொண்ட அற்புத வரலாற்றை மீண்டும் ஒருமுறை தெளிவாக அடியேனுக்கு தானாகவே வெளிப்படுத்தினார்கள். எதனை அடியேன் அவரிட மிருந்து அறிய விரும்பினேனோ அதனை அவர் தானாகவே வெளிப்படுத்தினார். மானிடர்களாக வாழ்ந்து கொண்டிருக் கின்ற நாங்கள் வெறும் கருவிகள் மட்டுமே என அடியேன் அடிக்கடி உணர்வதுண்டு. இதனை அம்பாள் அன்றும் அடியேனு க்கு உணர்த்துவதை நன்கு உணரமுடிந்தது. சாமி அப்பாத்துரை அவர்கள் 20.11.2021 இல் அடியேனுடன் மீண்டும் பகிர்ந்து கொண்ட அம்பாளுடைய அற்புதத்தை அப்படியே வாசகர் களுக்கு வழங்குகின் றோம்.

“தமிழ்நாட்டுக் கரையிலிருந்து வழமைபோல ஒரு வள்ளம் வல்லையை நோக்கி பயணப்படுவதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறது. அப்பொழுது வானிலையும் சற்று பொருத்தமில்லாததுபோல் தோன்றுகிறது. அந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு வயது முதிர்ந்த மூதாட்டியார் இந்த படகோட்டி களிடம் வருகின்றார். அவ்வாறு வந்த மூதாட்டியார் தன்னையும் வல்லை க்கு வள்ளத்தில் கூட்டிச் செல்லுமாறு கேட்டு அடம்பிடிக்கின்றார். அதற்கு இந்த படகோட்டிகள் வானிலை பொருத்தமற்றிருப்பதை சுட்டிக்காட்டி மூதாட்டிக்கு மறுப்பு தெரிவிக்கின்றனர். ஆனாலும் அந்த மூதாட்டியார் விட்டபாடில்லை. மீண்டும் மீண்டும் அந்த படகோட்டிகளிடம் விநயமாக கேட்ட வண்ணமே இருந்துள்ளார். அந்த சந்தர்ப்பத்தில் அவர்களில் சற்று கட்டையான தோற்ற முள்ள ஒரு வள்ளம் ஓட்டிக்கு மனம் இரங்குகிறது. சரி மூதாட்டியையும் அழைத்து செல்வோம் என மற்ற படகோட்டிகளிடம் பக்குவமாக எடுத்துக் கூறியுள்ளார். இதன்பின்பு ஓட்டிகள் மூவரும் இந்த மூதாட்டியையும் படகில் ஏற்றிக்கொண்டு வல்லையை நோக்கி பயணத்தை ஆரம்பிக்கின்றனர். இவர்களுடன் வேறு இரண்டு வள்ளங்களுமாக மொத்தம் மூன்று வள்ளங்கள் பயணப்பட்டுள்ளன. வள்ளம் பயணப்பட்டு வந்து கொண்டிருந்த பொழுது நடுக்கடலில் புயல் காற்று உருவாக ஆரம்பிக்கின்றது. நேரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லச்செல்ல இவர்கள் பிரயாணம் செய்த வள்ளம் புரண்டுவிடுமோ என்ற அளவுக்கு புயல் காற்று உக்கிரமடைய ஆரம்பிக்கின்றது. வள்ளத்தின் ஓட்டிகள் கலக்கமும் பதட்டமுமடைகின்றனர். பயணம் செய்த படகு அவர்களை மீறி, அவர்கள் கட்டுப்பாட்டை இழந்து கடலில் தத்தளித்துக் கொண்டிருக்கிறது. இந்த நிலையில் அந்த மூவரும் பயத்துடனும் நடுக்கத்துடனும் தெய்வங்களை நோக்கி அபயக் குரல் எழுப்புகின்றனர். ஆனால் இவர்களுடன் பயணம் செய்த அந்த மூதாட்டியோ கொக்கட்டை விட்டு சிரித்துக் கொண்டிருக்கின்றார். இந்த மூதாட்டிக்கு பைத்தியம் பிடித்துவிட்டதோ என்றும் அந்த படகோட்டிகள் சிந்திக்கின்றனர். ஆனால் அந்த மூதாட்டியோ மேலும்மேலும் பலமாக கொக்கட்டைவிட்டு சிரிக்க ஆரம்பிக்கின்றார். தாம் உயிருக்கு போராடிக் கொண்டிருக்கும் சமயத்தில் மூதாட்டியினது இவ்வாறான செயற்பாடுகள் படகோட்டிகளுக்கு ஒரு புது அனுபவமாக மட்டுமன்றி விளங்காத புதிராகவும் தென்படுகின்றது.

இந்த சந்தர்ப்பத்தில்தான் அங்கே அந்த அற்புதம் நிகழ்கிறது. வெள்ளைப் புடவை அணிந்திருந்த கறுத்த நிறமுடைய அந்த மூதாட்டியார் தான் கையில் வைத்திருந்த ஊன்றுதடியினால் மூன்றுமுறை அந்த வள்ளத்தின் தளத்தில் தட்டுகிறார். வேகமாக வீசிக்கொண்டிருந்த புயலின் வேகம் திடீரெனத் தணிகிறது. கடல் கொந்தளிப்பும் திடீரென நின்று போகிறது. இதன் பின்பு இவர்கள் பயணித்த வள்ளம் பயணத்தை தொடர் கிறது. நிறைவில் அந்த படகு வல்வையில் வாடிவானில் வந்து கரை தட்டுகிறது. அந்த மூதாட்டியாரும் வள்ளத்திலிருந்து இறங்கி கரைக்கு வந்து சேருகிறார். முழங்காலுக்கு கீழே அவரது சேலையும் நனைந்திருக்கிறது. களைப்புடன் வந்து இறங்கிய அந்த மூதாட்டியார் சிறிது நேரம் அங்கே யிருந்த ஒரு மகிழ மரத்தின் கீழ் தங்கி ஓய்வு எடுக்கின்றார். அப்பொழுது மூதாட்டி களைப்புடன் இருக்கிறாரே, பாவமாக உள்ளது என அப்பகுதி யிலுள்ள ஒரு பெண் இரக்கப்படுகிறார். இரக்கப்பட்ட பெண் கஞ்சி கொண்டு வந்து கொடுத்து அந்த அம்மையாரின் களைப்பை போக்கி உதவுகின்றார். அந்த மூதாட்டியார் கறுத்த உருவமும் 5 அடி 9 அங்குலமளவு உயரமும் உடைய தோற்றமுள்ளவராகக் காணப்படுகின்றார். அத்துடன் இறவிக்கை அணியாது வெள்ளை புடவை மட்டும் அணிந்திருந்ததெல்லாம் தெளிவாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்படுகின்றது. இது ஒரு ஆகஸ்ட் மாதம் 25ஆம் திகதி இடம்பெறுவ தாகவும் தெரிகிறது.

அடியேனுக்கு ஏறத்தாழ பத்து வயதாக இருக்கலாம் என நினைக்கின்றேன். அந்த சிறிய வயதில் வாடிவான், வாடியடி கடற்கரை, வாடி ஒழுங்கை எல்லாம் அடியேனுக்கு மிகவும் பரிச்சயமானவை. அதிகமாக வாடியடிக் கடற்கரையில் விளை யாடுவோம். வாடி ஒழுங்கையால் எனது மூத்த சகோரதங் களுடன் சேர்ந்து அம்பாள் ஆலயத்திற்கு சென்று வந்ததும் ஞாபகத்திலுள்ளது. அந்த சிறுவயதுப் பருவத்தில்தான் அம்மன் இந்தியாவிலிருந்து வள்ளத்தில் ஏறி வந்தார் என்றும் இந்த வாடிவானுக்குத் தான் வள்ளம் வந்ததென்றும், இந்த வாடிவானில் இறங்கி இதே வாடி ஒழுங்கையால் நடந்துபோன அம்மன் தான் அம்மனுடைய ஆலயத்திற்குள் இருக்கிறார் எனவும், அந்த அம்மன் வயது முதிர்ந்த தோற்றத்தில் வெள்ளைச் சேலை அணிந்தவராகவும் தோன்றியதாகவும் அம்மனுடைய வரலாற்றை கர்ண பரம்பரை கதையாக முதன்முறை ஒரு மூத்தவர் மூலம் உள்வாங்கியது இன்றும் நன்கு ஞாபகமிருக்கிறது.

இதேபோன்று நாங்கள் விளையாடுகின்ற இடத்தில் அம்மன் வந்து இறங்கியது, நாங்கள் சென்று வருகின்ற ஒழுங்கையால் அம்மன் நடந்து சென்றது பற்றி எல்லாம் கூறுவதைக் கேட்டபொழுது இனம் புரியாத ஒரு மகிழ்ச்சி, பக்தி. அம்மன் உண்மையான கடவுள் என்ற உணர்வு, அம்மன் எங்களை எல்லாம் காக்க வந்த கடவுள் என அம்மனை பய பக்தியுடன் வழிபட வேண்டுமென்ற உணர்வு எல்லாம் அந்த சிறு வயதில் ஏற்பட ஆரம்பித்தது. எல்லாவற்றையும்விட அம்மன் இங்கேயுள்ள மக்களுக்கு அருள்செய்ய எம்மை நாடி வந்துள்ள கடவுள் என... பல வகையான பக்தி உணர்வுகள் அந்த பிஞ்சு உள்ளத்தில் ஆழமாக உருவாகியது. பின்பு வயது அதிகரிக்க அதிகரிக்க நடுக்கடலில் புயல் ஏற்பட்டது. அம்மன் அதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தவர்களை காப்பாற்றியது பற்றி எல்லாம் சற்று ஆழமாக மற்றவர்கள் உரையாடும்பொழுது உள்வாங்க முடிந்தது.

தற்பொழுது சிறுவயதில் அடியேன் அம்பாள் தொடர்பாக கர்ண பரம்பரை கதையாகக் கேட்டவற்றை அப்படியே சாமி அப்பாத்துரை அடியேனுக்கு கூறுகின்றார். அதுவும் அம்பாள் அருட் கடாட்சத்திற்குள்ளான சாமி அப்பாத்துரைக்கு அம்பாளே காட்சியாக வெளிப்படுத்துகின்றார். அதனை அவர் அடியேனுக்கு அவ்வாறே கூறுகின்றார். மேலும் அம்பாள் சாமி அப்பாத்துரைக்கு வெளிப்படுத்திய இந்த திருக்காட்சி 2001 ஆம் ஆண்டு வல்வை முத்துமாரி அம்மன் பிரதம குருக்கள் சிவஸ்ரீ தண்டபானிக தேசிகர் கனடாவுக்கு வருகைதந்த சந்தர்ப்பத்தில் இடம்பெறுகிறது.

பரம்பரை பரம்பரையாக வல்வை மண்ணில் பிறந்து வளர்ந்து வாழ்ந்து வருகின்ற மெய்யடியவர்கள் மற்றும் புலம் பெயர் தேசங்களில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற வல்வை மக்கள் என நாம் எல்லோரும் அம்பாளுடைய அற்புத வரலாற்றை ஏற்கனவே நன்கு உள்வாங்கி வாழ்ந்து வருபவர்கள். தற்பொழுது அம்பாள் தான் கோடியாக் கரையிலிருந்து நாடி வந்து வல்வையில் கோயில் கொண்ட அந்த அற்புத வரலாற்றை வல்வையை சேராத ஒருவருக்கு காட்சியாக வெளிப்படுத்துகின்றார். அம்மன் தனது அற்புத வரலாற்றை மீண்டும் ஒரு முறை தனது திருவிளையாடல் மூலம் வல்வை மக்களுக்கு வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார்.

ஓம் அம்பாள் துணை

✧✧✧✧✧



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அருளாட்சி - 02

1970ஆம் ஆண்டு தசாப்தத்தில் மூளைசாலிகள் வெளியேற்றம், 1980ஆம் ஆண்டு தசாப்தத்தில் இன அடக்குமுறைகள் என இந்த இரண்டு தசாப்தங்களையும் பொதுவாக ஈழத்தமிழர்கள் அதிகம் புலம்பெயர ஆரம்பித்த தசாப்தங்களாகக் குறிப்பிடலாம். 1970ஆம் ஆண்டு தசாப்தத்தின் நடுப்பகுதியில் தனது வைத்தியப்படிப்பை நிறைவுசெய்த கதிர்காமலிங்கம் சந்திரலிங்கம் மந்திகை அரசினர் வைத்தியசாலை உட்பட சில வருடங்கள் எமது தாய்நாட்டிலே கடமையாற்றிக் கொண்டிருந்தார்கள். அதன் பின்பு எல்லோரையும் போல தொழில் நிமிர்த்தம் புலம்பெயர்ந்து வெளிநாடு சென்றார்கள்.

டாக்டர் சந்திரலிங்கம் வல்வையில் பிறந்த அம்பாளுடைய ஒரு மெய்யடியவர். 1981ஆம் ஆண்டு இவர் இருண்ட கண்டம் என அப்பொழுது அழைக்கப்பட்ட ஆபிரிக்கக் கண்டத்திலுள்ள நைஜீரிய நாட்டில் டாக்டராகக் கடமையாற்றிக் கொண்டிருக்கிறார். வைத்தியர் சந்திரலிங்கம் நைஜீரியாவில் கடமையாற்றிக் கொண்டிருந்த பகுதியில் பலர் அம்மை வருத்தத்திற்கு ஆளாகின்றார்கள். ஆனாலும் மக்கள் சேவையே மகேசன் சேவை என வைத்தியர் சந்திரலிங்கம் அர்ப்பணிப்புடன் அம்மை நோய் பரவிய நைஜீரிய நாட்டு பிரசைகள் உட்பட அனைவருக்கும் சிகிச்சை அளித்துக்கொண்டிருக்கிறார். இந்த சந்தர்ப்பத்தில் வஞ்சகம் இல்லாமல் அம்மை வருத்தம் வைத்தியர் சந்திரலிங்கத்திற்கும் தொற்றிக்கொள்கிறது. வைத்தியர் சந்திரலிங்கம் இப்பொழுது ஒரு நோயாளி. அவரது துணைவியார் ரஞ்சிதாவும் அவரும் மட்டுமே தனித்திருக்கின்ற ஒரு சூழல். சொந்த பந்தம் எதுவுமே இல்லாத சூழலில் தனிமை என்ற உளநோயும் சேர்ந்து வாட்டுகின்ற ஒரு நோயாளியாக சந்திரி காணப்படுகின்றார்.

இந்த சந்தர்ப்பத்தில் நோயாளியான வைத்தியர் சந்திரியை பார்வையிடுவதற்கு இரண்டு நண்பர்கள் அவரிடம் வருகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவர் கல்வித் துறையில் கடமையாற்றிக் கொண்டிருக்கும் சாமி அப்பாத்துரை. இன்னொருவர் வைத்தியர் தணிகாசலம். இருவரும் ஏழத்தாழ 35 கிலோமீற்றர் தூரத்திலிருந்து காரில் பயணித்து வந்துள்ளனர். நோயுற்றிருக்கும் தமது நண்பனைப் பார்த்து ஆறுதல் கூறுவதற்கு உள்ளார்ந்த விருப்பத்துடன் வந்துள்ளனர். இவ்வாறு நட்பிற்கு மதிப்பளித்து தனிக் குடும்ப மாக இருக்கின்ற தம்மை நாடிவந்த நண்பர்கள் இருவரையும் கண்டபொழுது சந்திரிக்கு மிகுந்த மகிழ்ச்சியும் ஆறுதலும் ஏற்படுகிறது. அது மட்டுமன்றி அவர்கள் சுகம் விசாரித்து அளவளாவி ஆறுதல் கூறியது எல்லாம் முழுச் சுற்றமுமே தன்னிடம் வந்து ஆறுதல் கூறியது போன்ற நிறைவையும் நிம்மதியையும் வைத்தியர் சந்திரிக்கு ஏற்படுத்தியது.

டாக்டரை சுகம் விசாரித்து ஆறுதல் கூறிய நிலையில் தற் பொழுது நண்பர்கள் இருவரும் தமது இருப்பிடம் திரும்புவதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருக்கின்றனர். நேரமும் மாலை நேரம் ஆகிக் கொண்டிருக்கிறது. வீட்டிற்குள் இருந்து எல்லோருமே வெளியே வருகின்றனர். சாமி அப்பாத்துரையும் அவரது நண்பரும் தமது காரில் ஏறவும் ஆயத்தமாகின்றனர். இந்த சூழ்நிலையில் தன்னை பார்வையிட வந்த நண்பர்களிடம் "இன்று தான் வல்வை முத்துமாரி அம்மனுடைய கொடியேற்றம்... என்ற தகவலை ஒரு வகையான ஆதங்கத்துடன் வைத்தியர் சந்திரி வெளிப்படுத்துகின்றார். இப்பொழுது இங்கே என்னால் பூவோ பழமோ கூட பெற முடியாது. வெறும் தண்ணீரும் இலையும் வைத்துத்தான் அம்மனை வழிபடப் போகின்றேன்... என தனது மனதை வாட்டிக் கொண்டிருந்த இன்னொரு மனக் கவலையை யும் வைத்தியர் சந்திரி தனது உற்ற நண்பனான சாமி அப்பாத்துரையிடம் வெளிப்படுத்து கின்றார்.

பூசைக்கு பூவோ பழமோ கூட பெறமுடியாத வைத்தியர் சந்திரியின் மனவேதனை இப்பொழுது ஆன்மிக ஈடுபாடுள்ள சாமி அப்பாத்துரையின் மனதிலும் பெரும் பாரமாகிவிடுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாட்டு இறைச்சியையும், மரவள்ளிக் கிழங்கையும் பிரதான உணவாக உட்கொள்கின்ற மக்கள் வாழுகின்ற பகுதி அது. அத்துடன் நேரமும் மாலைநேரம் ஆகிவிட்டது. இந்த சூழ்நிலையில் பூசைக்குரிய புனிதமான பொருட்களை சந்திரி குடியிருக்கும் அந்த வட்டாரப் பகுதியில் வாங்கிக் கொடுப்பதற்கு முயன்றும் சாமி அப்பாத்துரையால் அது முடியாது போகிறது. இந்த சூழ்நிலையில் நண்பன் சந்திரியின் மனவேதனையைப் போக்குவதற்கு சாமி அப்பாத்துரைக்கு எந்த மார்க்கமும் தோன்றவில்லை. மட்டுமன்றி அம்பாளின் மெய்யடியவர் ஒருவரின் வழிபாட்டு தேவையை நிறைவுசெய்ய முடியவில்லையே என்ற மனச் சஞ்சலமும் ஏக்கமும் சைவக் குருக்கள் வழியில் வந்த சாமி அப்பாத்துரைக்கு ஏற்படுகிறது. இது அவரை ஒரு நிம்மதியற்ற நிலைக்கு இட்டுச் செல்கிறது. ஆனாலும் மனிதசக்திக்கு உட்பட்ட வேறு மார்க்கம் எதுவும் அவருக்கு அப்பொழுது தோன்றவில்லை.

இந்த சூழ்நிலையில் சாமி அப்பாத்துரையும் அவரது நண்பர் தணிகாசலமும் பரஸ்பரம் தமக்கிடையே தமது வேதனை உணர்வுகளை மட்டுமே பகிர்ந்து கொள்ளமுடிந்ததே தவிர வேறு எதுவும் அவர்களால் செய்யமுடியவில்லை. நிறைவில் ஆண்டவன் மீது பாரத்தை போட்டுவிட்டு தமது இருப்பிடம் நோக்கி இருவரும் காரில் திரும்பிக் கொண்டிருக்கின்றனர். ஆனாலும் சாமி அப்பாத்துரையால் நிம்மதியாக பயணிக்க முடியவில்லை. ஏதாவது ஒரு வழியில் நண்பனது குறையைப் போக்க தனக்கு இறையருள் கிட்டாதா என்ற சிந்தனை மட்டுமே அவருக்குள் ஓடிக் கொண்டிருந்தது. இறைவனால் ஆக முடியாத காரியம் ஏதாவது உண்டா என்ற ஆதங்கமும் அவருக்குள் அலை மோதிக் கொண்டிருந்தது.

இவ்வாறான மனச் சஞ்சலத்துடன் இருவரும் பயணித்துக் கொண்டிருக்கின்றனர். ஏறத்தாழ 15 கிலோ மீற்றர் தூரம் தமது இருப்பிடம் நோக்கி திரும்பி வந்து கொண்டிருக்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பொழுது அங்கே இவர்கள் கற்பனையில் கூட எண்ணிப் பார்க்காத அதிசயம் அற்புதம் ஒன்று அங்கே நிகழ்கிறது. அந்த நாட்டின் வழமைக்கு மாறாக முற்றிலும் வெள்ளை உடை அணிந்த ஒரு வயது முதிர்ந்த அம்மையார் வீதி ஓரத்தில் தென் படுகின்றார். நிற உடைகள் அணிந்து உலாவருவதுதான் அந்த நாட்டு வழமை. இங்கே வெள்ளை உடை அணிந்து ஒரு வயது முதிர்ந்த அம்மையார் காணப்படுகிறார். அது மட்டுமல்ல அவருக்கு அருகில் ஒரு வாழைக்குலையும் காணப்படுகிறது. அதைவிட அதிசயம் அன்று பயன்படுத்தக் கூடிய வகையில் அந்த வாழைக்குலையின் முழுப் பழங்களும் பழுத்த பழங்களாகக் காணப்படுகின்றன. அந்த நாட்டில் முழுப் பழங்களும் பழுத்த நிலையில் யாரும் விற்பனைக்கு வாழைக்குலைகளை விற்ப தில்லை. இவற்றை எல்லாம் அவதானித்த இருவரும் அனைத்துமே புதிராக இருப்பதை உணருகின்றனர். அதிசயத் துடன் காரை நிறுத்துகின்றனர். காரில் இருந்து இறங்கி அந்த அம்மையாரை அணுகுகின்றனர்.

இப்பொழுது இவை எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தாற் போல இன்னொரு விடயமும் அங்கே அரங்கேறுகிறது. விற்பதற் காகவே இந்த வாழைக் குலையை வைத்திருக்கின்றேன் என அந்த வெள்ளை உடை அணிந்த வயது முதிர்ந்த அம்மையார் இவர்களிடம் கூறுகின்றார். என்ன விலை என்பதில் நண்பர்கள் இருவரும் அக்கறை காட்டவில்லை. ஆனாலும் அப்பொழுது அந்த நாட்டு நாணயமான ஒரு நயாரா கொடுத்து அதனைப் பெற்றுக்கொள்கின்றனர். இது சந்தை விலையை விட ஓரளவு குறைவான விலைதான்.

தன்னால் தனது உற்ற நண்பனுக்கு பூசை தொடர்பாக எதுவுமே செய்யமுடியவில்லையே என சஞ்சலப்பட்டுக் கொண்டிருந்தவர் சாமி அப்பாத்துரை. அவருக்கு தற்பொழுது முழுமையாகப் பழுத்த வாழைக்குலையே கையில் கிடைத்து விட்டது. இதனால் சாமி மகிழ்ச்சியினால் திக்குமுக்காடிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போகின்றார். தனது வேண்டுதலுக்கு இரங்கி கருணை புரிந்த ஆண்டவனது பேரருளை நினைத்து உள்ளம் உருகுகின்றார். இவ்வாறான உள்ளத்து உணர்வுகளுடனும் பக்தி மேலீட்டுடனும் தமக்கு வாழைக்குலையை வழங்கிய அந்த அம்மையாரை திருப்பிப் பார்க்கின்றார். என்ன ஆச்சரியம் அங்கே எங்கே தேடியும் வெள்ளை உடை அணிந்த கறுத்த நிறமுடைய வயது முதிர்ந்த அந்த அம்மையாரை காணவில்லை. அது மட்டுமன்றி இவர்களால் மீண்டும் அந்த அம்மையாரைப் பார்க்கவே முடிய வில்லை.

அம்பாளுடைய உற்சவ காலத்தில் வழிபாடு தொடர்பாக தனது நண்பனுடைய குறையை போக்க முடியவில்லையே என தனது உள்ளம் வேதனைப்பட்டதை சாமி அப்பாத்துரை எண்ணிப் பார்க்கின்றார். அந்த வேதனையைப் போக்குவதற்கு அம்பாளே மானிட வடிவில் வந்து நிகழ்த்திவிட்டுச் சென்ற திருவிளை யாடலையும் அவர் எண்ணிப் பார்க்கின்றார். அப்பொழுதுதான் வல்வை முத்துமாரி அம்மனது மகிமையை அவர் முழுமையாக உணர்ந்து கொள்கின்ற பேறு அவருக்கு கிடைக்கின்றது. அது மட்டுமன்றி அம்பாளது திருவிளையாடல் நிகழ்வினை நேரடியாக அனுபவிப்பதற்கு திருவருள் கைகூடியதையும் ஆனந்தப் பரவசத் துடன் மீட்டுப் பார்க்கின்றார். கிடைத்தற்கரிய அம்பாளின் திருவிளையாடல்களை அனுபவிப்பதற்கு திருவருள் கைகூடியது எல்லாம் தனது பூர்வ புண்ணிய பலனே என உள்ளம் உருகி நிறைவடைந்து கொண்டார்.

தற்பொழுது வாழைக்குலையுடன் தன்னிடம் திரும்பி வந்திருக்கும் நண்பர்களை தனது வீட்டில் வைத்தியர் சந்திரி மீண்டும் எதிர்கொள்கின்றார். அதுவும் முழுமையாகப் பழுத்த வாழைக்குலையுடன் வந்திருப்பதை எதிர்கொள்ளுகின்றார். நடைபெற்ற அற்புதத்தை நண்பர்கள் அதிகம் விளக்கிக் கூற வேண்டிய அவசியம் சந்திரிக்கு அங்கே ஏற்படவில்லை. தேவை ஏற்படுகின்ற பொழுது அம்பாள் திருவிளையாடல்களை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்த்துபவர் என்பதை சந்திரி அறியாதவர் அல்ல. இதனால் உடல் மெய்சிலிர்க்க மிகுந்த தன்னடக்கத்துடன் வல்வை முத்துமாரி அம்பாளின் கருணையையும் அற்புதத்தையும் வைத்தியர் சந்திரியும் உணர்ந்து கொள்கின்றார்.

இதற்கு முந்தைய உற்சவ காலம் வரை வல்வை மண்ணி லிருந்து அம்பாளை வழிபட்ட நிறைவினை வைத்தியர் சந்திரி எண்ணிப் பார்க்கின்றார். வல்வை மண்ணில் தான் இளைஞனாக வாழ்ந்து கொண்டிருக்கும் காலம்வரை அம்பாளுடைய உற்சவ கால நிகழ்வுகளை மீட்டுப் பார்க்கின்றார். அந்த காலகட்டங் களில் அம்பாளுக்கு தான் புரிந்த சரியைத் தொண்டுகள் எல்லாம் அவரது உள்ளத்தில் வெளிப்படுகின்றன. தன்னை அறியாது பிரதிபலன் பார்க்காது அம்பாளுக்கு தான் செய்த தொண்டு களுக்காக சிறியேன் ஆகிய தன்மீது அம்பாள் பேரருள் புரிந்திருக்கின்ற அதிசயத்தை எண்ணிப் பார்க்கின்றார். அவரை அறியாமலே அவரது கண்கள் குளமாகின்றன. அவரது உதடுகள் அம்பாள் நாமங்களை வெளிப்படுத்துகின்றன.

இறைவனது பேரருள் பற்றி திருவாசகத்தில் மணிவாசகப் பெருமான் வெளிப்படுத்துவது இங்கே நிஜ வாழ்வில் சந்திரிக்கும் இடம்பெறுகிறது.

இங்கே அம்பாள் நிகழ்த்திய அற்புத நிகழ்வை நேரடியாக எதிர்கொள்கின்ற பெரும்பேறு சாமி அப்பாத்துரை மற்றும் அவரது நண்பர் தணிகாசலத்திற்கும் கிடைக்கின்றது. இதே போன்று வைத்தியர் சந்திரிக்கு இன்னொரு வகையில் ஆனந்தம் ஏற்படுகிறது. வல்வை மக்கள் விரத காலங்களில் அம்பாளுக்கு அர்ச்சனை செய்யும் பொழுது அர்ச்சனை தட்டில் ஏனைய அர்ச்சனை திரவியங்களுடன் கப்பல் வாழைப்பழம் வைத்துதான் அர்ச்சனை செய்வது வழக்கம். இங்கே தனக்கு கிடைத்திருக்கும் வாழைக்குலையும் கப்பல் வாழைக்குலையாய் இருப்பதை எண்ணியபொழுது அம்பாளின் திருவிளையாடலை அவரால் முழுமையாக உணர்ந்துகொள்ள முடிந்தது. அம்பாளுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர்ச்சனை திரவியங்களான பூவோ பழமோ கூட இல்லை என ஏங்கி மனமுடைந்து நின்றவர் வைத்தியர் சந்திரி. தற்பொழுது தனது சொந்த மண்ணில் கிடைப்பதை விடவும் பதமான தரமான புதிதான முழு வாழைக்குலையே அவருக்கு கிடைத்துள்ளது.

தற்பொழுது வாழைக்குலையிலிருந்து பதமான பழங்களை தானே பறித்து மனம்போல படைத்து அம்பாளை வழிபடக் கூடிய முழு நிறைவுள்ள ஒரு அடியவராகின்ற பேறும் அவருக்கு கிடைத்துள்ளது. இவை எல்லாம் மெய்யடியவர் ஒருவருக்கும் அம்பாளுக்குமிடையேயுள்ள இருபக்க உறவாடலின் வெளிப் பாடுகளாகும். இவைபோன்ற இறை கைங்கரியங்களை வார்த்தைகளால் வெளிப்படுத்துவது கடினமானது. இவ்வாறான இறை கருணை நிறைந்த அனுபவங்களை அனுபவிக்கின்ற அடியவர்களே முழுமையாக உணர்ந்து கொள்ளமுடியும். அதேபோல இறை அருளினால் கிடைக்கின்ற பேரின்பத்தின் சுவையையும் நிறைவையும் உள்ளத்தால் அனுபவிக்கவும் முடியும்.

ஓம் அம்பாள் துணை

✧✧✧✧✧



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அருளாட்சி - 03

ஆழமான ஆன்மிக ஈடுபாடுள்ளவர்களுக்கு தினம் தினம் ஏராளம் அற்புதங்கள் இந்த பூவுலகில் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கின்றன. இவற்றை எல்லாம் அவர்கள் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வதில்லை. இவ்வாறான அற்புதமான தருணங்கள் பொதுவாக மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ள முடியாதவை. உண்மையில் அவை மற்றவர்களுடன் பகிர்ந்த கொள்ள கூடாதவை என்றும் கூறலாம். ஆனாலும் அம்பாளுடைய கருணையுடன் மிக மிக அரிதாக இடம்பெறுகின்ற அதேபோல மிக அரிதாக பகிர்ந்துகொள்ளப்படுகின்ற அவ்வாறான ஒரு அற்புத நிகழ்வை இங்கே அம்பாள் அடியார்களுடன் அம்பாள் துணையுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம். இதனை நாம் அறிந்துகொள்வதற்கு எமக்குக் கிடைத்த சந்தர்ப்பமும் ஒரு வகையில் எமக்குக் கிடைத்த பேறு என்றே கூறவேண்டும்.

வருடாவருடம் சித்திரை பௌர்ணமியில் வல்வையில் இடம் பெறுகின்ற அம்பாளுடைய இந்திரவிழாவில் கலந்துகொள்ள வருகை தருகின்ற பல்லாயிரக் கணக்கான அடியவர்கள் அதனை ஒரு களியாட்ட விழாவாக உணர்வது இயல்பானதே. அதே நேரம் அம்பாள் தாய்க்கு தாயாக இருந்து தனது மெய்யடியார்களுக்கு கருணை மழை பொழிகின்ற கருணைத் தெய்வமாகவும் விளங்கிக் கொண்டிருக்கிறார் என்பது பற்றி களியாட்ட விழாவை காண வருகின்ற பலர் அறிந்திருக்க மாட்டார்கள் என்பதும் இயல்பானதே. அம்பாள் தாய்க்குத் தாயாக இருந்து கருணை காட்டி வல்வை மக்களை காத்தருளுகின்ற மகிமையை பெரும்பாலும் வல்வை மண்ணில் பிறந்து வளர்ந்து வாழ்ந்து வருகின்ற அடியவர்களே அனுபவத்தால் உணர்ந்தவர்களாக உள்ளனர். அதிலும் நாளும்பொழுதும் அம்பாளை நினைத்து உள்ளம் உருகி தொண்டுகள் செய்து அதில் நிறைவடைந்து வருகின்ற அடியவர்கள் உண்மையில் மேன்மைக்கும் போற்றுதலுக்குமுரியவர்கள். இவ்வாறான உண்மையான அடியவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவருக்கு அம்பாள் எவ்வாறு தாயினும் மேலாக கருணை செய்து வருகின்றார் என்பதனை இங்கே அனைத்து அடியார் களுடனும் பகிர்ந்துகொள்கின்றோம்.

தாய் மண்ணில் சொந்த கிராமத்தில் உள்ள ஆலய உற்சவத்தில் நேரடியாகப் பங்குபற்றி ஆலய தரிசனம் செய்வ தென்பது ஒவ்வொருவருக்கும் நிறைவைத் தருகின்ற விடய மாகும். அதிலும் உற்சவ காலச் செயற்பாடுகளில் ஈடுபாடு கொண்டு தொண்டுகள் செய்து ஆலய தரிசனத்தில் ஈடுபடுவ தென்பது மிகவும் உச்சமான நிறைவைத் தருவதாக அமைந் திருக்கும். தனது இளமைக் காலத்தில் இவ்வாறு வல்வை முத்துமாரி அம்மனது வருடாந்த உற்சவ காலச் செயற்பாடுகள் உட்பட அனைத்து செயற்பாடுகளிலும் தொண்டுகள் புரிந்து நிறைவடைந்தவர் தான் வைத்தியர் க. சந்திரலிங்கம்.

வல்வை முத்துமாரி அம்மனது உற்சவ காலத்தில் நேரடி யாகவும் மறைமுகமாகவும் தொண்டுகள் செய்து நிறைவு பெறுகின்ற அடியார்கள் ஏராளம். இயல்பாக வல்வை மண்ணில் வாழ்கின்ற காலத்திலேயே அம்பாளுக்கு தொண்டுகள் செய்து நிறைவடைவதை தமது பாக்கியமாக கருதுபவர்கள் வல்வை மக்கள். தனது இளமைக் காலத்தில் இவ்வாறான உணர்வுகளு டன் வல்வை மண்ணில் அம்பாளுக்கு தொண்டுகள் செய்துவந்த ஒரு மெய்யடியவர் தான் வைத்தியர் க. சந்திரலிங்கமும். அம்பாளது உற்சவ காலம் மற்றும் விஷேட தினங்களில் முன் ஆயத்தங்கள் செய்வது, உற்சவ நிகழ்வுகளில் மட்டுமன்றி உற்சவம் நிறைவடைந்த பின்பு மீள் ஒழுங்குகள் செய்தல் போன்ற செயற்பாடுகள் எல்லாம் எவ்வளவு அவசியமானவை என்பதை நாம் வெளிப்படுத்த வேண்டிய அவசியமில்லை. பெரும்பாலும் இவ்வாறான தொண்டுகள் செய்வதில்தான் வைத்தியர் சந்திரியும் ஈடுபாடுள்ளவராக இருந்துவந்துள்ளார். நாம் சிறுவர் களாக இருந்த 1960, 1970ஆம் ஆண்டு தசாப்த காலங்களில் வ.வ.இராமசாமிப்பிள்ளை அவர்கள் அம்பாள் ஆலயத்தின் மணியகாரராக பயபக்தியுடன் அதேநேரம் அதற்குரிய ஆளுமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுடனும் செயற்பட்டதை நாம் பார்த்திருக்கின்றோம். இந்த காலகட்டத்தில் திரு. இராஜேந்திரம், திரு. சாம்பசிவம், மற்றும் அரி மாஸ்ரர் போன்ற பலர் உற்சவ கால கைங்கரியங்களை நிறைவேற்றுவதில் பின்புலமாக இருந்து தொண்டுகள் புரிந்து வந்ததை பலரும் அவதானித்திருக்கக் கூடும். இதில் சாம்பசிவம் மணியகாரருக்கு உதவியாக அதேநேரம் மணியகாரர் போல கூடிய ஈடுபாட்டுடன் செயற்படுவதையும் நாம் பார்த்திருக் கின்றோம். இவர்களைப் போன்று ஆலயத் திருத்தொண்டுகள் செய்துவந்த எமது மூத்தவர்கள் ஏராளமானவர்கள் இன்று அமரர்களாகிவிட்டனர். ஆனாலும் எமக்கு மூத்தவர்களாக இருந்து இவர்கள் அம்பாளுக்கு செய்துவந்த தொண்டுகளை நாம் அடிக்கடி மீட்டுப் பார்ப்பதுண்டு.

இவர்கள் செயற்பட்ட இந்த காலப்பகுதியில்தான் வைத்தியர் க. சந்திரலிங்கமும் **1960**ஆம் ஆண்டு தசாப்த காலப்பகுதி முழுவதும் இவர்களுடன் இணைந்து அம்பாளுக்கு எல்லா வகைகளிலும் தொண்டுகள் புரிந்து நிறைவுபெற்று வந்துள்ளார். பொதுவாக ஆலயத்திலிருந்து கடைசியாக வெளியேறுகின்றவர் கள் வரிசையில் வைத்தியர் சந்திரியும் ஒருவராக இருந்து ஆலயத் திருத்தொண்டுகள் புரிந்து வந்துள்ளார்.

எமது மூதாதையர்கள் வாயிலாக அம்பாளது கருணையை யும் தாய்க்கு தாயாக இருந்து அம்பாள் வல்வை மக்களை காத்தருளுகின்ற அருமை பெருமைகளையும் வைத்தியர் சந்திரி மிக நன்றாகவே உள்வாங்கி வந்துள்ளார். அது மட்டுமல்ல இவற்றை எல்லாம் அவ்வப்பொழுது தனது வாழ்வியல் அனுபவத்தால் உணருகின்ற சந்தர்ப்பங்களும் தாய் மண்ணில் வாழும் காலத்திலேயே அவருக்கு நிறையவே ஏற்பட்டுள்ளன. இவ்வாறான வாழ்வியல் அனுபவங்கள் இருந்ததினால்தான் சந்திரி நைஜீரியா நாட்டில் வாழ்ந்து கொண்டிருந்தாலும் நாளும்பொழுதும் வல்வை முத்துமாரி அம்மனை மனதில் நிறுத்தி அந்த அம்பாளது நினைவுகளுடன் அவர் வாழ்ந்து வந்துள்ளார். மெய்யடியவரான வைத்தியர் சந்திரியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான வாழ்க்கைப் பயணத்தை போலவே ஆயிரக்கணக் கான புலம்பெயர் தமிழ் உறவுகளின் வாழ்க்கைப் பயணமும் இன்று சென்று கொண்டிருப்பதை நாம் பார்க்கின்றோம். புலம் பெயர்ந்து வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் இதனை மிக நன்றாக தமது வாழ்வியலால் உணர்ந்து கொண்டிருக்கின்றனர்.

வைத்தியர் சந்திரி நைஜீரியா நாட்டில் வாழ்ந்து கொண் டிருக்கும் பொழுதுதான் 1981ஆம் ஆண்டு வல்வை முத்துமாரி அம்மனது வருடாந்த மகோற்சவம் ஆரம்பமாகியது. அந்த உற்சவம் ஆரம்பமாகிய அன்றைய தினம்தான் வைத்தியர் சந்திரியின் மனக்குறையை போக்குவதற்காக அம்பாள் நிகழ்த் திய அற்புதத்தை கடந்த தொடரில் வெளிப்படுத்தியிருந்தோம். இந்த அற்புத நிகழ்வுகள் இடம்பெற்று சில மாதங்களின் பின்பு வைத்தியர் சந்திரலிங்கத்திற்கு ஒரு பெரிய குழப்பம் ஏற்படுகிறது. அதுவும் அவரது எதிர்கால வாழ்க்கைப் பாதையை தீர்மானிப்பது தொடர்பான குழப்பமாக அது அமைகிறது. அவர் ஆபிரிக்காக் கண்டத்திலுள்ள நைஜீரியா நாட்டில் தனது வேலையை நீடிப்பது தொடர்பாக தீர்மானிக்க வேண்டிய தருணம் அது. அதுவும் தனது முடிவை எழுத்தில் அறிவிக்க வேண்டிய கட்டாயமும் அவருக்கு இருந்தது.

வாழ்வியல் சிரமங்கள் நிறைந்த நைஜீரியா நாட்டில் தனது துணைவியார் சகிதம் தொடர்ந்து தான் அங்கே தொழில் புரிந்து கொண்டிருப்பதில் எதிர்நோக்கும் நடைமுறைப் பிரச்சனைகளை வைத்தியர் சந்திரி ஒருபுறம் சிந்திக்கின்றார். இந்த நிலையில் தொடர்ந்தும் நைஜீரியா நாட்டில் தொழில் புரிவதற்கான ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டு கையொப்பமிட்டால் கட்டாயம் குறிப்பிட்ட காலங்கள் அங்கேயே வேலை செய்யவேண்டும். மறுபுறம் அந்த நாட்டில் வேலையை தொடர விருப்பமில்லை எனவும் கடிதம் வழங்கலாம். அவ்வாறு வழங்கினால் வேலையை தொடரமுடியாது மட்டுமன்றி தாய்நாட்டிற்கு திரும்பி செல்ல வேண்டும். தாய் நாட்டிற்கு திரும்பி வருவதற்கும் அவரது மனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடவில்லை. அதேநேரம் ஐரோப்பிய நாடொன்றுக்கு சென்று அங்கே தொழில் புரிவதில் அவருக்கு உள்ளூர நாட்டம் ஏற்படு கிறது. ஆனால் அது சாத்தியமாகுமா என்பது கேள்விக்குறி. ஒருவேளை அது சாத்தியமானாலும் அது எப்பொழுது சாத்திய மாகும் என்பதெல்லாம் விடை தெரியாத வினாக்களாகும்.

நைஜீரியாவில் வேலை செய்வது, தாய் நாட்டிற்கு திரும்பிச் செல்வது, ஐரோப்பிய நாட்டிற்கு செல்வது என எந்த பக்கத்தில் நோக்கும் பொழுதும் வைத்தியர் சந்திரி பிரச்சனைகளைத்தான் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. இதனால்தான் சந்திரி உறுதி யாகவும் சரியாகவும் எந்த தீர்மானத்தையும் எடுக்க முடியாது பெரிய குழப்பங்களுக்கு உள்ளானார். வைத்தியர் சந்திரியைப் போலவே இவ்வாறான ஏராளம் குழப்பங்களையும் சங்கடங் களையும் தாண்டி வந்தவர்கள்தான் இலட்சக்கணக்கான எமது புலம்பெயர் உறவுகள்.

ஆனால் இங்கே வைத்தியர் சந்திரலிங்கத்திற்கு இவ்வாறான இக்கட்டான சூழலில் அவருக்கு தீர்வு கிடைத்த விதம்தான் சராசரி மனிதர்களுக்கு இடம்பெற முடியாத ஒரு அற்புதமான அபூர்வமான நிகழ்வாகும். இது ஆன்மிக ஈடுபாடு உள்ளவர்கள் மட்டுமே உள்வாங்கி உணர்ந்துகொள்ளக் கூடியது. இருந்தபோதும் அந்த நிகழ்வை இங்கே அம்பாள் கருணையுடன் அனைவருக்கும் வெளிப்படுத்துகின்றோம்.

இக்கட்டான இந்த சூழ்நிலைக்குள்ளிருந்து விடுபட ஐரோப்பிய நாடொன்றுக்கு செல்வதற்கு வைத்தியர் சந்திரியின் உள்ளத்தில் ஒரு விருப்பம் ஏற்படுகிறது. அதேநேரம் ஐரோப்பிய நாடொன்றுக்கு தன்னால் செல்லமுடியுமா? அது சாத்திய மாகுமா என அவரது உள்ளம் சங்கடப்பட்டுக் கொண்டிருந்த தருணம் அது. அவர் நைஜீரியா நாட்டில் வேலையை தொடர விரும்பவில்லை. வேலையை கைவிட்டு தாய் மண்ணுக்கு திரும்பவும் விரும்பவில்லை. இதனால் நைஜீரியா நாட்டிலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதாவது ஒரு ஐரோப்பிய நாட்டிற்கு தனது துணைவியுடன் செல்வதே உசிதம் என அவர் இப்பொழுது தானாக உள்ளத் தால் முடிவு எடுக்கின்றார். ஆனால் அது சாத்தியமாவதற்கான எந்தவொரு வழியும் அவருக்கு அப்பொழுது வெளிப்படவில்லை.

அப்பொழுதுதான் அந்த அதிசயம், அற்புதம் அங்கே அரங்கேறுகிறது. அது ஒரு தீபாவளி வாழ்த்து மடலில் இடம் பெற்ற அம்மன் படம். அந்த படத்தைத் தான் வல்வை முத்துமாரி அம்மனாக நினைத்து வைத்தியர் சந்திரி நைஜீரியாவில் வழிபட்டுக் கொண்டிருந்த காலகட்டம். அப்பொழுதுதான் அந்த அதிசயம் அற்புதம் அரங்கேறுகிறது. அவர் வழிபட்டுக் கொண் டிருக்கின்ற அவருக்கு முன்னால் உள்ள அந்த அம்மன் படத்திலிருந்துதான் அது நிகழ்கிறது. இறைவன் தூணிலுமிருப் பான் துரும்பிலுமிருப்பான் என்று நாம் படித்தது, பின் நாட்களில் நாம் சினிமாத் திரைகளில் பார்த்தது, தற்பொழுது சந்திரி என்ற அடியவருக்கு நிஜ வாழ்வில் நடைபெறுகின்றது. தற்பொழுது அம்பாள் மெய்யடியவரான வைத்தியர் சந்திரியின் கண் எதிரிலே அது நிஜமான நிகழ்வாக வெளிப்படுகிறது.

**படத்திலுள்ள அம்பாளின் இரண்டு கண்களும் ஒருமுறை தெளிவாக விழித்துக் கொள் கின்றன. இவ்வாறு விழித்துக் கொண்ட இரண்டு கண்களும் மீண்டும் வழமையான நிலைக்கு மூடிக்கொள்கின்றன.**

வானத்தில் மின்னல் தெளிவாக வெளிப்பட்டு மீண்டும் மறைவதை நாம் எல்லோரும் பார்த்திருக்கின்றோம். இதே போன்றுதான் அம்பாளின் இரண்டு விழிகளும் தெளிவாகத் திறக்கின்றன. மீண்டும் வழமைநிலைக்கு மாறுகின்றன. இது வைத்தியர் சந்திரலிங்கம் நேருக்கு நேர் கண்ட நிகழ்வு. விழிப்பு நிலையில் தனது இரண்டு கண்களாலும் கண்ட நிகழ்வு. தனது இந்த மானிடப் பிறப்பின் அர்த்தத்தை வைத்தியர் சந்திரி முழுமையாக உணர்ந்து கொண்ட தருணம். இன்றுவரை அந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சாமி அப்பாத்துரை



வைத்தியர் சந்திரலிங்கம் துணைவியாருடன்





அம்பாளின் தீர்த்த உற்சவத்தில் இடம்பெறும் கும்பக் கரகங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



துணைவியார் சகிதம் சிவகுமார்



நேர்த்திச் செயற்பாட்டில் நந்தினி



கனடா முத்துமாரியம்மன் ஆலய உற்சவகால நிகழ்வுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அற்புதமான தருணத்தை தனது ஆழ்மனதில் சுமந்தவாறே அவர் வாழ்ந்து கொண்டிருக்கின்றார். அது மட்டுமல்ல இன்று வைத்தியர் சந்திரி பிரித்தானியாவில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற வாழ்வியலுக்கான ஊற்றும் அங்கிருந்துதான் ஆரம்பமாகின்றது.

வைத்தியர் சந்திரி அப்பொழுது நைஜீரியா நாட்டில் வேலையைத் தொடரவிரும்பவில்லை. தாய் மண்ணுக்கு திரும்பவும் விரும்பவில்லை. இதனால் ஏதாவது ஒரு ஐரோப்பிய நாட்டிற்கு செல்வதே உசிதம் என உள்ளத்தால் முடிவு எடுக்கின்றார். ஆனால் அது சாத்தியமாவதற்குரிய எந்த ஒரு வழியும் அவரிடம் இருக்கவில்லை. சாத்தியமாவதற்குரிய எந்த ஒரு வழியும் அவருக்கு தெரியவுமில்லை. அப்பொழுதுதான் யாருக்கும் கிடைக்காத அந்த அற்புதத்தை அதிசயத்தை அம்பாள் சந்திரிக்கு ஒரு நொடிப்பொழுதில் நிகழ்த்திக் காட்டுகின்றாள். அது மட்டுமல்ல அம்பாள் தனது அருள் விழிகளால் நிகழ்த்திக் காட்டிய அந்த அற்புதத்திற்கான விளைவும் அன்றைய தினமே வெளிப்படுகிறது. பொதுவாக நாம் ஆண்டவனின் கடைக்கண் பார்வை கிடைத்தது என்று கூறுவதுதான் வழக்கம். இங்கே வல்வை முத்துமாரி அம்பாள் வைத்தியர் சந்திரிக்கு தனது இரண்டு கண்களையும் நேருக்கு நேராகத் திறந்து மிகத் தெளிவாக தனது திருவருளை புரிந்துள்ளார். இதனால் அதனுடைய விளைவும் தெளிவாகவும் உச்சமானதாகவும் தானே இருக்கமுடியும்.

இருண்ட கண்டம் என அந் நாட்களில் அழைக்கப்பட்ட நைஜீரிய நாட்டிற்கு வெளிநாட்டு கடிதங்கள் நீண்ட இடைவெளிக்கு ஒருமுறை தான் கிடைப்பது வழக்கம். ஆனால் அம்பாள் தனது அருள்காட்சியை வெளிப்படுத்திய அன்றைய தினமே வைத்தியர் சந்திரிக்கு பிரித்தானிய நாட்டிலிருந்து ஒரு கடிதம் கிடைக்கிறது. இவருடைய உற்ற நண்பர் வைத்தியர் பாலகுமார் அனுப்பிய கடிதம் அது. அதில் **“நைஜீரியா நாட்டிலிருந்து**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தை வீணாக்காதே. பிரித்தானியாவுக்கு வருவதற்கு ஆயத்தம் செய். நான் எல்லா ஏற்பாடுகளும் செய்கின் றேன்."

வைத்தியர் சந்திரி பிரித்தானியாவுக்கு செல்வதற்காக தெளிவான அழைப்புக் கடிதமாக அது அமைந்திருந்தது. வைத்தியரின் உள்ளத்தில் ஊற்றெடுத்த விருப்பத்தை அம்பாள் தனது இரு விழிகளாலும் வெளிப்படுத்தி எவ்வாறு அதிசயம் புரிந்தாரோ அதேபோன்று வைத்தியர் சந்திரி விரும்பிய ஐரோப்பிய நாடான பிரித்தானியா செல்வதற்கும் மிகத்தெளிவான அழைப்பு இப்பொழுது கிடைத்துவிட்டது. அம்பாள் கருணை யினால் அதே ஆண்டு (1981) மார்கழி மாதம் 31ஆம் திகதி வைத்தியர் சந்திரி பிரித்தானியாவுக்கு குடும்ப சகிதம் பயண மாகின்றார். சாமி அப்பாத்துரை அவர்களும் விமான நிலையம் வரை சென்று அவரை பிரித்தானியாவுக்கு வழி அனுப்பி வைக்கிறார். இந்த நிகழ்வுகள் இடம்பெற்று நான்கு தசாப்தங்கள் நிறைவு பெற்றுவிட்டன. இன்றும் வைத்தியர் சந்திரலிங்கம் தனது வைத்திய தொழிலை பிரித்தானியாவில் தொடர்ந்து கொண் டிருக்கிறார். குடும்ப வாழ்விலும் அம்பாளின் அருளினால் பிரித்தானியாவில் நிறைவான வாழ்க்கையை வாழ்ந்து கொண் டிருக்கின்றார்.

வைத்தியர் சந்திரி குடும்பம் நீண்ட இடைவெளிக்கு பின்பு 2015ஆம் ஆண்டு வல்வைக்கு திரும்பி வருகைதந்துள்ளனர். குறுகிய விடுமுறையில் வருகைதந்த பொழுதும் வைத்தியர் சந்திரி நெடியகாட்டு பிள்ளையார் ஆலயத்திலிருந்து அம்பா ளுக்கு கரகம் எடுத்துள்ளார். அது அவரது நீண்ட நாள் நேர்த்தியாகவும் இருந்துள்ளது. இதுபோன்று அவரது துணைவியார் ரஞ்சிதா அவர்கள் பாற்செம்பு எடுத்து இருவரும் தமது நேர்த்திகளை நிறைவேற்றியுள்ளனர். தற்பொழுது பிரித்தானியாவில் தாம் வாழும் பகுதியிலுள்ள ஸ்ரீ மகாலஷ்மி ஆலயத்தில் ஆலயத் திருப்பணி, ஆலயத் திருத்தொண்டு என்பவற்றை மிகுந்த ஆர்வத்துடனும் நிறைவுடனும் செய்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகின்றனர். அடியேன் இந்த கட்டுரையை எழுதிக்கொண்டிருக்கும் பொழுதும் அவர் வைத்தியராக தொழிலைத் தொடர்ந்த வண்ணம் இருக்கிறார். ஆனாலும் வெகுவிரைவில் தான் ஓய்வு பெற உள்ளதையும் பகிர்ந்து கொண்டார்.

ஓம் அம்பாள் துணை

✧✧✧✧✧

## சமயமும் வாழ்வியலும்

ஊறணியில் தீர்த்தமாடிய பின்பு அம்பாள் உட்பட ஒவ்வொரு ஆலய மூர்த்திகளும் நெடியகாட்டுப் பிள்ளையார் ஆலயத்திற்கு வருகை தருவது பற்றி நாம் எல்லோரும் பொதுவாக அறிந்திருக்கின்றோம். மேலோட்டமாகப் பார்க்கும்பொழுது இது ஒரு சாதாரண வழமைபோல இருந்தாலும் இதற்குள் ஆழமான வாழ்வியல் விடயங்களும் அடங்கியிருப்பதையும் பார்க்கமுடியும்.

சாமி ஊறணியில் தீர்த்தமாடிய பின்பு முதலில் நெடியகாட்டுப் பிள்ளையார் வாசலை வந்தடைவது வழக்கம். அங்கே சாமிக்கு சாத்துப்படி வைத்து சமயச் சடங்குகள் இடம்பெறும். ஆனால் இவை எல்லாம் இடம் பெறுவதற்கு முன்பு இன்னொரு சமயச் சடங்கும் சூட்சுமமாக இடம்பெறும். அதாவது தீர்த்தமாடிய பின் சாமி பிள்ளையார் ஆலய வாசலை வந்தடைந்தவுடன் இது இடம்பெறும். பிள்ளையார் ஆலயத்திற்குள் பிரதம குருக்கள் ஆயத்த நிலையில் இருப்பார். சாமி வந்தவுடன் அங்கே மூலஸ்தானத்தில் பஞ்சாராத்தி தீபாராதனை மேற்கொள்வார். இந்த தீபாராதனை அந்த இரண்டு தெய்வங்களுக்குமான தீபாராதனையாக அமையும். இதனை பொதுவாக பலரும் அறிந்திருக்க வாய்ப்பில்லை.

இந்தச் செயற்பாட்டை இன்னும் வெளிப்படையாகக் கூறுவதானால் வீட்டிற்கு வருபவர்களை வீட்டிலுள்ளவர் எதிர்கொள்ளுகின்ற முறைக்கு இது ஒப்பானது. வீட்டிலுள்ளவர் கைகூப்பி வணங்கி வந்தவரை வரவேற்பது போலவும் வந்தவர் அதை ஏற்றுக்கொள்வது போலவும் இடம்பெறுவதுதான் இந்தத் தீபாராதனை தொடர்பான செயற்பாடு. இதனைப் பொதுவாக அந்த இரண்டு குருமாரும் உணர்ந்து செயற்படுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருளாட்சி - 04

வல்வை மக்களின் உலகியல் வாழ்வினையும், சிறப்பினையும் இன்று உலகத்தவர் போற்றுகின்றனர். இதேபோன்று ஆன்மிக வாழ்விலும் வல்வை மக்கள் எல்லா வகையிலும் சிறப்பும் நிறைவும் பெற்றவர்களாக காலம் காலமாக வாழ்ந்து வருகின்றனர். வல்வையில் மட்டுமல்ல வல்வையை சூழ உள்ள எல்லாப் பகுதிகளிலும் ஆலயங்கள் அமைந்திருப்பது வல்வைக்கு சிறப்பை சேர்ப்பதாக அமைந்திருக்கிறது. வல்வையை குறிப்பாக எடுத்து நோக்கும் பொழுது வல்வை முத்துமாரி அம்மனை நடுநாயகமாகக் கொண்டு எல்லா திசைகளிலும் மட்டுமல்ல எல்லா இடங்களிலும் அமைந்திருக்கின்ற ஆலயங்கள் தான் வல்வை மண்ணுக்கு புனிதத்தையும் ஆன்மிக உயர்வினையும் வழங்கிக் கொண்டிருக்கின்றன. இதனால்தான் வீரமும் சுதந்திர உணர்வும் நிறைந்த அதே வல்வை மண்ணில் ஆன்மிகமும் அறமும் மேலோங்கி இருப்பதை காணமுடிகிறது.

## உலகியலும் ஆன்மிகமும்

காலம் காலமாக வல்வை மண்ணுக்கு இன்னொரு தனித்துவமும் இருந்துவருகிறது. வல்வையின் உலகியல் வாழ்வும், ஆன்மிக வாழ்வும் ஓரிடத்தில் ஒற்றுமைப்பட்டிருப்பதையும் எம்மால் உணரமுடிகிறது. வரலாற்று காலம் தொடக்கம் கடல் வாணிபம், கடல் பயணம் மற்றும் கடல் சார் தொழில்களால் கட்டியெழுப்பப்பட்ட பொருளாதாரம்தான் வல்வை மக்களை வாழ வைத்துக் கொண்டிருக்கிறது. அதேநேரம் ஆபத்துக்களும் ஏக்கங்களும் நிறைந்த இந்த தொழில்களை எமது மூதாதையர்கள் துணிவுடனும், ஆன்மிக நம்பிக்கையுடனும் தான் இன்று வரை மேற்கொண்டு வருகின்றனர்.

இதற்குள் ஒரு வாழ்வியல் உண்மை இருக்கிறது. இதனை வல்வை கடலோடிகள் மிக நன்றாகவே உணர்ந்து வைத்துள்ளனர். நடுக்கடலில் புயல் ஏற்பட்டு வல்வை படகோட்டிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆபத்தில் சிக்கித் தவிக்கின்றனர். அப்பொழுது அம்பாள் புயலைத் தணித்து படகோட்டிகளை காப்பாற்றுவதைப் பார்க்கின்றோம். இத்தகைய வரலாற்றுப் பின்னணி வல்வை கடலோடிகளுக்கு நம்பிக்கையை கொடுத்து வருகிறது என்பது முதலாவது விடயம். அதேநேரம் அம்பாள் தம்மை காத்தருளு வது எவ்வளவு வாழ்வியல் உண்மை என்பதை வல்வை கடலோடிகள் தமது வாழ்வியலால் மிக நன்றாகவே உணர்ந்து வைத்துள்ளனர். இதனால் அவர்கள் பொருள் தேடி வாழ்வியலை நடாத்துகின்ற நேரங்கள், காலங்களில் கூட, அம்பாளது நினைவு டனும், அம்பாளது கருணையுடனும்தான் வாழ்ந்துவந்துள்ளனர் இன்றும் வாழ்ந்து கொண்டுள்ளனர்.

இந்த உண்மைகளையும் உணர்வுகளையும் சம்பந்தப்பட்ட வர்கள் ஏனையவர்களுடன் அதிகம் பகிர்ந்துகொள்வதில்லை. மாறாக அவற்றை மானசீகமாக அம்பாளுடன்தான் பகிர்ந்து கொள்வார்கள். அதேநேரம் இவற்றை எல்லாம் வல்வை முத்துமாரி அம்மனது வருடாந்த மகோற்சவ காலத்தில் தமது வழிபாடுகளினூடாகவும் நேர்த்தி செயற்பாடுகளினூடாகவும் வெளிப்படுத்தி நிறைவுபெறுவதை நாம் அவதானிக்க முடியும். இந்த உண்மைகளின் தார்ப்பரியங்களை பலர் அறியாது இருக்கக் கூடும். அவ்வாறு அறிந்திருப்பவர் கூட அதற்குள் ஆழப் புதைந்திருக்கும் உயிரோட்டமான பக்தியின் வெளிப்பாட்டை அறியாதிருக்கக் கூடும். இந்த உண்மைகளின் தார்ப்பரியங்களை வெளிப்படுத்தக்கூடிய அந்த வழிபாட்டு முறைகளை அம்பாள் அடியவர்களுடன் பகிர்ந்து கொள்கின்றோம்.

## கரகம்

அம்பாளது உற்சவ காலத்தில் நேர்த்திக்காக கரகம் எடுப்பது, அலகு குத்தி கரகம் எடுப்பது, தீ மிதித்தல், பெண்கள் பாற்குடம் எடுத்தல், அலகு குத்தி பாற்குடம் எடுத்தல், அடி அழித்தல் போன்றவை எல்லாம் வழமையாக இடம்பெற்று வருகின்ற நாம் அறிந்த செயற்பாடுகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றில் அடியவர்களால் அம்பாளுக்கு எடுக்கப்படும் கரகங்கள் உற்றுநோக்கக் கூடிய பல்வேறு சிறப்புக்களைக் கொண்டவையாக அமைந்துள்ளன. எமது மண்ணில் உள்ள மிகவும் பரிட்சயமுள்ளவர்களால் பிரதி வருடமும் கட்டுக் கரகங் களாக இவை உருவாக்கப்படுகின்றன. இவை பெரும்பாலும் தென்னம்பாளையுடன் கூடிய இயற்கையான அலங்கார வேலைப்பாடுகள் கொண்டவையாக அமைந்திருக்கும். கரகச் செயற்பாடு இடம்பெறும்பொழுது உடுக்குடன் கூடிய அம்பாள் தொடர்பான பாடல்களைப் பாடி, அனைவரையும் பக்தி நிலைக்கு இட்டுச்செல்லுதல் போன்ற வல்வை மண்ணுக்கே உரிய தனித்துவமான பல செயற்பாடுகளும் இவற்றில் இடம்பெற்று வருகின்றன.

எமது மண் இயல்பாக இருக்கும் காலம் வரை அம்பாளு டைய உற்சவ காலங்களில் கரகச் செயற்பாடுகள் மிக முக்கிய மான நேர்த்திச் செயற்பாடாக இடம்பெற்று வந்தது. அதிலும் மகோற்சவத்தின் பிற்பகுதியில் வல்வை வீதியெங்கும் கரகச் செயற்பாடுகள் நிறைந்திருப்பது பக்திப் பரவசம் நிறைந்த கண்கொள்ளாக் காட்சியாக அமைந்திருக்கும். ஒவ்வொரு பகுதியிலும் வாழும் மக்கள் தங்கள் தங்கள் குறிச்சியிலுள்ள ஆலயங்களிலிருந்து அம்பாளுடைய ஆலயத்திற்கு கரகம், கரகத்துடன் கூடிய பாற்செம்பு ஆகிய செயற்பாடுகளை மேற் கொள்வார்கள். இதேபோன்று நெடியகாட்டுப் பிள்ளையார் ஆலயத்திலிருந்தும் இவ்வாறு கரகங்கள் எடுப்பது வழமை. இவற்றை விட தொண்டைமானாறு வீரமாகாளி அம்மன் ஆலயத் திற்குச் சென்று அங்கிருந்து வல்வை முத்துமாரி அம்மன் ஆலயத்திற்கு பலர் வருடாவருடம் கரகச் செயற்பாட்டை தொடர்ந்து மேற்கொண்டு வந்துள்ளதையும் நாம் பார்த்துள் ளோம்.

உடுக்குடன் அம்பாள் தொடர்பான பாடல்களைப் பாடி எடுக்கப்படும் இந்தக் கரகங்கள் மிகுந்த பக்திப் பரவசத்தை ஏற்படுத்துவதை நாம் எல்லோரும் பார்த்திருக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான கரகச் செயற்பாடுகள் எல்லா வகையிலும் இறை ஈடுபாடு உள்ளவையாகவே அமைந்திருக்கும். இதனால் எல்லாத்தரத்து மக்களும் இவ்வாறான கரகச் செயற்பாடுகளை மிகுந்த பக்தியுடனும் அக்கறையுடனும் உற்றுநோக்குவர். அதேபோன்று கரகச் செயற்பாட்டை மேற்கொள்பவர்களும் தம்மை அறியாது பக்தி நிலைக்கு இட்டுச் செல்லப்படுவர்.

## கும்பக் கரகம்

இந்த கும்பக் கரகச் செயற்பாட்டிற்குள் உள்ளார்ந்த ஒரு புதுமை மறைந்திருக்கிறது. இது ஒரு நாளுடன் நிறைவடைந்து விடும் கரகச் செயற்பாடு அல்ல. இந்த கரகச் செயற்பாட்டிற்கான ஆரம்பம் அம்பாளுடைய பூங்காவன உற்சவம் ஆரம்பிக்கின்ற நாள் ஆரம்பித்துவிடும். ஆனால் கரகம் எடுக்கும் செயற்பாடு அம்பாள் உற்சவத்தின் நிறைவு நாளான தீர்த்த உற்சவத்தின் பொழுதுதான் நடைபெறும். அது மட்டுமன்றி தீர்த்த உற்சவ தினத்தின் நிறைவில் அம்பாள் ஆலயத்திற்குள் சென்று தனது இருப்பிடமான எழுந்தருளி மண்டபத்திற்கு செல்கின்ற தருணத்தையும் தொடர்புபடுத்தியே இந்த கரகச் செயற்பாடும் இடம் பெற்று வருகிறது. இந்த கரகச் செயற்பாடு என்பது வல்வை மண்ணுக்கே உள்ள தனித்துவத்தின் வெளிப்பாடாக இருந்து வருகிறது.

வல்வை மண்ணின் தனித்துவத்தை வெளிப்படுத்தி வருகின்ற இந்த கரகச் செயற்பாட்டை மேற்கொள்பவர் தனி ஒருவரோ அல்லது அந்த குடும்பத்தில் உள்ளவர்களோ மட்டுமல்ல வல்வையிலுள்ள சில குடும்பத்தவர்கள் இவ்வாறான கரகச் செயற்பாட்டை பரம்பரை பரம்பரையாக தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர். அதுவும் இதனை தமது பிறப்பின் கடமையாகவும், தமக்கு கிடைத்த பாக்கியமாகவும் கருதி அம்பாளுடைய இந்த கைங்கரியத்தை மன நிறைவுடன் தொடர்ந்து கொண்டிருக்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த கும்பக் கரகச் செயற்பாடு அமரர் கதிர்காமத்தம்பி (விமலியின் தந்தை), அமரர் முத்துக்குமாரு (தங்கவேலின் தந்தை), அமரர் இரத்தினசாமி (ராவின் பேரன்) போன்றவர் களால் ஆரம்பிக்கப்பட்டுள்ளமையும் எமக்குத் தெரியவரு கின்றது.

## புனிதம் பேணல்

அம்பாளுடைய வருடாந்த மகோற்சவம் ஆரம்பமாவதை கட்டியம் கூறுகின்ற காத்தவராயர் ஊர்வல நிகழ்வுடன் வல்வை யின் ஒட்டுமொத்த மக்களும் அம்பாளுடைய மகோற்சவத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்டு விடுவார்கள். இதேபோன்று இந்த குறிப்பிட்ட வகையான கும்பக் கரகம் எடுப்பவர்களும் தங்களை ஆசாரசீலராக்க ஆரம்பித்து விடுவார்கள். இதன் பின்பு தீர்த்த உற்சவம் நிறைவுபெற்று அம்பாளுடைய குளிர்த்தி அபிஷேகமும் நிறைவு பெற்ற பின்புதான் இந்த வகையான கரகம் எடுப்பவர்கள் இயல்பான அன்றாட வாழ்வுக்கு திரும்புவார்கள். இந்த வகை யான கரகச் செயற்பாட்டில் ஈடுபடுபவர்கள் உடலாலும் உள்ளத் தாலும் மிக இறுக்கமாக தமது தூய்மையை பேணிக் கொள்வார் கள். இவற்றை மூத்தவர்கள் இளையவர்களுக்கு கவனமாக கடத்தி வருகின்றனர். அதே நேரம் வல்வையில் பிறந்து வளர்ந்து வல்வையிலேயே வாழ்ந்து வருகின்ற சராசரி குடிமக்களும் கூட இதுபோன்று தூய்மையினை பேணிவரும் நடைமுறையினையே பின்பற்றி வருவதும் உண்மைதான். இதுதான் வல்வை மண்ணின் சிறப்பு.

கரகம் எடுப்பவர்கள் இவ்வாறு எல்லாம் உடலாலும் உள்ளத்தாலும் தம்மை தூய்மைப்படுத்தி நாளும்பொழுதும் அம்பாளை உள்ளம் உருகி வழிபட்டுக் கொண்டிருப்பது என்பது ஒரு வகையான அல்லது ஒரு பகுதி புனிதமாக்கல் செயற்பாடு மட்டுமே. இந்த கரகச் செயற்பாட்டிற்காக இதை விட இன்னொரு வகையான புனிதச் செயற்பாடு நடைபெற்றுக் கொண்டிருக்கும். அதுதான் இந்த கரகச் செயற்பாட்டிலேயே மிகமிக புனிதமான செயற்பாடு. அது பூங்காவன உற்சவ நாளிலிருந்து ஆலயத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திற்குள்ளேயே இடம்பெற்றுக் கொண்டிருக்கும். அதனுடைய தார்ப்பரியத்தை ஆலயத்தினது பிரதம பூசகர் நன்கு அறிவார். இதேபோன்று ஆலயத்திற்குள் பூசைச் செயற்பாடுகளுடன் நேரடியாகச் சம்பந்தப்பட்டிருக்கின்ற சிலரும் இதனை அறிந்திருப்பார்கள்.

## வரலாற்றுப் பாரம்பரியம்

தாய் மண்ணில் தமது சொந்த கிராமத்தில் உள்ள ஆலயத்தில் வருடாந்த மகோற்சவம் இடம்பெறுகிறது என்றால் புலம்பெயர் தேசங்களில் உள்ளவர்கள் தமது கிராமத்திற்கு பயணம் மேற்கொள்வதென்பது வழமையாகிவிட்டது. ஆனால் வல்வை மண்ணை சேர்ந்தவர்களுக்கு இது புதியதல்ல. கடலோடிகளாகவும், கடல் கடந்த வணிகர்களாகவும் வாழ்ந்து வருகின்ற பாரம்பரியமுள்ளவர்கள் வல்வை மக்கள். அம்பாளது வருடாந்த மகோற்சவம் ஆரம்பமாகிறதென்றால் ஒட்டுமொத்த வல்வை மக்களும் எங்கேயிருந்தாலும் வல்வை மண்ணுக்கு வந்து சேர்ந்துவிடுவார்கள்.

ஆட்சியாளர்கள் கடல் வாணிபத்தை சட்டங்களினால் தடை செய்த 1940 ஆம் ஆண்டு தசாப்தத்தின் நிறைவுக் காலப் பகுதி வரை எமது மூதாதையர்கள் இவ்வாறுதான் செயற்பட்டு வந்தனர். பெரிய பாய்க் கப்பல்களில் இந்தியாவுக்கு மட்டுமல்ல தெற்கு, தென்கிழக்கு ஆசிய நாடுகளிலும் மேற்கே அராபிக் கடலிலும் கிழக்கே வங்காள விரிகுடாக் கடலிலும் கடலோடிகளாகவும் கடல் வாணிபர்களாகவும் தொழிற்பட்டுக் கொண்டிருந்தவர்கள் எமது மூதாதையர்கள். இவர்கள் எல்லோரும் வல்வை முத்துமாரி அம்மன் வருடாந்த உற்சவ காலத்தை கணக்கு வைத்துத்தான் தமது எல்லாவிதமான செயற்பாடுகளையும் மேற்கொண்டுவந்தனர்.

1950ம், 1960ம், 1970 ஆம் ஆண்டு தசாப்த காலங்களில் வல்வை மண்ணில் வாழ்ந்து வந்தவர்கள் இதே நடைமுறையில் சற்று வித்தியாசமான காட்சிகள் இடம்பெற்றதை மீட்டுப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்கமுடியும். வல்வை மண்ணில் அம்பாளுடைய வருடாந்த மகோற்சவம் ஆரம்பமாகிறதென்றால் தமிழ்நாட்டில் செயற் பட்டுக் கொண்டிருக்கின்ற எமது வியாபாரிகள் எல்லாம் வல்வைக்கு திரும்புவதற்கான ஆயத்தங்களை செய்ய ஆரம்பித்து விடுவார்கள். விழுந்த மாவடி போன்ற இடங்களில் உள்ள கொட்டகைகள் எல்லாம் வெறுமையாகத் தொடங்கி விடும். எஞ்சிமிஞ்சி நிற்பவர்களும் உற்சவத்திற்கு முதல்நாள் இரவுதன்னும் வண்டி ஏறி வல்வை மண்ணுக்கு வந்து சேர்ந்து விடுவார்கள்.

தற்பொழுது இருபத்தோராம் நூற்றாண்டில் இரண்டாம் மூன்றாம் தசாப்த காலப்பகுதியில் வல்வையின் வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயம் உருவாகி தொடர்ந்து கொண்டிருக்கிறது. உலகம் முழுவதும் பரந்து வாழும் ஏராளமான வல்வை மக்கள் அம்பாளது உற்சவ காலத்தை கணக்கு வைத்துத்தான் வல்வைக்கு பயணம் மேற்கொண்டு வருகின்றனர். இந்தப் புதிய பரிமாணம் இன்னும் சில தசாப்தங்கள் தொடர்ந்து கொண் டிருக்கும்.

## வலியும் வலிமையும்

பிரிவுத் துன்பங்களுடன், தொழில் கஷ்டங்களும் ஆபத்துக் களும் கூடவே சேர்ந்து கொள்வதால் வல்வை கடலோடிகளது வாழ்வு எப்பொழுதும் ஏக்கங்களுடனும் தவிப்புகளுடனும் தான் சென்று கொண்டிருக்கும் என்பது இயல்பானதே. ஆனாலும் அம்பாள் நாளும்பொழுதும் தம்மை காத்து கருணை செய்து கொண்டிருக்கிறாள் என்ற உள்ளுணர்வும் நம்பிக்கையும் எப்பொழுதும் அவர்களை வாழவைத்துக் கொண்டிருக்கும். இத்தகைய உணர்வுகளுள்ள இந்த கடலோடிகள் அம்பாளுடைய மகோற்சவத்தில் வல்வை மண்ணுக்கு திரும்புவதும் அம்பாளை வழிபடுவதும் அவர்களுக்கு சாதாரண நிகழ்வுகள் அல்ல. இவர்கள் கடல்சார் வாழ்க்கையில் வலியையும் அம்பாளின் திருவருளின் வலிமையையும் தமது வாழ்வியலால் நன்கு உணர்ந்தவர்கள். இதனால்தான் இவர்களின் வழிபாட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறைகள் சராசரியான வழிபாட்டு முறைகளை விட ஆழமான தாகவும் உயிரோட்டமுள்ளவையாகவும் காணப்படுகின்றன. இவை பற்றி கப்பலோட்டிய அடியேனது தந்தையார் உட்பட மூத்த சந்ததியினருடன் நேரடியாக உரையாடி அவர்களின் உணர்வு களை உள்வாங்கும் சந்தர்ப்பமும் அடியேனுக்கு கிடைத்தது. அவர்களில் ஒருவர் எனது சிறிய தந்தையார் கதிர்காமத்தம்பி. அவர் தனது பன்னிரெண்டாவது வயதிலேயே கப்பலோட்டியாக செயற்பட ஆரம்பித்த அனுபவத்தை பகிர்ந்துகொண்டார். தற்பொழுது இவரது மூன்றாவது சந்ததியினர் இந்தக் கரகச் செயற்பாட்டை மேற்கொண்டு வருவதைக் காணமுடிகிறது. அது மட்டுமன்றி இந்த மூன்றாவது சந்ததியினர் தமது மூத்தவர்கள் நிறைவேற்றிவந்த அதே நேர்த்தி செயற்பாடுகளை மாற்றமின்றி தற்பொழுதும் தொடர்ந்து கொண்டிருப்பதை நாம் பார்க்கிறோம்.

## கரகக் கும்பம்

வல்வை முத்துமாரி அம்மனது வருடாந்த மகோற்சவம் ஆரம்பமாகிவிட்டால் எங்கும் புனிதம். எதிலும் புனிதம் கடைப் பிடிக்க வேண்டுமென்பதை வல்வையில் வாழ்ந்துவரும் சிறுவர் கள் கூட நன்கு அறிந்து வைத்துள்ளனர். நாம் இங்கே வெளிப் படுத்துகின்ற கரகச் செயற்பாட்டை மேற்கொள்பவர்கள் இவ்வாறான புனிதச் செயற்பாடுகள் அனைத்தையும் ஏனையவர் களை விடவும் இன்னும் ஒரு படி உயர்வாகவே பேணி வருவார் கள். அதேபோன்று உற்சவ நாட்கள் முழுவதும் விரதமிருந்து காலை மாலை உற்சவ காலங்களில் அம்பாளை மனமுருகி வழிபாடும் மேற்கொண்டு வருவார்கள்.

கடலோடிகளாக இருந்த எமது மூதாதையர்கள் இவற் றிற்கு அப்பாலும் சென்று சிந்தித்துள்ளனர். உற்சவ நாட்கள் முழுவதும் தவறாது தாம் புனிதம் பேணி வருவது போல தாம் எடுக்கின்ற கரகத்தையும் புனிதப்படுத்துவது உசிதமெனக் கருதியது மட்டுமன்றி அதனை செயற்படுத்தவும் செய்தார்கள். இவர்களுடைய கரகச் செயற்பாடு மகோற்சவத்தின் நிறைவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளான தீர்த்த உற்சவத்தின் அன்று அதுவும் தீர்த்த உற்சவத்தின் நிறைவுத் தருணத்தில்தான் இடம்பெறும்.

ஆனாலும் தாம் மேற்கொள்ளுகின்ற கரகச் செயற்பாட்டிற் கான ஆரம்பத்தை அதற்கு முன்பே ஆரம்பித்துவிட வேண்டு மென சிந்தித்துள்ளனர். இதற்கு உசிதமாக பூங்காவன உற்சவ நாளை தெரிவுசெய்தனர். இதனால் தாம் தீர்த்த உற்சவ நாள் அன்று எடுக்கப் போகும் கரகத்திற்குரிய கும்பக் குடத்தை பூங்காவன உற்சவ தினத்தன்று புனிதமாக்க ஆயத்தமாவார்கள். அன்று காலையில் தீர்த்தக் கிணற்றிலிருந்து எடுக்கப்படும் தீர்த்தத்தினால் நிரப்பி உரிய சமய சடங்குகளுடன் அதனை தயார்ப்படுத்துவார்கள். அந்தச் சமயச் சடங்கின் பொழுது கும்பக் கரகம் எடுப்பவர்களுக்கு பிரதம குருக்களால் சமய சடங்கு களுடன் காப்பு கட்டப்படும். இவ்வாறு கட்டப்படும் காப்பு கரகம் எடுக்கப்படும் தீர்த்த உற்சவ நாள் வரை மஞ்சள் தோய்த்த துணியினால் சுற்றிக் கட்டப்பட்டு அதன் புனிதம் பேணிப் பாதுகாக்கப்பட்டு வரும். அதேநேரம் தயார்ப்படுத்தப்பட்ட அந்த கரகக் கும்பத்தை ஆலயத்தின் தெற்கு வாசல் எழுந்தருளி அம்பாளின் இருப்பிடத்தில் பூசையில் வைத்து பேணுகின்ற நடைமுறையினையும் பின்பற்றினர். இதனை இன்றுவரை தொடர்கின்றனர்.

இவ்வாறு கரகங்களுக்குரிய கும்பங்களை பூசையில் வைத்து பேணுகின்றபொழுது இடம்பெறுகின்ற செயற்பாடுகள் தான் எம் உள்ளங்களை நெகிழ வைக்கின்றன. ஒரு புறம் மூதாதையர்கள் அம்பாள் மீது கொண்டுள்ள உயிரோட்டமான பக்தி, அம்பாள் வல்வை மக்கள் மீது பொழிகின்ற கருணை, வல்வை மண்ணுக்கே உரிய தனித்துவமான வழிபாட்டு முறை, எதையுமே உச்சமாகச் செய்கின்ற வல்வை மக்களின் தனித்துவ மான பாரம்பரியம் என இவை எல்லாமே இவ்வாறான ஆன்மிகச் செயற்பாடுகளினூடாக வெளிப்படுவதை நாம் உற்று நோக்க லாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினமும் காலை மாலை உற்சவங்களின் பொழுது வழமை போல தெற்கு வாசல் எழுந்தருளி அம்பாளுக்கு பூசைகள் இடம்பெறும். அங்கே நிறைவாக அம்பாள் பஞ்சாராத்தி தீபாராதனையால் ஆராதிக்கப்படுவார். இவை எல்லாம் நாம் அறிந்த செயற்பாடுகள் தான். அதேநேரம் அந்த பஞ்சாராத்தி ஆராதனை அங்கே பேணப்பட்டுக் கொண்டிருக்கும் அந்த கரகக் குடங்களுக்கும் விஷேடமாகக் காட்டப்பட்டு அவைகளும் ஆராதிக்கப்படும். இவ்வாறு மொத்தம் பதினெட்டுத் தடவைகள் ஆராதிக்கப்படும். கரகம் எடுக்கப்படும் அந்தக் கரகக் கும்பங் களுக்கும் பஞ்சாராத்தி ஆராதனைகள் இடம்பெற்று அந்த குடங்களும் புனிதமாக்கப்படும். இவ்வாறு பேணப்பட்டு புனித மாக்கப்பட்ட கரகக் கும்பங்களைக் கொண்டு தான் தீர்த்த உற்சவத்தின் பொழுது கரகம் எடுக்கப்படும். பொதுவாக ஒரு கரகச் செயற்பாட்டிற்கு இவ்வளவு புனிதம் பேணப்படும் நடைமுறை வல்வையை தவிர வேறு எங்குமே இடம்பெறுவ தில்லை எனக் கூறலாம். எமது மூதாதையர்களது உண்மையான பக்திக்கு இந்த செயற்பாடு ஒன்றே கட்டியம் கூறுவதாக உள்ளது. இவர்கள் தீர்த்த உற்சவ நாள் கரகம் எடுத்து மனநிறைவுடன் தமது நேர்த்தியை பூர்த்தி செய்து வருகின்றனர்.

## தீர்த்த உற்சவத்தின் தனித்துவம்

ஒவ்வொரு ஆலயங்களிலும் தீர்த்த உற்சவம் இடம்பெறும் பொழுது வெவ்வேறு வகையான சிறப்புக்களும் நடைமுறை களும் இடம்பெறுவது இயல்பானதே. தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் காலையில் தீர்த்த நிகழ்வு நிறைவுபெற்றபின் முருகப்பெருமான் வள்ளி அம்மன் சந்நிதானத் திற்கு செல்வார். அன்று பகல் முழுவதும் வள்ளி அம்மன் சந்நிதானத்திற்குள் வள்ளி அம்மனுடன் சந்நிதி முருகன் உடன் இருப்பார். இவ்வாறு வள்ளி அம்மன் சந்நிதானத்திற்குள் வள்ளி அம்மனுடன் முருகப் பெருமான் உடனிருப்பது வருடத்தில் தீர்த்த திருவிழா இடம்பெறுகின்ற இந்த ஒருநாள் மட்டுமே. கதிர்காமத்திலும் இதே நடைமுறைதான் பின்பற்றப்பட்டு வருகிறது. அன்று மாலை வள்ளி அம்மன் சந்நிதானத்திலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகப்பெருமான் புறப்படுவதுடன் தீர்த்த உற்சவத்தின் மாலைத் திருவிழா ஆரம்பமாகும். அதிகமாக அன்று முன் இரவுடன் தீர்த்த உற்சவம் நிறைவுபெறும்.இது தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தில் இடம்பெற்றுவரும் தீர்த்த உற்சவ நடைமுறை.

காலையில் ஊறணியில் தீர்த்தமாடியபின் பழமை வாய்ந்த நெடியகாட்டு விநாயகர் ஆலயத்திற்குள் அம்பாள் எழுந்தருளி யிருக்கும் பொழுது விஷேட பூசைகள் நடாத்தப்பட்டு அம்பாள் மிகச் சிறப்பாக ஆராதிக்கப்படுவார். இவ்வாறு அம்பாள் விநாயகர் ஆலயத்தில் இருந்து அடியவர்களுக்கு காட்சிதந்து கருணை புரிவதெல்லாம் வல்வை மக்களை ஆனந்தத்தில் ஆழ்த்துகின்ற நிகழ்வுகளாகும். வல்வை மக்களின் இந்த பக்தி நிறைந்த ஆனந்தத்தின் வெளிப்பாடு தொடர்பாகத் தான் வரலாற்றுப் புகழ் நிறைந்த இந்திர விழா நிகழ்த்தப்பட்டு வருகிறது. இதனால் வல்வை முத்துமாரி அம்பாளுடைய தீர்த்த உற்சவம் பின் இரவு வரை சிலவேளை அதிகாலை வரை கூட தொடர்கின்ற சூழ்நிலைகளும் உருவாகின்றன.

அம்பாளது தீர்த்தத் திருவிழா அன்று இரவு இவ்வாறான நிகழ்வுகள் ஒருபுறம் இடம்பெற்றுக் கொண்டிருக்கும். அந்த சந்தர்ப்பத்தில்தான் இங்கே நாம் வெளிப்படுத்துகின்ற வல்வை யில் பாரம்பரியமாக இடம்பெற்று வரும் இந்த பக்தியின் உச்ச மான கரகச் செயற்பாடும் இடம்பெற்று வருகிறது.

அம்பாளுடைய தீர்த்த உற்சவத்தின் உச்சமான கொண்டாட்ட நிகழ்வுகள் அதிகமாக நடு இரவு வரை தொடர்ந்து கொண்டிருக்கும். இதேபோன்ற அம்பாளுடைய உற்சவ காலத் தின் உச்சமான பக்தி உணர்வின் வெளிப்பாட்டிற்கான ஆரம்ப மும் அதிகமாக நடு இரவு கடந்த பின்புதான் ஆரம்பமாகும். அம்பாள் நெடியகாட்டுப் பிள்ளையார் ஆலயத்திலிருந்து தனது ஆலயம் நோக்கி புறப்பட ஆரம்பிக்கும் நிகழ்வுடன்தான் தீர்த்த உற்சவத்தின் நிறைவுத் தருணம் ஆரம்பமாகிறது. சரியாக அம்மன் புறப்பட தயாராகும் இந்த தருணத்தை கணக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்துத்தான் இந்த கும்ப கரகச் செயற்பாடுகளும் ஆரம்பமா கின்றன. இந்த கும்ப கரகத்தை எடுப்பவர்கள் முதற் செயற்பாடாக ஆலய சூழலில் உள்ள கிணற்றில் தோய்ந்து வல்வை வைத்தீஸ்வரர் ஆலயத்தில் தேங்காய் உடைத்து தமது முதல் வணக்கத்தை முழுமுதற் கடவுள் சிவனுக்கு செலுத்திக் கொள்வார்கள். அதன்பின்பு அலகு குத்தி தமது கும்ப கரகத்துடன் வல்வை முத்துமாரி அம்மன் ஆலயத்திலிருந்து நெடியகாட்டு பிள்ளையார் ஆலயத்தை வந்தடைவார்கள்.

## கும்பக் கரகச் செயற்பாடு

இவ்வாறான செயற்பாடுகள் எல்லாம் வல்வை வாசிகளே அதிகம் அறிந்திராதவை என்றே கூறவேண்டும். இவற்றையும் இங்கே வாசகர்களாகிய அடியவர்களுடன் பகிர்ந்து கொள் கின்றோம். பூங்காவன உற்சவ நாளிலிருந்து தெற்கு வாசல் அம்பாளின் இருப்பிடத்தில் இந்த கரகக் கும்பங்கள் புனிதம் பேணப்பட்டுக் கொண்டிருக்கும். இப்பொழுது தீர்த்த உற்சவத் தின் நடுச்சாமமளவில் இந்த கும்பங்கள் கரகம் எடுப்பவர்களிடம் குருக்களினால் முறைப்படி கையளிக்கப்படும். இந்த புனித கும்பங்களுக்குரிய கரகங்கள் வழமைபோல பொலிகண்டி கந்தவனக்கடவைக் கந்தன் ஆலயச் சூழலில் உள்ளவர்களால் இயற்கை அழகுடன் உருவாக்கப்படுகின்றன. இவை இரவோடு இரவாக அம்பாள் ஆலயத்தை வந்தடையும். இங்கே புனிதம் பேணப்பட்ட கும்பங்கள் மேல் இந்த கரகங்கள் வைத்து கும்ப கரகங்களாக அம்மன் ஆலயத்திற்குள் வைத்து உருவாக்கப் படும்.

கரகம் எடுப்பவர்களுக்கு கரகச்சாறி கட்டி, அலகு குத்தி கரகம் ஏற்றப்பட்டு உடுக்கடித்து உரு ஏற்றப்படும் செயற்பாடுகள் பக்திப் பரவசத்துடன் இடம்பெறும். இவை எல்லாம் அம்பாள் ஆலயத்தின் உள்வீதியில் இடம்பெறும். அதன்பின்பு உள்வீதி, வெளிவீதி ஆகியவற்றை வலம்வந்து நேராக நெடியகாட்டு பிள்ளையார் ஆலயத்தினை சென்றடைவர். அங்கே வெளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீதியை வலம்வருவார். அதுமட்டுமன்றி அங்கே அம்பாள் எழுந்தருளியிருக்கும் பந்தலுக்குச் சென்று அம்பாளையும் வலம் வருவர். அந்த சந்தர்ப்பத்தில் அம்பாள் நெடியகாட்டு விநாயகர் ஆலயத்திலிருந்து பிரதான வீதி வழியாகத் திரும்புவதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருப்பார். இவ்வாறு நெடியகாட்டிலிருந்து பிரதான வீதி ஊடாக அம்பாள் ஊர்வலமாக வரும்பொழுது இந்த கரகச் செயற்பாட்டாளர்கள் அம்பாளுக்கு முன்பாக கரகாட்டத் துடன் வந்து கொண்டிருப்பார்கள். அந்த கரகச் செயற்பாடு பின்முதுகு காட்டாது அம்பாளை நோக்கியவாறான கரகச் செயற்பாடாகத்தான் இடம்பெற்றுக் கொண்டிருக்கும். வீதி முழுவதும் அம்பாளுக்கு கும்பம் வைத்து அர்ச்சனை செய்பவர் களுடைய கும்ப குடநீர் இந்த கரகக்காரருக்கு அபிஷேக நீராக ஊற்றப்படும்.

நெடியகாட்டுப் பிள்ளையார் ஆலயத்திலிருந்து அம்பாள் தனது ஆலயம் வந்தடையும்பொழுது இயல்பான காலங்களில் விடியற்காலை 4.00 மணியாகலாம். இந்த சந்தர்ப்பத்தில்தான் அம்பாளுடைய தீர்த்த உற்சவத்தின் நிறைவுத் தருணம் அம்பாளுடைய ஆலயத்தின் வாசற் பாட்டுடன் ஆரம்பமாகிறது. அம்பாள் வெளிவீதியிலிருந்து ஆலயத்திற்குள் பிரவேசிக்கும் சமயத்திலிருந்து இந்த பக்தி பரவசம் நிறைந்த வாசற்பாட்டு செயற்பாடு ஆரம்பமாகிறது.

## வாசற்பாட்டு

வாசலிது வாசலிது எங்கள் மாரியம்மன் வரும் வாசலிது

தாசில்தா(ன்) மணலழகி எங்கள் தமிழ்மொழியாள் வரும் வாசலிது
வாசலிது ...
சித்திரையா பறுவத்திலே அம்மன் தீர்த்தமாடி வரும் வாசலிது
வாசலிது ...
ஊறணியில் தீர்த்தமாடி எங்கள் உறுதுணையாள் வரும் வாசலிது
வாசலிது ...
கும்பத்தழகியிவள் எங்கள் கிளிமொழியாள் வரும் வாசலிது
வாசலிது ...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரகத்தழகியிவள் எங்கள் கனிமொழியாள் வரும் வாசலிது
வாசலிது ...
வேப்பிலையைக் கைப்பிடித்தோ எங்கள் வேல்விழியாள் வரும் வாசலிது
வாசலிது ...
நாரணனார் தங்கையிவள் எங்கள் நல்லமுத்துமாரி வரும் வாசலிது
வாசலிது ...
கோடியாக் கரையைவிட்டோ குதித்து வந்தாள் வரும் வாசலிது
வாசலிது வாசலிது எங்கள் மாரியம்மன் வரும் வாசலிது.

இப் பாடல் வாய்மொழியாக பாடப்பட்டு வருவதால் இப் பாடலின் சில சொற்கள், வரிகள் மாற்றமடைந்து பாடல் காலத்திற்குக் காலம் திரிபடைந்து வருவதையும் காணமுடி கின்றது. இப் பாடல் ஐந்து தசாப்பத்திற்கு முன்பு வைத்தியர் சந்திரி அவர்கள் ஆலயத்தில் தொண்டுகள் புரிந்த காலத்தில் அவரால் கேட்டு உள்வாங்கப்பட்டது.

அப்பொழுது இடம்பெறும் உடுக்குடன் கூடிய வாசற்பாட்டு அதற்கு ஒத்ததான கரகாட்டம், தீப்பந்த ஒளி, மணி ஓசை, சங்கு ஒலி இவற்றின் மத்தியில் அம்பாள் மெதுமெதுவாக வசந்த மண்டபம் நோக்கி உள்வீதி உலா வந்து கொண்டிருப்பார். இவ்வாறான அமைதியும் சாந்தமும் நிறைந்த சூழலில் அம்பாள் தனது கருணைக் காட்சியை அடியவர்களுக்கு நிறைவாகவே வழங்கிக் கொண்டிருப்பார். இவ்வாறான கருணையை எல்லாம் தமது உள்ளத்தாலும் உடலாலும் லயித்து அனுபவிக்கின்ற மெய்யடியவர்கள் மெய்சிலிர்க்கின்ற பக்திப் பரவசத்திற்குள் நிச்சயமாக மூழ்கிப் போயிருப்பர். அப்பொழுதும் இந்த கும்ப கரகங்கள் தான் அம்பாளுக்கு முன்பாக உச்சமான பக்தி உணர்வுடன் கரகாட்டத்துடன் வந்து கொண்டிருப்பர். இவ்வாறு எங்கும் பக்தி எதிலும் பக்தி என்று கூறக்கூடிய இந்த பக்தி பரவச நிலையை அடைவதற்காக காத்திருந்த ஏராளம் மெய்யடியவர் கள் கலந்து கொள்வார்கள். இதில் கலந்து கொள்பவர்கள் ஒவ்வொருவருமே இது தமக்கு மறக்கமுடியாத பரவச உணர்வு என்பதனை வெளிப் படுத்துகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கே அம்பாளின் வருடாந்த மகோற்சவத்தின் ஒட்டு மொத்த பக்தி உணர்வின் வெளிப்பாடாக இந்த வாசற்பாட்டு இடம்பெற்றுக் கொண்டிருக்கும். இதனைப் பாடுகின்றவர்கள் மிகவும் கைதேர்ந்தவர்களாக காணப்படுவர். அது மட்டுமல்ல அம்பாளின் வருடாந்த மகோற்சவத்தின் நிறைவுநாளில் நிறைவுத் தருண நிகழ்வாகவும் இந்த வாசற்பாட்டை நாம் கூறலாம். அது மட்டுமல்ல அம்மன் இருப்பிடம் சென்றபின்புதான் கும்ப கரகங்கள் இறக்கப்படும். அவை இறக்கப்படும் வரை வாசற்பாட்டும் தொடர்ந்து கொண்டிருக்கும்.

ஓம் அம்பாள் துணை

✧✧✧✧✧

## மண் கடந்த தொண்டு

20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் பல ஆலயங்களில் பிரமாண்ட மான தேர்கள் உருவாக்கப்பட்டு வந்ததைக் காண முடிந்தது. இவ்வாறான தேர்களில் தெய்வங்கள் வீதியுலா வருவதை கண்குளிரக் கண்டு அடியார்கள் நிறைவுபெற்று வந்தது அனைவருக்கும் மகிழ்வானதே. ஆனால் அந்த பிரமாண்டமான தேர்களுக்கு சரியாக வடம் அமைத்து, கட்டை போட்டு தேரினை சரியாக திசைதிருப்பி தேர் வீதியுலாவை நேர்த்தியாகவும் சரியாகவும் நிறைவுசெய்யவேண்டிய தேவை அங்கே காணப்பட்டது. ஆனால் இவ்வாறான ஆளுமையும் ஆற்றலும் உள்ளவர்கள் பல ஆலயங்களில் மிக அரிதாகவே காணப்பட்டுள்ளனர்.

இதனால் இவற்றில் கைதேர்ந்தவர்களான வல்வை மண்ணைச் சேர்ந்தவர்களை சம்மந்தப்பட்ட ஊர்களிலுள்ள ஆலய நிர்வாகத்தினர் அணுகினர். எம்மவர்களும் அந்த ஆலயங்களுக்குச் சென்று தேர் வீதியுலா உட்பட பல்வேறு கனதியான ஆலய செயற்பாடுகளுக்கு தமது ஆற்றலும் அனுபவமும் மிக்க சேவைகளை தொடர்ச்சியாக வழங்கி வந்துள்ளனர். மாவிட்டபுரம் கந்தசாமி கோவில், நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயம், மாத்தளை முத்துமாரி அம்மன் ஆலயம் உட்பட பல ஆலயங்களுக்குச் சென்று இவ்வாறான திருத் தொண்டுகளை எம்மவர்கள் ஆற்றி வந்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அருளாட்சி - 05

"டேய் எங்கேயடா என்னைத் தேடிக் கொண்டிருக்கிறீர்கள் வடமேற்குத் திசையில் நான் இருக்கிறேன்"

இந்த கூற்று அதிகம் பரிச்சயம் இல்லாவிட்டாலும் ஏதோ ஒரு சூழ்நிலையில் தேடிக் கொண்டிருப்பவர்களுக்கு தேடப் பட்டுக் கொண்டிருப்பவர் வெளிப்படுத்துவது போன்று அமைந் திருப்பதை பலரும் ஊகிக்கமுடியும். இந்த கூற்றின் கருத்து அவ்வாறு இருப்பதும் உண்மையே. ஆனால் நாம் நினைப்பது போல இது ஒரு சாதாரண கூற்றோ, சராசரியான கூற்றோ அல்ல.

இவ்வுலகில் நாம் பிறந்து வாழ்ந்து கொண்டிருந்தாலும் எமது வாழ்க்கை நீர்க்குமிழி போன்றது. நிலையற்றது. இவ்வுலகில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற சராசரி மனிதர் களாகிய நாம் உலகியல் வாழ்வுக்குரிய கடமைகளையும், இறை தொண்டு, இறை வழிபாடு போன்ற ஆன்மிக வாழ்வுக்குரிய கடமைகள் அனைத்தையும் அறவழி தவறாது நிறைவேற்றுவது ஏற்றுக் கொள்ளக் கூடியதே. அதேநேரம் நிலையற்ற மானிட வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கின்ற எமக்கு ஆன்மிகம் உட்பட வாழ்க்கையின் எல்லாவகையான செயற்பாடுகளிலும் ஒரு வரையறை இருப்பதாகவே தோன்றுகிறது. சில சந்தர்ப்பங்களில் நாம் இவ்வாறான வாழ்க்கையின் வரையறைகளை தெரிந்தோ, தெரியாமலோ தாண்டிவிட முயற்சிக்கின்றோம்.

உலகியல் வாழ்வில் மனிதர்கள் வரையறைகளை மீறா திருப்பதற்கு சட்டங்கள், சம்பிரதாயங்கள், வழமைகள் என பல வகைப்பட்ட அம்சங்கள் இருப்பதைப் பார்க்கின்றோம். இதே போன்று ஆன்மிகத்திலும் அடியவர்களுக்கும் சில வரையறைகள் இருப்பதாகவே தோற்றுகிறது. இந்த வரையறைகளை அடியவர் கள் தாமாக சிந்தித்து அவற்றை தாண்டாது செயற்படுவது சாலச் சிறந்தது. பக்தி மேலீட்டால் அல்லது ஆர்வ மிகுதியால் அல்லது அறியாமையினால் என ஏதோ ஒரு காரணத்தால் தமது வரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யறைகளை அடியவர்கள் தாண்ட முயற்சிப்பதுண்டு. இவ்வா றான சந்தர்ப்பங்களில் தெய்வங்களே அடியவர்களை ஆற்றுப் படுத்துவதுண்டு. அவ்வாறான ஒரு நிகழ்வை அடியவர்களுக்கு வழங்குகின்றோம்.

வல்வையில் பிறந்து வளர்ந்து தற்பொழுது கனடாவில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற ஒரு சராசரி குடிமகன் பொன். சிவகுமாரன். வல்வையின் வரலாற்றை சற்று ஆழமாக தேடுதல் செய்கின்ற மண் பற்றாளர். அதேநேரம் வல்வை முத்துமாரி அம்மனுடைய மெய்யடியவரும் கூட. இதனால் வல்வை முத்துமாரி அம்பாள் ஆலயம் தொடர்பாகவும் சில தொன்மை யான விடயங்கள் பற்றி அறிய வேண்டுமென்ற ஒரு உணர்வு இவருக்குள் உருவாகியிருந்தது. அதற்கு பொருத்தமான ஒரு தருணமும் அவருக்கு கிடைத்தது.

2001ஆம் ஆண்டு வல்வை முத்துமாரி அம்மனது பிரதம குருக்கள் சிவஸ்ரீ தண்டபானிக தேசிகர் அவர்கள் ஒரு குறுகிய கால பயணமாக கனடாவுக்கு வருகை தந்திருந்தார்கள். சகோதர உறவுள்ள சாமி அப்பாத்துரைதான் குருக்களை கனடாவுக்கு அழைத்திருந்தார்கள். இதனால் குருக்கள் சாமி அப்பாத்துரை வீட்டில்தான் தங்கியிருந்தார்கள். இந்த சந்தர்ப்பத்தில் தான் பொன். சிவகுமாரன் எமது பிரதம குருக்கள் சிவஸ்ரீ தண்டபானிகதேசிகர் அவர்களை நேரே சந்தித்து உரையாடுவதற்கு விரும்பினார். பொன். சிவகுமாரன் குருக்களிடம் தனது விருப்பத்தை தெரிவித்து அவருடைய சம்மதத்தையும் எப்பொழுது சந்திப்பது போன்ற தகவல்களையும் பெற்றுக்கொண்டார்கள்.

2001ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 20ஆம் திகதி குருக்களை சந்திப்பதற்கு நாள் குறிக்கப்பட்டிருந்தது. அன்றைய தினம் பொன். சிவகுமார் அவரது துணைவியார் சந்தானலஷ்மி சகிதம் குறிப்பிட்ட நேரத்திற்கு சாமி அப்பாத்துரை வீட்டிற்கு செல்கின்றார். அங்கே இவர்களின் வரவை எதிர்பார்த்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருக்களும் சாமி அப்பாத்துரையும் வீட்டு முன் மண்டபத்தில் தமக்கிடையே உரையாடிக் கொண்டிருக்கின்றனர். வல்வை முத்துமாரி அம்மனுடைய ஆலயத்தில் மிக நீண்ட காலமாக பிரதம குருக்களாக செயற்பட்டு வருகின்ற பெருமைக்கும் சிறப்புக்குமுரியவர் சிவஸ்ரீ தண்டபானிக தேசிகக் குருக்கள். அவரை மிக நீண்ட இடைவெளிக்குப் பின்பு அம்பாளுடைய மெய்யடியவர் ஒருவர் சந்திக்கின்ற தருணம் அது. இதனால் இந்த சந்திப்பும், உரையாடலும் மிகுந்த மரியாதைக்குரியதாகவும் உள்ளார்ந்த மகிழ்ச்சிகரமானதாகவும் இடம்பெற்றுக் கொண்டிருக்கிறது.

அப்பொழுது ஒரு கட்டத்தில் அம்பாளுடைய தொன்மை யான வரலாறு பற்றியும் பரஸ்பரம் உரையாடுகின்றனர். பின்பு அந்த உரையாடல் சற்று ஆழமாகச் சென்று அம்பாளது கருவறை தொடர்பான உரையாடலாகவும் இடம்பெற்றுக் கொண்டிருக்கிறது. அம்பாள் கோவில் கொண்டிருக்கின்ற கருவறை தொடர்பாகவும் பொன். சிவகுமார் குருக்களிடம் சில வினாக்களை கேட்க ஆரம்பிக்கின்றார். இந்த வினாக்கள் பொதுவாக வழிபட வருகின்ற அடியவர்களுடன் சம்மந்தப்படாத விடயங்களாகும். அடியார்கள் பொதுவாக இவை பற்றி வினா எழுப்புவதுமில்லை. எமது குருக்களும் சிவகுமாரனால் கேட்கப் பட்ட வினாக்களுக்கு விடை பகர சற்று சங்கடப்பட்ட தருணமது. அப்பொழுதுதான்,

**"டேய் எங்கேயடா என்னைத் தேடிக்கொண்டிருக்கிறீர்கள் வடமேற்கு திசையில் நான் இருக்கின்றேன்"**

என, சுருக்கமாக மட்டுமல்ல நறுக்காகவும் சற்று அதட்டலாக வும் அம்பாளுடைய அந்த அருள்வார்த்தைகள் வெளிவரு கின்றன. யாருமே சற்றும் எதிர்பார்க்காத அம்பாளுடைய இந்த அருள்கூற்று அங்கே உரையாடிக் கொண்டிருந்தவர்களை திடுக்கிட வைக்கிறது. அது மட்டுமன்றி ஆலயக் குருக்கள் உட்பட அங்கேயிருந்த அனைவரையும் திக்குமுக்காடச் செய்ததென்றே கூறவேண்டும். அனைவரும் வாயடைத்துப் போகின்றனர். எமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதம குருக்கள் தனக்கு அருகேயிருந்த பொன். சிவகுமாரனைத் தொட்டு சைகையால் ஏதோ வெளிப்படுத்துகின்றார்.

அங்கேயிருந்தவர்கள் ஒருவாறு தங்களை படிப்படியாக சற்று ஆசுவாசப்படுத்திக் கொள்கின்றனர். அதேநேரம் இது கண்கண்ட தெய்வமாக கருணைத் தாயாக விளங்கிக் கொண் டிருக்கும் வல்வை முத்துமாரி அம்மன் சாமி அப்பாத்துரை ஊடாக நிகழ்த்திய திருவிளையாடல் என்பதை உணருகின்றனர். நடைபெற்ற நிகழ்வை மீட்டுப் பார்க்கின்றனர். ஆரம்பத்தில் ஒரு பதட்டம் ஏற்பட்டாலும் அம்பாளின் அற்புதத்தை நேரடியாக உள்வாங்கிக் கொண்டதன் பூரண நிறைவு அவர்களுக்குள் ஏற்படுகிறது. அதேபோல மானிட நிலையில் நின்று அந்த வரை யறைக்குள் நின்று அம்பாள் தொடர்பான கைங்கரியங்களை அம்பாள் தொடர்பான தேடல்களை நாம் மேற்கொள்ள வேண்டு மென்ற உண்மைகளையும் அங்கேயிருந்தவர்கள் தாமாகவே உணர்ந்து கொள்கின்றனர். குறிப்பாக சிவகுமாரன் சற்றுப் பதட்டத்துடன் அதனை மிக ஆழமாகவே உள்வாங்கிக் கொள்கின்றார்.

2001ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் கனடாவில் அம்பாளின் பிரதம குருக்கள் முன்பாக இந்த அற்புதங்கள் நடந்தேறுகின்றன. சாமி அப்பாத்துரை அம்பாளினால் ஆட்கொள்ளப்பட்டிருந்த நிலையிலிருந்து படிப்படியாக விடுபடுகின்றார். அவ்வாறு விடு பட்டு மீண்டும் சகஜ நிலைக்கு வருகின்றார். வந்தபின்பு இயல்பாக மீண்டும் அனைவருடனும் உரையாடுகின்றார். அப்பொழுது அங்கே இருந்தவர்களிடம் நடந்தவற்றை எல்லாம் கேட்டு அறிந்துகொள்கின்றார்.

இதேபோன்று அங்கே **எங்கேயடா என்னைத் தேடிக் கொண்டிருக்கிறீர்கள் வடமேற்கு திசையில் நான் இருக் கின்றேன்** என சாமி அப்பாத்துரைக்கூடாக அம்பாள் வெளிப் படுத்திய அந்த அருள் கூற்றினை பொன். சிவகுமாரன் மிக ஆழமாக உள்வாங்கிக் கொள்கின்றார். அந்தக் கூற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவகுமாரனுக்கு வேத வாக்காக அமைகிறது. அம்பாள் வட மேற்கு திசையில் இருப்பதாக வெளிப்படுத்தி தனது தேடலை ஆற்றுப்படுத்தியதை சிந்திக்கின்றார். இதன் தொடர்ச்சியாக வல்வையின் வட மேற்கு திசையில் கோடிக்கரையிலும் ஒரு முத்துமாரி அம்மன் ஆலயம் அமைந்திருப்பது பற்றி தெரிந்து கொள்வதற்கு திருவருள் கைகூடுகிறது.

வல்வையில் தற்பொழுது வசித்துக் கொண்டிருக்கும் திரு. மீனாட்சிசுந்தரமும் சிவகுமாரனும் ஏற்கனவே நன்கு பரீட்சய மானவர்கள். இதனால் மீனாட்சிசுந்தரத்தினூடாக கோடியாக் கரையிலும் ஒரு முத்துமாரி அம்மன் ஆலயம் அமைந்திருப்பது பற்றிய தகவல்களை சிவகுமார் விபரமாகப் பெற்றுக் கொள் கின்றார். அம்பாள் வடமேற்குத் திசையில் நான் இருக்கின்றேன் என்று வெளிப்படுத்தியதை மீட்டுப் பார்க்கிறார். அக்கூற்றின் தார்ப்பரியத்தை இப்பொழுது சிவகுமாரன் பூரணமாக விளங்கிக் கொள்கின்றார்.

இதன் பின்பு சிவகுமாரன் கோடியாக்கரையிலுள்ள முத்துமாரி அம்மன் ஆலயம் தொடர்பான தேடலை ஆரம்பிக் கின்றார். அங்கே முத்துமாரி அம்மன் ஆலயத்தின் திருப்பணி, பராமரிப்பு தொடர்பான தேவைகள் இருப்பதையும் அறிந்து கொள்கிறார். அதற்காக முடிந்தளவு நிதி உதவிகளையும் வழங்க முன்வருகின்றார். திருப்பணிச் செயற்பாடுகள் நிறைவு பெற்ற பின் அந்தப் பகுதி மக்களால் கோடியாக்கரை முத்துமாரி அம்மனுக்கு கும்பாபிஷேக நிகழ்வும் மேற்கொள்ளப்படுகின்றது. இந் நிகழ்விற்கு சிவகுமாரினால் செல்லமுடியாத சூழ்நிலை இருந்ததால் அம்பாளின் அடியவரான தனது துணைவியாரை அந்த கும்பாபிஷேக நிகழ்விற்கு அனுப்பி வைக்கின்றார். வல்வை முத்துமாரி அம்மனை வழிபட்ட அவரது துணைவியார் இப்பொழுது கோடியாக்கரை முத்துமாரி அம்மனையும் வழிபட்டு நிறைவடைகின்றார். இவை பற்றி எல்லாம் சிவகுமாரன் அடியேனுடன் மிகுந்த உணர்ச்சிப் பெருக்குடனும் பக்திப் பரவசத் துடனும் பகிர்ந்துகொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாவற்றிற்கும் மேலாக அம்பாள் தன்னை சரியான பாதையில் ஆற்றுப்படுத்திய அந்த நிகழ்வு தன்னை மெய் சிலிர்க்க வைத்த பாங்கினையும் மனம் உருகி வெளிப்படுத்தினார். இவ்வாறான அற்புதத்தை அனுபவிப்பதற்கு கிடைத்த சந்தர்ப்பமே தனக்கு வாழ்க்கையில் கிடைத்த மிகப் பெரிய பேறு என உணர்கின்றார்.

நான் வடமேற்குத் திசையில் இருக்கிறேன்... என அம்பாள் நறுக்கென வெளிப்படுத்திய அருள்வாக்கு மிகவும் பொருள் பொதிந்தது. அது சிவகுமாரனை ஆற்றுப்படுத்துவதாக மட்டும் அமையவில்லை. அம்பாளுடைய மூல வரலாறு தொடர்பான பார்வைக்கும் பயன்படுகின்ற பல்வேறு விடயங்களை உள்ளடக்கியதாகவும் அமைந்திருப்பதையும் நாம் காணலாம்.

எம்மை இந்த உலகிற்கு ஈன்ற தாயின் தாயன்பை, சிறப்பை, பெருமையை எல்லாம் எவ்வாறு போற்றுகின்றோம் வணங்குகின்றோம் என்பதை நாம் நன்கு அறிவோம். இதேபோன்று வல்வை மக்களை காலம் காலமாக காத்து அருள் செய்து வருகின்ற புனிதமான தாயாகவும் தாய்க்குத் தாயாகவும் விளங்கிக் கொண்டிருப்பவள் வல்வை முத்துமாரி அம்மன். மேலும் வல்வை மண்ணுக்கு நாடிவந்து கோயில் கொண்டு அருள்பாலித்து வருகின்ற சிறப்பிற்கும் பெருமைக்குமுரிய கண்கண்ட தெய்வமாக வழிபடப்பட்டு வருபவள். எமது மூதாதையர் காலத்திலிருந்து பல்லாயிரக் கணக்கான மெய்யடியார்களின் துன்ப துயரங்களை போக்குகின்ற அற்புதத் தாய். ஆபத்பாந்தவளாக விளங்கிக் கொண்டிருக்கின்ற எமது நகரத்தின் முழுமுதற் கடவுள். எமது மூதாதையர் காட்டிய பாதையில் எமது கருணைத் தாயின் சிறப்பை, பெருமையை போற்றுவோம். தாய்க்கு தாயாக விளங்கும் அம்பாளின் திருப்பாதங்களை சிக்கனப் பற்றி வணங்கி அம்பாளின் திருவருளைப் பெறுவோமாக.

ஓம் அம்பாள் துணை

✧✧✧✧✧



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருளாட்சி - 06

1999ஆம் ஆண்டு காலகட்டம். இந்தியாவிலிருக்கும் தனது தாயாரை கனடாவுக்கு ஸ்பொன்சரில் அழைப்பதற்கான செயற்பாடுகளில் நந்தினி முனைப்புடன் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார். யாராக இருந்தாலும் நாடிவருகின்ற அனைவரையும் உள்வாங்கி அவர்களது காரியங்களை நிறைவேற்றிக் கொடுப்பதில் பிரபல்யமானவர் எனப் பேசப்பட்டுக் கொண்டிருப்பவர் சாமி அப்பாத்துரை. இதனால் நந்தினியும் தனது ஸ்பொன்சர் செயற்பாட்டிற்காக அவரிடம் தான் செல்கின்றார். முதற் சந்திப்பில் இயல்பாகவும் மேலோட்டமாகவும் விடயங்கள் உரையாடப்படுகின்றன. இரண்டாம் முறை சந்திப்பிற்கு நாள் குறிக்கப்படுகிறது. அன்று முறைப்படி ஸ்பொன்சர் விண்ணப்பத்திற்கான செயற்பாடுகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. அதில் நந்தினி எழுதி இணைக்க வேண்டிய ஒரு கடிதமும் தேவைப்படுகிறது.

கடிதத்தில் உள்ளடங்கி இருக்கவேண்டிய விடயங்கள் பற்றி சாமி அப்பாத்துரை சொல்லிக் கொண்டிருக்கிறார். நந்தினி அதனைக் கவனமாகக் கேட்டு எழுதிக் கொண்டிருக்கிறார். நந்தினியை நேருக்கு நேராக எதிர்கொண்டு கடிதத்திற்கான உள்ளடக்கத்தை கூறிக்கொண்டிருந்த சாமி அப்பாத்துரையில் ஒரு மாற்றம் ஏற்படுகிறது. அங்கே சாமி அப்பாத்துரையின் அலுவலகம் ஒரு ஆலயமாக மாறுகிறது. ஸ்பொன்சர் கடிதத்தின் உள்ளடக்கம் பற்றி கூறிக்கொண்டிருந்த சாமி அப்பாத்துரை வல்வை முத்துமாரி அம்மனாக அங்கே வெளிப்படுகின்றார். சொல்வதைக் கேட்டு எழுதிக் கொண்டிருந்த நந்தினி வழிபட வந்த வல்வை முத்துமாரி அம்மனது அடியவராகச் செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்.

அன்றைய நாள் இருவருடைய வாழ்விலும் மறக்கமுடியாத நாளாக மாறுகிறது. அதனை வல்வை முத்துமாரி அம்மன் அவ்வாறு மாற்றுகின்றார். வல்வை மண்ணுடன் தொடர்புபட்டிருக்காதவர் சாமி அப்பாத்துரை. அவரில் வல்வை முத்துமாரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மன் முதன்முறையாக வெளிப்படுகின்ற தருணமாகவும், வெளிப்படுகின்ற நாளாகவும் அது அமைகிறது. இதேபோன்று சாமி அப்பாத்துரை அம்பாளாக வெளிப்பட்டு நந்தினிக்கு அருள் கட்டளை ஒன்றும் அங்கே விடுக்கின்றார்.

**"எனது ஆலயத்தின் வடமேற்கு சுவரில் வெடிப்பு விழுந்து விட்டது. உடனே வேண்டிய திருத்த வேலைகளை செய்து அதனைச் சரிசெய்"** இதனைக் கேட்ட நந்தினியின் உள்ளத்தில் மின்னலென மாற்றங்கள் ஏற்படுகின்றன. எங்கேயோ உறங்கிக் கொண்டிருந்த அம்பாளின் உணர்வுகள் ஊற்றெடுக்கின்றன. அவரின் சிறுவயது செயற்பாடுகளும் சிந்தனைகளும் மீண்டும் துளிர்விட ஆரம்பிக்கின்றன. ஆனாலும் இவற்றை எல்லாம் அவர் அப்பொழுது வெளியில் காட்டிக் கொள்ளவில்லை. அதேநேரம் ஆலயத்தில் ஒருவருக்கு சாமி கலைவந்து கூறும்பொழுது கூறப்படுபவர் அதனை பயபக்தியுடன் உள்வாங்கும் காட்சியை நாம் பார்த்திருக்கின்றோம். அதே போன்று வாக்குக் கூறப்படுகின்ற ஒரு அடியவராக அங்கே நந்தினி தன்னை வெளிப்படுத்துகின்றார். அது மட்டுமல்ல வல்வை முத்துமாரி அம்மனது வேண்டுதலை தான் நிறை வேற்றுவதாகவும் ஒரு சராசரி அடியவர் போல அதற்கு சம்மதம் தெரிவிக் கின்றார்.

நந்தினி வீட்டிற்கு சென்றவுடன் முதல் வேலையாக வல்வையில் வாழ்ந்து கொண்டிருக்கும் தனது பெரியப்பா முறை உறவான குகபிரதாசனுடன் (நந்தினியின் பெரியதாயாரின் கணவர்) தொடர்பு கொள்ளுகின்றார். சாமி அப்பாத்துரையில் அம்பாள் வந்து வெளிப்படுத்தியதை மீட்டுப் பார்க்கின்றார். அது பற்றி எதுவும் கூறாமல் ஆலயத்தின் வடமேற்கு பகுதி கட்டிடத்தில் ஏதாவது வெடிப்பு ஏற்பட்டுள்ளதா? என்பது பற்றி சுருக்கமாக விசாரிக்கின்றார். குகபிரதாசன் குடும்பத்தினர் வல்வை முத்துமாரி அம்மனது ஆலயத்தின் மேற்கு வீதியில்தான் குடியிருக்கின்றனர். நந்தினி விசாரித்த நேரம் அங்கே இரவு என்பதால் மறுநாள் பகல்வேளை நேரே சென்று பார்வையிட்டு பதில் கூறுவதாக குகபிரதாசன் நந்தினிக்கு தெரிவிக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுநாள் குகபிரதாசன் மிகுந்த ஆச்சரியத்துடன் நந்தினிக்கு பதில் கூறுகின்றார். நந்தினி விசாரித்த விடயம் அச்சொட்டான உண்மை என்பதை வெளிப்படுத்துகின்றார். அப்பொழுதுதான் நந்தினி நடந்தவற்றை குகபிரதாசனுடன் பகிர்ந்து கொள்கின்றார். அம்பாள் நிகழ்த்துகின்ற அற்புதத்தை எண்ணி இருவரும் பரஸ்பரம் தமது பக்தி உணர்வுகளையும் அம்பாள் அடியவர்களுக்கு நிகழ்த்தி வருகின்ற திருவிளையாடல் கள் பற்றியும் தமக்கிடையே உணர்வுபூர்வமாக பகிர்ந்து கொள்கின்றனர். இதன் பின்பு நந்தினி தனது பங்களிப்பாக ஒரு தொகைப் பணத்தை ஆலய சுவரின் திருத்த வேலைகளுக்காக அனுப்புகின்றார். ஆலய நிர்வாகத்தினரின் பங்களிப்புடன் வடமேற்கு மூலையில் வெடிப்பு ஏற்பட்ட வல்வை முத்துமாரி அம்மனது ஆலய சுவரின் திருத்த வேலைகள் சிறப்பாக நிறைவடைகின்றன.

நந்தினி கனடாவில் வாழ்ந்து கொண்டிருந்தாலும் அவர் வாழ்கின்ற கனடா நாட்டிற்கே அவரை நாடிவந்து வல்வை முத்துமாரி அம்மன் அவருக்கு தன்னை இவ்வாறு வெளிப்படுத்து கின்ற அற்புதத்தை நிகழ்த்துகின்றார். இவ்வாறு கனடாவில் வாழ்ந்து கொண்டிருக்கும் நந்தினிக்கு அம்பாள் வெளிப்பட்டு அங்கே அவரை ஆட்கொண்டதுடன் மட்டும் அம்பாளின் திரு விளையாடல்கள் நிறைவு பெறவில்லை. ஆன்மிகப் பாதையில் நந்தினியை மேலும் ஆழமாக ஆற்றுப்படுத்துவதற்கும் முத்துமாரி அம்மன் திருவுள்ளம் கொள்கின்றார். இவை எல்லாம் நந்தினியின் முற்பிறப்பின் ஆன்மிகத் தொடர்ச்சியுடன் தொடர்பு பட்ட திருவிளையாடல்கள் போலவே எண்ணத் தோன்றுகிறது. தற்பொழுது நாளும்பொழுதும் வல்வை முத்துமாரி அம்மன் நேரடியாகவும் மறைமுகமாகவும் நந்தினியின் வாழ்வில் பல அற்புதங்களை நிகழ்த்திக் கொண்டிருப்பதையும் உணர முடிகின்றது. இவ்வாறான திருவிளையாடல்களில் ஒன்றை யேனும் இச் சந்தர்ப்பத்தில் அம்பாள் அடியார்களுடன் பகிர்ந்து கொள்வது பொருத்தமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பாள் கேட்டுக்கொண்டது போலவே சுவர் திருத்த வேலைகள் இடம்பெற்று சில மாதங்கள் செல்கின்றன. அப்பொழுது ஒரு முறை தனக்கு சித்திரைக் கஞ்சி காய்ச்சித் தர வேண்டுமென வல்வை முத்துமாரி அம்மன் நந்தினியிடம் கேட்கின்றாள். தற்பொழுதும் நந்தினி குகபிரதாசனுடைய உதவியை பெறுவதற்கு முடிவு செய்கின்றார். குறிப்பிட்ட சித்திரைப் பௌர்ணமியின் பொழுது வல்வையில் அம்பாளுக்கு சித்திரைக் கஞ்சி காய்ச்சிப் படைத்து தனக்கு உதவுமாறு விநயமாக வேண்டுதல் செய்கின்றார். அம்பாளுடைய மெய்யடியவரான குகபிரதாசனும் அதனை முழு மனதுடன் ஏற்றுக் கொள்கின்றார். ஆனாலும் பல்வேறு வேலைகள் மத்தியில் அவரை அறியாமலே அதனை அவர் செயற்படுத்த மறந்துவிடுகிறார்.

நந்தினி கனடாவிலிருந்து இயல்பாக அம்பாளுக்கு சித்திரைக் கஞ்சி காய்ச்சி படைத்தாகிவிட்டதா? என விசாரிக்கின்றார். குகபிரதாசன் தான் அதனை மறந்துபோய் விட்டதை மிகுந்த வருத்தத்துடன் தெரிவிக்கின்றார். அதுமட்டுமல்ல அவர் தான் செய்த தவறுக்காக தன்னையே நொந்து கொள்கின்றார். மேலும் கஞ்சி காய்ச்சி படைப்பதற்கான நேரம் கடந்துவிட்டது பற்றியும் வருத்தத்துடன் நந்தினிக்கு எடுத்துக் கூறி ஆதங்கப்படுகின்றார்.

இப்பொழுதுதான் நந்தினி வல்வை முத்துமாரி அம்மன் தன்னிடம் கேட்டது பற்றி சற்று ஆழமாகச் சிந்திக்கின்றார். நீ எனக்கு சித்திரைக் கஞ்சி காய்ச்சி படை என்பதுதானே அம்பாளது வேண்டுதல். நான் எப்படி அதனை இன்னொருவர் மூலம் செய்யமுடியும் என்ற அம்பாளது அருட்கட்டளையில் உள்ள உண்மையின் தார்ப்பரியத்தை விளங்கிக் கொள்கிறார். நேரத்தை கவனிக்கின்றார். இங்கே கனடாவில் இப்பொழுது தான் அம்பாளுக்கு சித்திரைக் கஞ்சி காய்ச்சி படைப்பதற்கான மிகச் சரியான நேரம் என்பதை உணருகின்றார். நடந்தவை நல்லதுக்குத்தான் என்பதையும் விளங்கிக் கொள்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனடாவில் மிசுசாகாவில் நந்தினியின் வீடு அமைந்திருக் கிறது. சிறு வயதிலிருந்தே குடியிருக்கும் வீட்டை சுத்தமாகவும் முடிந்தவரை புனிதமாகவும் வைத்திருக்க வேண்டுமென்பது நந்தினியின் உள்ளார்ந்த விருப்பம். இதனால் அவரது வீடு இயல்பாகவே தூய்மை பேணப்படும் வீடு. அது அம்பாளது உற்சவ காலம் என்பதால் தற்பொழுது மேலும் இரட்டிப்பாக தூய்மை பேணப்பட்டுக் கொண்டிருப்பதையும் சிந்திக்கின்றார். இப்பொழுது அம்பாளது திருவுள்ளப்படி நந்தினியே சித்திரைக் கஞ்சியை தயார் செய்கின்றார். தனது மனம்போல தனது வீட்டிலேயே அம்பாளுக்கு நிறைந்த உள்ளத்துடன் அதனைப் படைத்து நிறைவடைகின்றார். அத்துடன் கூடவே அம்பாளுக்கு விருப்பமான வேப்பம் இலையும் வைத்து படைத்து பூரண நிறைவு பெறுகின்றார். கடந்த இருபது வருடங்களாக நந்தினி இவ்வாறு தான் தவறாது செயற்பட்டுக் கொண்டு வருகிறார். இதனால் வல்வை முத்துமாரி அம்மன் மீது நந்தினிக்கு உள்ள ஈடுபாடு, பக்தி, அவர் பற்றிய உள்ளார்ந்த உணர்வுகள் எல்லாம் ஆழமான தாகவும் அகன்றதாகவும் மாற்றமடைந்து சென்று கொண் டிருக்கிறது. இவை பற்றிய மேலும் பல பின்புல சம்பவங்களை நந்தினி உள்ளம் உருகி அடியேனுடன் பகிர்ந்து கொண்டார்.

நந்தினி தனது பத்து வயது வரையான காலப்பகுதி மட்டுமே வல்வை மண்ணில் வாழ்ந்து வந்துள்ளார். அவ்வாறு சிறுமியாக தனது பத்து வயதுவரை வல்வை மண்ணில் வாழ்ந்து கொண்டிருக்கும் காலம்வரை அவரது சிந்தனை, செயற்பாடுகள் எல்லாம் முத்துமாரி அம்பாள் தொடர்பானதாகவே இருந்து வந்துள்ளது. அம்பாள் பாதம் கழுவுதல், அம்பாள் பாதத்திற்கு நீர் வார்த்தல் ஆகிய புனிதமான திருத்தொண்டுகள் வல்வை முத்துமாரி அம்மன் ஆலயத்தில் இடம்பெறுவது வழக்கம். இதே போன்று அம்பாளது கருவறை தொடர்பான பொருட்கள், பூசைப் பொருட்கள் போன்றவை எல்லாம் குறிப்பிட்ட நாட்களுக்கு ஒரு முறை பளிச்சிடும் வகையில் மினுக்கி தூய்மை பேணுவதும் பெண்களது இன்னொரு திருத்தொண்டாகும். இவ்வாறு அம்பாளுடைய எல்லா வகையான திருத்தொண்டுகளையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயதும் அனுபவம் நிறைந்த பெண்களே பொதுவாக மேற் கொண்டு வருவது வழக்கம். ஆனால் நந்தினி தனது பத்து வயதுக்குட்பட்ட சிறுமியாக இருக்கும் காலத்திலேயே பெரியவர் களுடன் சேர்ந்து இவற்றை எல்லாம் செயற்படுத்துவதை வழக்கமாகக் கொண்டிருந்துள்ளார். படிப்பு, விளையாட்டு எல்லாம் அவருக்கு இரண்டாம் பட்சம்தான். நாள் தவறாது நேரம் தவறாது அதேநேரம் முழு விருப்பத்துடன் நந்தினி ஈடுபடுகின்ற செயற்பாடு என்பது அம்பாளது திருப்பணிதான். தற்செயலாக கைச்செலவுக்கு சிறியளவு பணம் கிடைத்துவிட்டால் அதனை அவர் அவரோடொத்த பிள்ளைகளைப் போல செலவு செய்வ தில்லை. அவர் ஓடிச்சென்று வாங்கும் பொருள் அம்பாளுடைய பாடல்கள் அடங்கிய ஒலிநாடா. ஏறத்தாழ நான்கு தசாப்தங் களுக்கு முன்பு ஒலிநாடாக்கள் மூலம் விரும்பிய பாடல்களை கேட்டு மகிழ்வதுதான் அப்போதைய நடைமுறையாக இருந்ததை தாய் மண்ணில் வாழ்ந்த அடியார்கள் மீட்டுப் பார்க்கமுடியும். இவ்வாறு தனது பத்து வயதுக்குட்பட்ட பருவத்திலேயே வல்வை மண்ணில் நந்தினியின் சிந்தனை, செயற்பாடு, பொழுதுபோக்கு என அனைத்துமே வல்வை முத்துமாரி அம்மன் மயப்பட்டதாகவே இருந்து வந்துள்ளன.

நந்தினி தனது சிறு பராயம் தொடக்கம் அம்பாள் மீது எவ்வாறு ஆழமான ஈடுபாட்டுடன் இல்வுலகில் வாழ்ந்து கொண்டிருக்கிறாரோ இதேபோன்று வல்வை முத்துமாரி அம்மனும் தனது கடைக்கண் பார்வையை, கருணையை இவர் மீது செலுத்தி வருவதற்கும் தவறுவதில்லை. அதனை நந்தினியும் தனது அன்றாட வாழ்வில் நன்கு உள்வாங்கி, உணர்ந்துதான் வாழ்ந்து கொண்டிருக்கிறார். இது தொடர்பான சில நிகழ்வுகளையும் இவ்விடத்தில் அம்பாள் அடியவர்களுக்கு வெளிப்படுத்துவது பொருத்தமானது.

நந்தினியின் முதலாவது குழந்தையை தொட்டிலில் போடு கின்ற நிகழ்வு 2001ஆம் ஆண்டு யூலை மாதம் மிசுசாகாவில் உள்ள அவரது வீட்டில் இடம்பெற்றது. அந்த நிகழ்வில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நந்தினியின் ஒட்டுமொத்த குடும்பமும் நிறைவடையக் கூடிய வகையில் வல்வை முத்துமாரி அம்மன் கருணையும், ஆசியும் அவர்களுக்கு முழுமையாகக் கிடைக்கிறது. அந்த குழந்தையை தொட்டிலில் போடும் நிகழ்வில் முறைப்படியான சமய சடங்குகளை நிகழ்த்தியவர் வல்வை முத்துமாரி அம்மனது பிரதம குருக்கள் சிவஸ்ரீ தண்டபாணிக தேசிகர் அவர்கள். குருக்கள் பிள்ளையார் பிடித்து சமய சடங்குகள் நிகழ்த்தி விநாயகப் பெருமானுக்கு தீபம் காட்டி ஆராதித்து குழந்தையை தொட்டிலில் போடும் நிகழ்வை கனடாவில் மங்களகரமானதாக நடத்தி வைத்துள்ளார்கள். இதேபோன்று நந்தினியின் வீட்டில் இருந்தவாறே வல்வை முத்துமாரி அம்பாளுடைய பிரதம குருக்கள் நந்தினியின் வீட்டிலுள்ள அம்மனது திருப்படத்திற்கு தீபம் காட்டியுள்ளார். எமது பிரதம குருக்கள் தீபம் காட்ட அம்பாளின் அருளையும் ஆசியையும் வேண்டி பிரார்த்திக்கின்ற பாக்கியமும் நந்தினியின் குடும்பத்தினருக்கு கனடாவில் இருக்கும் பொழுதும் கிடைத்துள்ளது. எல்லாமே அம்பாளது கருணை.

ஏற்கனவே பல தடவைகள் நந்தினியின் தாயார் விமலா தேவியுடனும் நந்தினியுடனும் இவை பற்றி எல்லாம் உரையாடி யிருந்தேன். மீண்டும் 17.12.2001 வெள்ளிக்கிழமை நந்தினியுடன் உரையாடுவதற்கு சந்தர்ப்பம் கிடைத்தது. அப்பொழுது இவை எல்லாம் இந்த பிறப்பில் தனக்கு கிடைத்த பெரும் பேறு எனவும் பெரும் பாக்கியம் எனவும் மனம் உருகி வெளிப்படுத்தி நிறை வடைந்தனர்.

ஒரு நந்தினி அல்ல இது போல ஏராளம் நந்தினிகள் வல்வை முத்துமாரி அம்மனால் ஆட்கொள்ளப்பட்ட அடியவர் களாக வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். ஒவ்வொரு வீட்டிலும் உள்ள எமது தாய் உள்ளத்தை நாம் எல்லோரும் நன்றாக உணர்ந்துள்ளோம். இதேபோன்று வல்வை மண்ணைச் சேர்ந்த ஒட்டுமொத்த மக்களும் வல்வை முத்துமாரி அம்மனையே தமக்கு தாய்க்கு தாயாக உணர்கின்றனர். அது மட்டுமல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தத் தாய் தமக்கு கருணை செய்து வருவதையும் தம்மை காத்து அருள்வதையும் நிதர்சனமாக உணர்ந்தவர்களாகவும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். வாழ்க்கையில் நம்பிக்கையும் மன நிறைவும் மானிட வாழ்விற்கு அடிப்படையானவை. அந்த நம்பிக்கையும் நிறைவும் வல்வை முத்துமாரி அம்மனால் வல்வை மக்களுக்கு நிறையவே கிடைத்து வருகிறது.

ஓம் அம்பாள் துணை

✧✧✧✧✧

## மகாலக்ஷ்மி


கப்பல் உரிமையாளர்களாகவும் கடல் வாணிபர்களாகவும் கப்பலோட்டிகளாகவும் வாழ்வியலை நடாத்திவந்த சிறப்புக்கும் பெருமைக்கும் உரியவர்கள் வல்வை மக்கள். இவ்வாறான கப்பல் பாரம்பரியம் மிக்க வல்வையின் நிறைவுக் கப்பல் வல்வைக்கு கொண்டு வரப்பட்டு வல்வை மண்ணிலேயே கரைதட்ட வைக்கப்பட்டு வல்வை மண்ணிலேயே அதன் வரலாறும் முடித்து வைக்கப்பட்டது. வல்வையின் அந்த நிறைவுக் கப்பலின் பெயர்தான் மகாலக்ஷ்மி. அது மட்டுமல்ல இந்த நிறைவுக் கப்பலான மகாலக்ஷ்மி கரைதட்ட வைக்கப்பட்டு அதன் வரலாறு முடிக்கப்பட்ட இடமும் வாடிவானும் வாடியடிக் கடற்கரையும்தான்.

அடியேனுக்கு ஏறத்தாழ பத்து வயதாக இருக்கும்பொழுது ஆயிரத்து தொள்ளாயிரத்து அறுபத்தோராம் ஆண்டளவில் இந்த நிகழ்வு இடம் பெற்றிருக்கலாம் என நினைக்கின்றேன். வாடிவானுக்கு வெளியே ஒரு சில மாதங்கள் கட்டில் இருந்தபொழுது எனது மூத்த சகோதரர்களுடன் சென்று கப்பலை ஏறிப் பார்க்கின்ற சந்தர்ப்பமும் கிடைத்தது. அதேபோல கரையில் படிப்படியாக அந்த பெரிய பாய்க்கப்பல் இல்லாமல் ஆக்கப்பட்ட காட்சியையும் நேரடியாகப் பார்க்கின்ற வாய்ப்பும் கிடைத்தது. இந்தக் கப்பலின் உரிமையாளர் வ.வ.இராமசாமிப்பிள்ளை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## உற்சவ கால நிகழ்வுகள் - 2022




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நெடியகாட்டுப் பிள்ளையார் ஆலய
குருக்களுடன் நூலாசிரியர்



வாடிவானின்
தற்போதைய தோற்றம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருளாட்சி - 07

1970ஆம் ஆண்டு தசாப்தத்தின் நடுப்பகுதியில் ஆதி கோவிலடியில் ஒரு மிகவும் துயரமான நிகழ்வு இடம்பெறுகிறது. உண்மையில் அது மனிதநேயத்திற்கு அப்பாற்பட்ட நிகழ்வு. சிறியவர், பெரியவர், ஆண், பெண் என்ற வேறுபாடுகளை எல்லாம் கடந்து ஒட்டுமொத்த மக்களது உள்ளங்களையும் வாட்டி வதைத்த நிகழ்வு. நாம் அறிந்தவரை வல்வையில் எங்கேயும் அவ்வாறான பரிதாபகரமான ஒரு நிகழ்வு இடம் பெறவில்லை என்றே கூறலாம்.

மாலை 7.00 மணியளவில் ஆதி கோவிலடிப் பகுதியில் ஒரு குழந்தையைக் காணவில்லை எனத் தேடிக் கொண்டிருக் கின்றனர். அந்தப் பகுதி முழுவதும் தேடியும் குழந்தை கிடைக்க வில்லை. நேரம் சென்றுகொண்டிருக்கின்றது. குழந்தையின் குடும்பத்தவர் மட்டுமன்றி உற்றார், உறவினர், ஊரவர் என அனை வரும் பரபரப்படைகின்றனர்.

அங்கே இடம்பெற்ற துன்பியல் நிகழ்வு இதுதான். ஏறத்தாழ மூன்று வயதுடைய ஒரு பெண் குழந்தை திடீரென காணாமல் போயுள்ளது. தனது மூத்த சகோதரியுடன் கடற்கரையில் நின்று விளையாடிவிட்டு வீட்டிற்கு திரும்பிவரும் பொழுது ஏழு வயதுடைய மூத்த சகோதரி வீட்டிற்கு திரும்பி வந்துவிட்டார். அவருக்குப் பின்னால் வந்து கொண்டிருந்த மூன்று வயது மதிக்கத்தக்க இளைய சகோதரி மாயமாக மறைந்துவிட்டதாக செய்தி பரவுகின்றது. இதனால் அந்தப் பகுதியிலுள்ள அனைவரும் குழந்தையைத் தேட ஆரம்பிக்கின்றனர். மூன்று வயதுடைய அந்த அழகான சிறிய குழந்தை காணாமல் போய்விட்டதென்பது அனைவரது உள்ளங்களையும் நெகிழ வைக்கிறது. இதனால் அன்றைய இரவுப்பொழுது அந்தக் கிராம மக்களுக்கு ஒரு துன்பியல் பொழுதாகவே சென்றுகொண் டிருந்தது. குழந்தை மூன்று வயதுடைய குழந்தையாக இருந்தமையால் இந்தக் குழந்தையை தமது குழந்தையாக உணர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பித்துவிட்டனர். எல்லோருமே உணர்ச்சி வசப்பட்டனர். எல்லோருமே தேடினார்கள். எல்லா இடங்களிலும் தேடினார்கள். துப்பறிபவர் போல துருவி துருவி சிந்தித்து பார்த்தனர். துருவி துருவி விசாரித்துப் பார்த்தனர். எதுவுமே நடக்கவில்லை, எதுவுமே தெரியவில்லை.

இந்த நிலையில் சராசரி மனிதர்கள் எவ்வாறு செயற்படு வார்களோ அதேபோன்று இந்த மக்களும் செயற்பட்டனர். மனித சக்திக்கு உட்பட்ட வரை காணாமல் போன குழந்தையைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். ஆனால் பயனேதும் கிடைக்கவில்ல. குழந்தை கிடைக்க வில்லை என்பது மட்டுமல்ல என்ன நடந்ததென்றும் தெரியவில்லை. எல்லாமே புரியாத புதிராகத்தான் இருந்தது. அதேநேரம் எல்லா வகையிலும் அவர்கள் சிந்தித்துப் பார்த்ததில் ஒரு விடயம் அவர்களுக்கு உறுதியாக தெளிவாகியது. எந்த வகையிலும் குழந்தை உயிருடன் இருப்பதற்கு வாய்ப்பு இல்லை என்பதுதான் அந்த கசப்பான உண்மை. இது அந்த பகுதி மக்களை நிலைகுலைய செய்தது. இவ்வாறான ஒரு கையறு நிலை மனிதர்களுக்கு வரும்பொழுது அவர்கள் தெய்வத்தை நாடுகின்றனர். இதுதான் இங்கேயும் இடம்பெற்றது. இந்த பகுதி மக்கள் தெய்வத்திடம் நீதி கேட்கின்றனர். ஒட்டுமொத்த மக்களுமே ஆண்டவனிடம் கையேந்தினர். அம்பாளிடம் வேண்டுதல் செய்தனர்.

ஆனால் சில சமயங்களில் எமது வாழ்வில் எது நடக்கக் கூடாது என்று நினைக்கின்றோமோ அது நடந்துவிடுகின்றது. இதுபோன்ற கசப்பான பல துன்பியல் அனுபவங்களை எமது தமிழ் மக்கள் யுத்த காலத்தில் நிறையவே சந்தித்துள்ளதையும் நாம் பார்த்திருக்கின்றோம். அதேபோன்றுதான் இங்கேயும் இடம்பெறுகின்றது. நடக்கக்கூடாது என நினைத்தது நடந்து விடுகிறது. அடுத்த நாள் பொழுது விடிகின்றது. ஆனால் அந்தக் கிராமத்தின் ஒட்டுமொத்த மக்களது உள்ளங்களையும் கசக்கிப் பிழிகின்ற அந்தத் துயரச் செய்திதான் அவர்களுக்குக் கிடைக் கின்றது. ஆதி கோவிலடி கிராமத்தின் மத்தியில் அமைந்துள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசிகசாலைக்கும் அங்கே அமைந்துள்ள பொதுக் கிணற்றுக்கு மிடையில் ஒரு மறைவான பகுதியில் அந்தக் குழந்தையின் உயிரற்ற உடல் பாயினால் சுற்றப்பட்ட நிலையில் அதிகாலை 5.00 மணியளவில் கண்டெடுக்கப்படுகிறது. இந்த குழந்தையின் இழப்பும் துன்பமும் அந்தக் குழந்தையின் பெற்றோருக்குரிய இழப்பாகவோ துன்பமாகவோ மட்டும் பார்க்கப்படவில்லை. அது ஒட்டுமொத்த மக்களினுடைய வேதனையின் வெளிப்பாடாக அமைகிறது.

மனிதன் உரிமையுடன் தெய்வத்திடம் நீதி கேட்கின்ற சில தருணங்களை நாம் வாழ்க்கையில் எதிர்நோக்குவதுண்டு. வேறுபாடுகள் அனைத்தையும் மறந்து ஒரே நோக்கத்திற்காக ஒருமித்த உணர்வுடன் ஆண்டவனிடம் ஆத்மார்த்தமாக வேண்டுதல் செய்வது. அதேபோன்றுதான் இங்கேயும் இடம்பெற்றது. அம்பாளிடம் அனைவரும் நீதி கேட்டனர். தாய்க்கு தாயாக இருக்கும் அம்பாளிடம் நீதி கேட்டனர். வல்வை தாயிடம் நீதி கேட்டனர். இது நீதியோ... இது முறையோ... இது தர்மமோ... இவை எல்லாவற்றையும் தாயே நீ பார்த்துக் கொண்டு இருக்கிறாயா. கண் திறந்து நடந்ததை காட்டமாட்டாயா என தமது உள்ளத்து உணர்வுகளை எல்லாம் அம்பாளிடம் தான் பக்தி நிறைந்த கேள்விகளாக கேட்டனர்.

ஆனாலும் பதில் ஏதும் கிடைக்கவில்லை. நாட்கள் கிழமைகள் ஆகியது. மூன்றாவது வாரமும் முடிந்துவிட்டது. எதுவும் இடம்பெறவில்லை. அனைவரது உள்ளங்களிலும் ஆழமான துன்பங்கள் நிறைந்திருந்ததே தவிர வேறு ஏதும் நடைபெறவில்லை. ஆனாலும் மக்கள் ஆழமான வேண்டுதல் களை தொடர்ந்து கொண்டிருந்தனர். நடந்ததை வெளிப் படுத்து..., நடந்ததைக் காட்டு..., நடந்ததைக் கூறு... என்ற பிரார்த்தனைகளை அம்பாள் மீது மக்கள் உள்ளார்ந்த உணர்வுடன் தொடர்ந்துகொண்டிருந்தனர்.

அம்பாள் தாய்க்கு தாய் அல்லவா? வல்வை மக்களின் தாய் அல்லவா? அந்த மக்களின் வேண்டுதலை அப்படியே பார்த்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருப்பாரா? அம்பாள் கண் திறந்தாள். அம்பாள் விடை கூறினாள். நான் காட்டுகின்றேன் என்று கூறினாள். இப்பொழுதே காட்டுகின்றேன் எனக் கூறினாள். அதனைச் செயற்படுத்த அங்கே அம்பாள் கண் திறக்கிறாள்.

அம்பாள் தங்கி ஓய்வு எடுத்தது, நடந்து வந்தது வாடி ஒழுங்கை. அதே வாடி ஒழுங்கையில் அமைந்துள்ள ஒரு சிறிய ஆலயம்தான் ராக்கிச்சி அம்மன் ஆலயம். இந்த காலகட்டத்தில் அடியேன் குடியிருக்கின்ற வீடு ஊரிக்காட்டில் அமைந்திருந்தது. ஆனாலும் வாடி ஒழுங்கையிலுள்ள நுணா மரத்தடியிலுள்ள ராக்கிச்சி அம்மன் ஆலயம் கீர்த்திமிகு ஒரு ஆலயமாக அந்த பகுதி மக்களால் வழிபடப்பட்டு வருவது பற்றி அடியேன் நன்றாக அறிந்திருக்கிறேன். அது மட்டுமல்ல இரவு வேளையில் சலங்கைச் சத்தம் போன்ற ஒலிகள் எழுப்பி தெய்வமொன்று நடமாடுவது பற்றி எமது மூத்தவர்கள் சொல்வதையும் நான் சிறு வயதிலேயே கேள்விப்பட்டுமுள்ளேன்.

அன்று ஒரு வெள்ளிக்கிழமை. வழமைபோல ராக்கிச்சி அம்மன் ஆலயத்தில் குழந்தை என அழைக்கப்படும் த. குழந்தைவடிவேல் பூசைச் செயற்பாடுகளை மேற்கொள்கின்றார். அப்பொழுது தான் அதிசயத்திலும் அதிசயமான அம்பாளுடைய இந்த அற்புத நிகழ்வுகள் எல்லாம் நடந்தேறுகிறது. இந்த அற்புத நிகழ்வுகள் ஒரு சிலருக்கு முன்னால் மட்டுமே இடம்பெற வில்லை. அம்பாளை வழிபட வந்த அடியார் உட்பட ஒட்டுமொத்த மக்களுக்கு முன்பாக இடம்பெறுகிறது. ராக்கிச்சி அம்பாள் நிகழ்த்திய இந்த அற்புத நிகழ்வு நாம் அறிகின்ற சராசரியான ஒரு அற்புத நிகழ்வு அல்ல. அம்பாள் துணையுடன் இதனை அனைவருடனும் பகிர்ந்துகொள்கிறோம்.

வல்வையில் பிறந்து வளர்ந்து வாழ்ந்து கொண்டிருப்பவர் களுக்கு வாடி ஒழுங்கை என்பது பரிட்சயமானது. அம்பாளுடைய ஆலயத்தின் வடமேற்கு மூலையில் நின்று வடமேற்கு பக்கம் பார்க்கின்ற பொழுது ஏறத்தாழ 30 மீற்றர் தூர இடைவெளியில் வாடி ஒழுங்கை தெரியும். அங்கேயிருந்து அப்படியே பிரதான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீதியைக் கடந்தால் வாடி ஒழுங்கைக்குள் இறங்கலாம். அவ் வாறு இறங்கியவுடன் அங்கே ஒரு அம்பாள் ஆலயம் வெளிப் படும். அதுதான் ராக்கிச்சி அம்மன் ஆலயம்.

அங்கே அன்றும் ராக்கிச்சி அம்மனை வழிபட அடியவர்கள் வந்திருந்தாலும் அவர்களது உணர்வுகள் எல்லாம் காணாமல் போன குழந்தை பற்றியதாகவே இருந்துள்ளது. குழந்தை காவு கொள்ளப்பட்டு ஒரு மாதம் ஆகின்ற நிலையிலும் பூசையில் கலந்துகொண்ட குழந்தையின் தூரத்து உறவினர்கள் மற்றும் அடியவர்கள் அந்த குழந்தையை மனதில் நிறுத்தித்தான் தமது வழிபாட்டை மேற்கொண்டுள்ளனர். குழந்தை காணாமல் போன விடயங்கள் எல்லாமே மர்மமாக தொடர்ந்து கொண்டிருந்தது. இந்த மர்மம் தொடரக்கூடாது, உண்மை வெளிவர வேண்டு மென்பதே அந்த பகுதியின் ஒட்டு மொத்த மக்களின் ஆதங்கங் களாக இருந்தது. அதைத்தான் அன்று ராக்கிச்சி அம்மனை வழிபட வந்த மக்களும் வேண்டி வழிபட்டுக் கொண்டிருந் துள்ளனர்.

அம்பாள் சிறுமியாக வடிவெடுத்து அடியவர்களின் வேண்டுதலை நிறைவேற்ற திருவுள்ளம் கொள்கின்றார். அந்த ராக்கிச்சி அம்பாள் ஆலயத்தில் இப்பொழுது அம்பாள் செயற்பட ஆரம்பிக்கின்றாள். இப்பொழுது பூசை நிறைவடைந்து விட்டது. பூசாரியும் நிலத்தில் விழுந்து வணங்கிக் கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் இந்த அற்புதம் ஆரம்பமாகின்றது. பூசாரியின் தலைமுடியை பிடித்து உலுக்கியவாறு பிள்ளையை கொலை செய்தவளை காட்டுகிறேன் வா என இழுத்துக் கொண்டு நடக்க ஆரம்பிக்கின்றார்.

ராக்கிச்சி அம்மன் ஆலயத்திலிருந்து மிக சொற்ப தூரத்திலுள்ள பருத்தித்துறை – காங்கேசன்துறை பிரதான வீதிக்கு வந்து அந்த வீதியூடாக நடந்து செல்கின்றாள். வழிபட வந்த அடியவர் கூட்டமும் வீதியில் சேர்ந்த கூட்டமும் மற்றவர் களும் தாயே! தாயே! என்றும் அரோகரா! அரோகரா! என்ற பக்தி நிறைந்த கோசங்களை எழுப்பிக்கொண்டே அம்பாளுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடந்து கொண்டிருக்கின்றனர். வேகமாக நடந்து கொண்டிருந்த அம்பாள் பிரதான வீதியிலிருந்து ஆதி கோவிலடிக்கு செல்லும் அந்த குறுக்கு வீதிக்குள் இறங்குகின்றாள். பெருங்கூட்டம் கூடிவிட்டது. எல்லோரும் பக்தியும் ஆச்சரியமும் அதிசயமும் கலந்த ஒரு உச்சமான உணர்ச்சியுடன் அம்பாளை பின்தொடர் கின்றனர். நடந்துசென்று கொண்டிருந்த அம்பாள் சரியாக அந்த வீட்டிற்கு முன்னாள் தரித்து நிற்கின்றாள். தொடர்ந்து தரித்து நின்றவர் தயங்காது வீட்டிற்குள் வேகமாக உட்புகுகின்றார்.

அந்த குழந்தை அணிந்திருந்த சில பவுன் நகைகளுக் காகவே இந்த துன்பியல் நிகழ்வு நடத்தேறியுள்ளது. தாய் ஸ்தானத்தில் உள்ள நடுத்தர வயதுடைய ஒரு பெண்தான் அதனை செய்துள்ளார். விதிவிலக்காக எமது சமுதாயத்திலும் மது போதைக்கு அடிமையாகிப் போகின்ற சில பெண்களை நாம் அரிதாக பார்க்கின்றோம். அவ்வாறு தான் மதிமயங்கி இங்கே இந்தச் சம்பவம் நடந்தேறியுள்ளது. இந்த நிகழ்வு நடந்தேறி ஏறத்தாழ அரை நூற்றாண்டு ஆகிறது. குழந்தையின் பெற்றோர் உட்பட இந்த நிகழ்வுடன் தொடர்புடையவர்கள் அனைவரும் காலமாகிவிட்டனர். ஆனாலும் யாருடைய மனதும் புண்படுவது தர்மமாகாது. அதனால் பெயர் விபரங்கள் அனைத்தையும் தவிர்த்து விடுகின்றோம்.

இங்கே இந்த சம்பவத்துடன் தொடர்புபட்ட இரண்டு குடும்பங்களுமே நல்ல குடும்பத்தவர்கள், நல்லவர்கள், உண்மை யில் இதனை ஒரு விபத்தாகவே அவர்கள் கருதினர். இவர்கள் எல்லோருமே தாங்கமுடியாத துன்பங்களை அனுபவித்தனர். உதாரணமாகக் கூறுவதானால் சம்பந்தப்பட்ட பெண்ணின் தந்தையார் அறத்தின்படி வாழ்கின்ற ஒருவர். இதனால் இந்த நிகழ்வை அவரால் ஜீரணிக்கமுடியாது உள்ளத்தால் குமுறி யுள்ளார். வேதனை அடைந்துள்ளார். அது மட்டுமல்ல சில நாட்களின் பின் இவ்வுலகில் வாழ விருப்பமின்றி தனது உயிரையே போக்கிக் கொண்டார். அது மட்டுமல்ல அந்த உயிரைப் போக்கிக் கொண்ட முறை கூட வித்தியாசமானது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதனையானது. இவை எல்லாமே ஒரு துன்பியல் நிகழ்வு என்பதை மட்டுமே இங்கே நாம் பார்க்க வேண்டியுள்ளது.

ஆனால் தெய்வங்கள் எப்பொழுதும் கண்களை மூடிக் கொண்டு இருப்பதில்லை. மெய்யடியார்களது உணர்வுகளுக்கு செவிசாய்க்காதும் இருப்பதில்லை.

அம்மனாக வந்து உண்மையினை வெளிப்படுத்திய சிறுமி இன்று குடும்பத் தலைவியாக இதே மண்ணில் வாழ்ந்து கொண்டிருக்கிறார். 05.03.2022 சனிக்கிழமை அவரது வீட்டிற்கு சென்று அவருடன் நேரடியாக உரையாடுவதற்கு அம்மனது திருவருள் கிடைத்தது. அப்பொழுது ஏறத்தாழ ஏழு வயதுச் சிறுமியாக இருந்தவர் தற்பொழுது குடும்பத் தலைவியாக பிள்ளைகளுக்கு தாயாக வாழ்ந்து கொண்டிருக்கின்றார். அவருடன் உரையாட ஆரம்பித்த பொழுது எப்போதோ இடம் பெற்ற நிகழ்வு பற்றி உரையாட ஆரம்பிக்கின்றேன் என்ற ஒரு தயக்கம் எனக்குள் இருக்கத்தான் செய்தது.

ஆனால் உரையாட ஆரம்பித்த உடனேயே இந்த நிகழ்வு நேற்று இடம்பெற்றது போல தெளிவாக அனைத்தையும் வெளிப்படுத்தினார். பேச ஆரம்பித்தபொழுதே இது இடம்பெற்று 46 வருடங்கள் ஆகின்றன என மிகுந்த பக்தி சிரத்தையுடன் குறிப்பிட்டார்கள். தொடர்ந்து சற்று நடுக்கத்துடன் தனது உணர்வுகளை அடியேனுடன் பகிர்ந்து கொண்டார்கள்.

இவருடைய பெயர் தில்லையம்பலம் லதா தற்பொழுது திருமதி லதா வர்ணகுலசிங்கம். அப்பொழுது இவர் குடியிருந்த வீடு வாடி ஒழுங்கையிலுள்ள ராக்கிச்சி அம்மன் ஆலயத்திற்கு மிகமிக அருகாமையில்தான் அமைந்திருந்தது. ராக்கிச்சி அம்மன் ஆலயத்தின் வடமேற்கு பக்கமாக 15 மீற்றர் தூரத்திள் குள்ளேயே வீடு இருந்துள்ளது. அது ஒரு வெள்ளிக்கிழமை, மாலை 7.00 மணியளவில் வழமை போல மணியும் சங்கு சத்தங் களும் ஒலிக்க ராக்கிச்சி அம்மனுக்கு பூசைகள் ஆரம்பமாகி யுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பொழுது சிறுமியாக இருந்த லதா தனது மூத்த சகோதரங்களுடன் வீட்டில் இருந்து லூடோ மட்டை விளையாடிக் கொண்டிருந்துள்ளார். அம்மன் ஆலயத்தில் பூசை இடம்பெறும்பொழுது சங்கு ஒலியும் மணி ஓசையும் கேட்ப தென்பது இந்த சிறுமிக்கு இயல்பான ஒன்றுதான். சம்பவம் இடம்பெற்ற அன்று ஆரம்பத்தில் அது அவருக்கு அவ்வாறுதான் இருந்துள்ளது. நேரம் செல்லச்செல்ல ராக்கிச்சி அம்மன் ஆலயத்திலிருந்து வந்த அந்த பூசைக்குரிய மங்கள ஒலிகள் அந்த சிறுமியை ஒரு வகையான பக்தி பரவசத்திற்குள் படிப்படியாக ஈர்த்துக்கொண்டிருந்துள்ளது. அவரை அறியாமலே உள்ளத்தில் ஏற்பட்டுக் கொண்டிருந்த இந்த பக்தி உணர்வுகள் அவரது உடலிலும் வெளிப்படத் தொடங்கியுள்ளது. அவருடைய தன்னறிவு படிப்படியாக அவருக்குள் இருந்து விடுபடத் தொடங்குகிறது. அவருடைய உடம்பு மயிர்ச்கூச்செறிகின்றது. அவர் முழுமையாக தன்னிலை மறக்கிறார். உடனிருந்த மூத்த சகோதரங்கள் அவரைக் கட்டுப்படுத்த முயற்சித்துள்ளனர். ஆனால் அது சாத்தியமாகவில்லை. அம்பாள் அவருடைய உடம்புக்குள் உட்புகுகின்றார். இதன்பின்பு நடந்தவை எவையும் தனக்கு தெரியாது என வெளிப்படுத்துகின்றார். இதனை அடியேனிடம் வெளிப்படுத்தும்பொழுது “இப்பொழுதும் என் உடம்பு மயிர்க்கூச்செறிகிறது” எனக் கூறி தன்னைத் தானே கட்டுப்படுத்திக் கொள்கின்றார்.

இப்பொழுது சிறுமி தன்னைத்தானே மறந்து அம்பாளாக செயற்படும் நிலை ஆரம்பமாகிறது. வீட்டுப் படலைக் கதவை தள்ளித் திறந்தவாறு ஆலயத்தை நோக்கி வேகமாக விரைந்து செல்கின்றார். அவ்வாறு செல்பவர் காட்டுகிறேன், காட்டுகிறேன் எனக் கூறியவாறு செல்கின்றார். அங்கே தாம் அடிக்கடி பார்க்கின்ற அந்த சிறுமிக்குள் இருந்து அம்மன் பேசுவதை ஆலயத்தில் நின்ற அனைவரும் உற்று நோக்குகின்றனர். அம்பாள் ஏதோ ஒன்றை செய்வதற்கு கண் திறந்துள்ளார் என்பதும் அவர்களுக்கு தெளிவாக விளங்குகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கே ஆலயத்தில் இப்பொழுது சங்கொலி, மணி ஒலி ஆகியவற்றுடன் உடுக்கு ஒலியும் சேர்ந்து ஒலிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. அங்கே உடுக்கு அடிப்பவர் உடுக்கு அடித்து உரு ஏற்றுவதுடன் சில கேள்விகளையும் அம்பாளிடம் கேட்கின்றார். அம்பாள் அவற்றிற்கு பதில் அளிப்பதாகத் தெரியவில்லை. மாறாக தான் வந்த காரியத்தை நிறைவேற்றுவதில்தான் அக்கறையுள்ளவராகவும் குறியாகவும் செயற்பட்டுள்ளார்.

அங்கே எந்த தடுமாற்றமும் இன்றி அம்மன் அந்த வீடு அமைந்திருக்கின்ற இடத்தினை நோக்கி வேகமாகச் செல் கின்றார். வீட்டிற்கு சென்றடைந்த அம்மன் கதவைத் திறந்து வீட்டிற்குள் செல்கின்றார். அங்கே மண் தரையாக இருந்த ஒடுக்கமான ஒரு இடத்திற்குச் செல்கின்றார். அங்கே குறிப்பிட்ட பகுதியை தனது கைகளினால் சுட்டிக்காட்டுகின்றார். அதற்குள் காவுகொள்ளப்பட்ட குழந்தையின் நகைகள் தோண்டி எடுக்கப் படுகின்றன. ஒட்டு மொத்த மக்கள் தேடியும் பொலிஸார் விசாரணை செய்தும் துப்பறியும் பொலிஸ் நாள் மோப்பமிட்டும் வெளிப்படுத்தப்படாதிருந்த உண்மை இப்பொழுதுதான் வெளிப் படுகின்றது.

குழந்தையின் தாய்மாமன் திரு. செல்லத்துரை சிவலிங்கம் இந்த நிகழ்வு இடம்பெற்றுக் கொண்டிருக்கும்பொழுது கண்கண்ட சாட்சியாக உடன் இருந்தவர். அவரை 2022ஆம் ஆண்டு வருடாந்த மகோற்சவத்தில் திருக்கல்யாணத் திருவிழா வின் பொழுது வைத்தீஸ்வரன் ஆலயத்தில் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. அப்பொழுதும் உரையாடினேன். அதன் பின்பும் தனியாக சந்தித்து உரையாடும் வாய்ப்பும் கிடைத்தது. அவரின் நேரடி காட்சியின் உணர்வுகளை இங்கே வழங்குகின்றோம்.

குழந்தை இறந்து அப்பொழுது ஒரு மாதம் நிறைவுபெற்ற நாள். இதனால் குழந்தையின் வீட்டில் 31ம் நாள் நிறைவேற்ற வேண்டிய சகல சமயச் சடங்குகளையும் மிக நிறைவாக நிறைவு செய்துள்ளனர். அன்று மாலை நேரம் ஆகிக்கொண்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெருங்கிய இரத்த உறவினர் பலரும் கூடியிருக்கின்றனர். அப்பொழுது வெளியில் மக்கள் கூட்டமாக சேர்ந்து வருவது போன்ற அந்த ஒலிகளுக்கிடையே அரோகராச் சத்தம் சற்று முனைப்பாகவும் எமக்குக் கேட்கின்றது. இவ்வாறான சத்தம் எமக்குக் கேட்டு ஒரு சொற்ப நேரத்திற்குள்ளேயே குழந்தை வடிவில் வந்துகொண்டிருந்த அம்பாள் எமது வீட்டிற்குள் பிரவேசிக்கின்றார்.

வீட்டிற்கு வந்த அம்மன் நேராக குழந்தையைப் பறிகொடுத்த துயரத்துடன் இருந்த தாயாரிடம் செல்கின்றார். அங்கே குழந்தையின் தாயாரின் தலைமுடியைப் பிடித்தவாறு வா என்னுடன் வா... வா என்னுடன் கூட வா... உன்னுடைய குஞ்சுவை கொன்றவளைக் காட்டுகிறேன் என பல்லை நறுமிய வாறு மிகுந்த ஆவேசத்துடன் மீண்டும் மீண்டும் கூறுகின்றார். இந்தக் காட்சி இப்பொழுதும் என் மனக்கண் முன்னே மிகத் தெளிவாகத் தெரிகிறது.

அப்பொழுதுதான் அங்கே கூடியிருந்த எம் எல்லோருக்கும் ஒரு தெம்பு ஏற்படுகின்றது. அம்பாள் கண்திறந்து வந்துள்ளாள் என அங்கேயிருந்த மூத்தவர்கள் கூறுகின்றனர். நாம் தினம் தினம் அம்மனை வேண்டி வெளிப்படுத்துமாறு மனம் நொந்து கேட்ட உண்மை வெளிவரப் போகிறது என எல்லோரும் நம்பு கின்றனர். இதற்கிடையில் அம்மன் என் சகோதரியை (குழந்தை யின் தாயாரை) கொறகொற என எமது வீட்டிற்குள்ளிருந்து வெளியே இழுத்து வருகின்றார். வெளியே வந்தவர் ஆவேசத் துடன் அவரை இழுத்துச் செல்கின்றார். நாங்களும் நடப்பதை நேரில் காணவேண்டும் என்ற உந்துதலால் அவர்களுடன் கூடவே செல்கின்றோம். அம்பாள் சரியாக அந்த வீட்டிற்குத்தான் செல்கின்றார். அப்பொழுது அந்தப் பெண்ணும் வீட்டில்தான் நிற்கின்றார். அம்பாள் அந்தப் பெண்ணை நோக்கி நீதான் கொலைகாரி... நீதான் கொலைகாரி... என எங்கள் எல்லோர் முன்னிலையிலும் உண்மையை வெளிப்படுத்துகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனாலும் அந்தப் பெண் அம்பாள் கூறுவதை மறுக்கிறார். எனக்கும் குழந்தைகள் இருக்கின்றது. நான் ஏன் கொலை செய்யப் போகிறேன் என பலவாறு கூறி தான் கொலை செய்ய வில்லை என மறுக்கிறார். ஆனாலும் அம்பாள் விடவில்லை. நீங்கள் சொல்ல மாட்டீர்கள்... இப்ப நம்புவீர்கள் தானே... இப்ப நம்புவீர்கள் தானே... எனக் கூறிக் கொண்டு அறைக்குள் பிரவேசிக்கின்றார். குழந்தையை கொலை செய்வதற்கு பயன்படுத்தப்பட்ட கயிறு போன்ற அந்த துணி நாடாவை பறனுக்குள் இருந்து எடுக்கிறார். குழந்தையை மயக்க மது கொடுத்ததையும் கூறுகின்றார். கூடவே அங்கே நகை புதைத்து வைத்துள்ள இடத்தையும் சுட்டிக் காட்டுகிறார். கூடியிருந்தவர்கள் அரோகரா ஒலியையும் அம்பாள் நாமங்களையும் சத்தமிட்டு ஒலிக்கின்றனர். இவ்வாறு நடந்துகொண்டிருக்கும்பொழுதே அம்மனுக்கு அருகில் நின்ற குட்டித்தம்பி என்ற இளைஞர் நிலத்தைத் தோண்டுகின்றார். நிலத்திற்குள்ளிருந்து இலை வடிவிலமைந்த தோடுகள், குழந்தையின் காப்புகள் என்பனவும் மீட்கப்படுகின்றன. இந்த நகைகள் ஒரு வெள்ளைத் துணியினால் சுற்றப்பட்டு புதைக்கப்பட்டிருந்தது.

அப்பொழுது குழந்தையின் பேத்தியார் தனது ஆதங் கத்தை அம்பாளிடம் கேட்கிறார். நகைகளை எடுத்துவிட்டு உயிரைக் கொல்லாமல் விட்டிருக்கலாம் தானே என சில நியாயமான கேள்விகளை அம்பாளிடம் மனம் நொந்து கேட்கின்றார். அவற்றிற்கும் அம்பாள் பதில் கூறுகின்றார். மக்கள் தேட ஆரம்பித்துவிட்டதால் தனக்கு ஆபத்து நேரிடும் என்பதால் கொலைக்கும் துணிந்துவிட்டார். அப்பொழுது நீங்கள் யார் தாயே எனவும் கேட்கின்றார். அதற்கு அவர் நான் ராக்கச்சி அம்மன் என பதிலும் கூறுகின்றார்.

ஓம் அம்பாள் துணை

✧✧✧✧✧



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அருளாட்சி - 08

நெய்தல் நிலத்து மக்களது வாழ்வியல் சற்று சோகமும் சோதனைகளும் நிறைந்தவையாகப் பார்க்கப்படுகின்றன. பண்டைய தமிழ் இலக்கியங்களிலும் இவை வெளிப்படுத்தப் பட்டிருப்பதை நாம் பார்க்கமுடியும். சங்ககால புலவர்கள் வெளிப் படுத்திய இவ்வாறான சோகமான வாழ்வியல் அனைத்து கடல் சார் சமுகங்களுக்கும் பொருத்தமானவை. ஆனால் இவ்வாறான பொதுவான சோகமான வாழ்வியல் அனுபவங்களுக்கு அப்பால் மேலும் ஆழமான வேதனை தரக்கூடிய நிகழ்வுகளும் இடம் பெறுவதுண்டு. அதிலும் நீண்ட தூர, நீண்ட கால கடலோடி களாக தொழில் புரிபவர்களுக்கு ஏற்படுகின்ற சோதனைகள் மிகுந்த துயர் நிறைந்தவையாக அமைவதுண்டு. அவ்வாறான ஒரு வாழ்வியல் அனுபவத்தையும் இவர்கள் மீது அம்பாள் காட்டுகின்ற கருணையின் ஆழம் பற்றியும் இத்தொடரில் அடியார் களுக்கு வெளிப்படுத்துகின்றோம்.

1970ஆம் ஆண்டு தசாப்தத்தின் முற்பகுதியில் க.பொ.த (உ.த) கல்வியை விஞ்ஞானப் பிரிவில் கற்றுக்கொண்டிருந்தவர் திரு. வேலுச்சாமி குலேந்திரசிகாமணி. ஆர்வத்துடனும் பல வாழ்வியல் கனவுகளுடனும் குலேந்திரசிகாமணி கல்வியைத் தொடர்ந்த பொழுதிலும் பல்கலைக்கழகத்திற்கு செல்வதற்கு அவருக்கு வாய்ப்பு கிடைக்கவில்லை. இதனால் தனது மூதாதையர்கள் போல இவரும் கப்பல் மாலுமியாக கப்பலில் தொழில் புரிய தொடங்குகிறார். வல்வை மண்ணில் வேலை செய்யும் வயதை அடைகின்ற அதிகமான இளைஞர்களின் வாழ்வியல் இவ்வாறுதான் இடம்பெற்றுவருகிறது. ஆனால் குலேந்திரசிகாமணியைப் பொறுத்தவரை அவர் தனது கப்பல் மாலுமித் தொழிலை எல்லோரையும் போல இயல்பாக செய்ய முடியாது போனதுதான் அவருக்கு மிகுந்த வேதனையை ஏற்படுத்தியது. அவர் கப்பலில் தொழில் புரிய ஆரம்பித்த காலத்திலிருந்து தீராத நோயினால் தினமும் அவதிக்கு உள்ளா கின்ற அவல நிலை அவருக்கு ஏற்படுகிறது. தினமும் வயிற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலியால் அவதிப்படுவது ஒரு புறம் - வேலை ஒப்பந்தப்படி ஒரு வருடம் நிறைவு பெறுவதற்கு முன்பே நோயின் அகோரத்தால் கப்பலில் இருந்து இடையில் இறங்குவது மறுபுறம் என முழு வாழ்க்கையுமே இடைவிடாத வேதனையுடன்தான் சென்று கொண்டிருந்தது. இவ்வாறு கப்பலில் இருந்து இறங்கி வைத்திய சாலையில் வயிற்றுவலிக்கு சிகிச்சை பெறுவது என்பது அவருக்கு வழக்கமாகிவிட்டது. தாங்கமுடியாத வேதனை தரும் அந்த கொடுமையான வயிற்றுவலியை எப்படியாவது குணமாக்க வேண்டும் என உறுதி கொண்டார். இதனால் மாறி மாறி பல இடங்களிலும் சிகிச்சை பெறுகின்ற செயற்பாடுகளில் ஈடுபடலானார்.

வல்லை முச்சந்திக்கு அண்மையில் வடக்கு திசையில் ஒரு தனியார் வைத்தியசாலை அக்கால கட்டத்தில் சிறப்பாகச் செயற்பட்டு வந்ததை பலரும் அறிந்திருப்பார்கள். குலேந்திரசிகாமணி அங்கே தங்கியிருந்து சிகிச்சை பெற்றுள்ளார். இதேபோல ஆணைப்பந்தி வைத்தியர் பசுபதியிடம் காட்டி அங்கேயும் தங்கி சிகிச்சை பெற்றுள்ளார். இவற்றைவிட சம்பந்தன் கிளினிக்கிலும் காட்டியுள்ளார். சம்பந்தன் கிளினிக்கில் போதனாசிரியரும் பேராசிரியருமாகிய ஸ்ரீதரனிடம் சிகிச்சை பெற்றுள்ளார். ஆனாலும் சூளைநோய் போன்ற இவரது வயிற்று நோயினை இவர்கள் எவராலும் சரியாக இனம்காணவும் முடியவில்லை, குணமாக்கவும் முடியவில்லை.

மாலுமியாகக் கடலில் கடமையாற்றிக் கொண்டிருக்கும் பொழுது கரையில் இறங்கி சிகிச்சை பெறமுடியாது. இதனால் சிகிக்சை பெறுவதற்காகவே இடை நடுவில் வேலையை விட்டு கப்பலில் இருந்து இறங்கிவந்துதான் இவ்வாறு சிகிச்சை பெற வேண்டியிருந்தது. இவ்வாறு ஒருமுறை அல்ல பலமுறை செயற்பட்டுவந்துள்ளார். ஆனால் யாரிடம் காட்டியும் எங்கே காட்டியும் என்ன நோய் என்றும் தெரியவில்லை. வேதனையும் குறையவில்லை. மறுபுறம் சகோதரிகளை கரைசேர்க்க வேண்டிய கடமை, தலைப் பிள்ளையாக இருப்பதனால் வீட்டின் பொருளாதாரத்தினை சுமக்க வேண்டிய பொறுப்பு என இவ்வாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையின் எல்லாப் பக்கத்தாலும் இவர் மீது சுமைகள் சுமத்தப்பட்டிருந்தன. இந்த சுமைகளை குலேந்திரசிகாமணி சுமப்பதற்கு முழு விருப்பம் உள்ளவராகத்தான் காணப்பட்டுள் ளார். ஆனால் அவருக்கிருந்த கொடுமையான நோயினால் இந்த சுமைகளை எல்லாம் அவர் சரியாக சுமந்து செல்லமுடியாத நிலைக்கு தள்ளப்பட்டார். இது அவரை மேலும் வேதனையும் விரக்தியும் அடையும் நிலைக்கு இட்டுச்சென்றது. இவ்வாறான சூழ்நிலையில் குலம் தன்னையும் நொந்து தனது பிறப்பையும் நோகின்ற கசப்பான நிலைக்கு ஆளானார். குலத்தின் கட்டிளமைப் பருவம் வேதனையும் விரக்தியும் நிறைந்த பொழுதுகளாக சென்றுகொண்டிருந்தது.

வல்வை மக்கள் வீரம் நிறைந்தவர்கள். அதேபோலவே ஆன்மிக ஈடுபாடும் நிறைந்தவர்கள். இதனால் வல்வையின் ஒவ்வொரு குறிச்சியிலும் ஆலயங்கள் அமைந்துள்ளன. ஆனால் வல்வையின் ஒட்டுமொத்த மக்களுமே தமது தாயாகக் கருதி நாளும்பொழுதும் வழிபட்டு வரும் கடவுள் வல்வை முத்து மாரி அம்மன். இப்பொழுது குலமும் தான் வழிபடுகின்ற எல்லா இஷ்ட தெய்வங்களின் பாதங்களிலும் தனது துன்பங்களை ஒப்புவிக்கின்றார். அதேநேரம் தாய்க்கு தாயாக விளங்கும் அம்பாளிடம் தனது துன்பங்களையும் மனக்குறைகளையும் தாளாத துன்பத்துடன் வெளிப்படுத்துகின்றார். தனக்கு கருணை காட்டுமாறு கண்ணீர் சிந்தி வழிபாடு செய்கின்றார்.

குலத்தின் வேண்டுதல்களுக்கு அம்பாளும் கண் திறக்கின் றார். முதல்நாள் கனவில் இரண்டு பெண் குழந்தைகள் அம்பாள் ஆலயத்தின் முகப்பில் வெளிப்படுகின்றனர். ஆலய முகப்பில் களுவேறிக்கு அண்மையில் காணப்படுகின்றனர். அதில் ஒரு சிறுமி ஆலயத்திற்குள் நடந்து செல்கின்றார். சற்று நிறம் குறைந்த இன்னொரு சிறுமி ஆலயத்தின் முகப்பு வரை சென்று பின்பு ஆலயத்தின் வடக்கு பக்கத்தால் மேற்கு நோக்கி நடந்து செல்கின்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைத் தொடர்ந்து அடுத்த நாள் அந்த அற்புதம் நிகழ் கிறது. அறுபது வயதைத் தாண்டியவர் போல் தோற்றமளிக்கும் அந்த அம்மையாரின் முகத்தில் தாயன்பு பளிச்சிடுகின்றது. ஒரு சராசரி தாய் போல வருகின்றார். குலத்திற்கு மிக அருகில் வருகின்றார். அருகில் வந்தவர் தனது வலதுகையினால் இட மிருந்து வலமாக குலத்தின் வயிற்றில் ஒரு முறை மெதுவாகத் தடவிவிடுகின்றார். இயல்பாக ஆனால் மிகத் தெளிவாக அந்த செயற்பாடு இடம்பெறுகிறது.

திடீரென குலம் விளித்துக் கொள்கின்றார். அப்பொழுது தான் தெரிகிறது தான் கண்டது கனவு என்பது. தான் மனமுருகி அம்பாளை வழிபட்டதை மீட்டுப் பார்க்கின்றார். அதேநேரம் கனவில் வயிற்றை தடவிவிட்ட அந்த தாயார் பற்றி சிந்திக்கின் றார். அந்த தாயாரின் முகத்தில் வெளிப்பட்ட தாய்க்குரிய கருணையின் குளிர்ச்சியினை உணருகின்றார். அதனை உணரும் பொழுது அவரது உள்ளத்திலும் ஒரு தெளிவு ஏற்படுகிறது.

அன்று இரவுப்பொழுது நிறைவுபெறுகிறது. அடுத்த நாள் விடியலுக்காக பொழுது விடிந்துவிட்டது. விடிந்த பின்பு மெது மெதுவாக ஆரம்பிக்கும் வயிற்றுவலி அன்று குலத்திற்கு ஏற்பட வில்லை. ஆனால் குலத்தின் உள்ளத்தில் வழமையாக ஏற்படு கின்ற அந்த வயிற்றுவலி பற்றிய சிந்தனைதான் இருந்தது. ஆனால் வயிற்றில் சிறிதளவேனும் வலி ஏற்படவில்லை. பல தடவைகள் தண்ணியாக கழியும் மலம் கழியவில்லை. அன்று ஒரு முறை மட்டுமே அதுவும் இயல்பாக மலம் போனது.

அன்றைய விடியற்பொழுது குலேந்திரசிகாமணியின் வாழ்க்கையின் விடியற்பொழுதாகவே மலர்ந்தது. இரவில் கனவில் தாயாக வந்தவர் வயிற்றை தடவிய அந்த பசுமையான செயற்பாட்டுடன் அந்த கொடுமையான நோயும் நோய் உணர்வு களும் அறவே அற்று போய்விட்டன. இந்த நிகழ்வு இடம்பெற்று நான்கு தசாப்தங்கள் ஆகிவிட்டன. அன்று குணமடைந்த சூளை நோய் போன்ற அந்த வயிற்றுவலி இன்றுவரை மீண்டும் ஏற்படவே இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்தியம் இல்லை, மருந்தும் இல்லை, வல்வை மண்ணை வல்வை மக்களை காத்தருளுவதற்கு நாடிவந்து குடி கொண்ட அந்த அம்பாளுடைய பெருங்கருணை ஒன்றுதான் குலத்தை குணமாக்கியது. இதை யாருடன் பகிரமுடியும், எப்படி பகிரமுடியும். நாளும் பொழுதும் அம்பாளை நினைத்து உள்ளம் உருகுவதைத் தவிர வேறு என்ன செய்யமுடியும். இவ்வாறுதான் அம்பாளுடைய திருவருளும் வல்வை மக்களின் உணர்வுகளும் காலம் காலமாக இடம்பெற்று வருகிறது.

சமுத்திரங்களின் மத்தியில் தத்தளித்துக் கொண்டிருக்கும் கப்பலில் தனிமையில் வாழுகின்ற வாழ்வின் விரக்தி, அதே நேரம் இதேபோன்று தீராத நோய்கள் தொடர்பான கொடூரங்கள் இவற்றை எல்லாம் மாலுமியாகக் கடமையாற்றிய குலம் மனம் விட்டு அடியேனுடன் பகிர்ந்து கொண்டார். வயிறு எரிந்து கொதித்துக் கொண்டிருக்கும். ஆறுதல் கூறி அரவணைக்க யாரும் இல்லை. தற்காலிக நிவாரணத்திற்கான மருந்தும் இல்லை. தலையணையை வயிற்றில் போட்டு அமுக்கியவாறு படுத்திருந்தபடி வேதனையைத் தாங்குவதைத் தவிர வேறு எந்த மார்க்கமுமே இருப்பதில்லை என கடலோடி வாழ்வின் தன்மை களையும் துன்பங்களையும் குலம் வெளிப்படுத்தினார்.

குலத்தை போலவே வல்வையில் ஆயிரக் கணக்கான கடலோடிகள் தற்பொழுதும் அம்பாளின் கருணையை நினைத்தவாறுதான் தமது கடல்சார் வாழ்வை வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அவர்களுக்கு அம்பாளும் தனது வற்றாத கருணையை பொழிந்த வண்ணம்தான் இருந்து வருகின்றார். இதுதான் வல்வை மண்ணின் ஆன்மிக வாழ்வின் அத்திவாரம்.

தற்பொழுது குலேந்திரசிகாமணி கனடாவில் மொன்ரியல் நகரில் சுகதேகியாக வாழ்ந்து கொண்டிருக்கிறார். ஆன்மிக வாழ்வு என்பது அவருக்கு அடிப்படை. அதேநேரம் சமுகசேவை யாக யோகாசனத்தை கற்றுத்தரும் பள்ளியை நடாத்தி வருகின்றார். வல்வை மண் பல்துறை ஆற்றல் நிறைந்த மண்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதை வல்வை மக்கள் நன்கு அறிவார்கள். வல்வை மக்கள் தாம் செல்கின்ற இடங்களெல்லாம் வல்வையின் சிறப்பையும் பெருமையையும் வெளிப்படுத்தி வருகின்றனர். குலேந்திர சிகாமணியின் இவ்வாறான யோகாசன பயிற்சிச் செயற்பாட்டால் சிறுவர்கள் மட்டுமன்றி வயது முதிர்ந்தவர்கள், ஆண், பெண் என அனைத்து தரத்தினரும் நன்மை பெற்று வருகின்றனர். வல்வை மண்ணின் இன்னொரு ஆற்றலை மொன்ரியல் நகர மக்கள் அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர்.

ஓம் அம்பாள் துணை

✧✧✧✧✧

## நடந்தவை

1990ஆம் ஆண்டளவில் விமானக் குண்டுவீச்சு மூலம் வல்வை மண்ணை முற்றாக அழிப்பதற்கான ஒரு முயற்சி மேற்கொள்ளப்பட்டது. சில நாட்கள் தொடர்ச்சியான குண்டுவீச்சு நிகழ்த்தப்பட்டது. இந்த முயற்சியில் முழுமையாக வெற்றியடையாதபோதும் குறிப்பிட்ட சில பகுதிகளில் முழுமையான அழிவுகள் ஏற்பட்டதையும் நான் மறுப்பதற்கில்லை.

இவ்வாறு மிகக் கூடிய அழிவுகள் ஏற்பட்ட பகுதியில் ஒரு அபூர்வமான செயல் நிகழ்ந்திருந்தது. இதனை அப்பொழுது ஏனையவர்களுடன் நேரடியாகவே சென்று பார்வையிட அடியேனுக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. பல வீடுகள் அங்கே முழுமையாக சிதைவடைந்திருந்தன. ஆனால் அந்த வீட்டு சாமியறை மட்டும் உடையாது சேதமின்றி முழுமையாகக் காப்பாற்றப் பட்டிருந்தது. இன்னும் சில இடங்களில் சாமியறை உட்பட முழு வீடுமே சிதைவடைந்திருந்தது. ஆனால் அங்கே சாமியறை அலுமாரியும் சாமிப்படங்களும் மட்டும் காப்பாற்றப்பட்டிருந்தன. இவ்வாறு சாமியறை, சாமிப்படங்கள் குறிப்பிட்ட பகுதியில் மட்டுமல்ல பரவலாக வல்வையில் பல இடங்களிலும் காப்பாற்றப்பட்டிருந்ததையும் நாம் அவதானிக்க முடிந்தது.

வல்வை மக்களின் ஆன்மிக பலத்தையும் தெய்வங்களின் ஆழமான அருளையும் அப்பொழுது முழுமையாக உணரமுடிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருளாட்சி - 09

*1996*ஆம் ஆண்டு அம்பாளுடைய வருடாந்த மகோற்சவம் இடம்பெற்றுக் கொண்டிருக்கிறது. அம்பாள் வசந்த மண்டபத்தி லிருந்து உள்வீதி உலா வந்து வெளிவீதிக்கு வருவதற்கு ஆயத்த மாகிக் கொண்டிருக்கின்றார். அம்பாளின் மெய்யடியவர்கள் அம்பாளை மனமுருகி வழிபாடு செய்து கொண்டிருக்கின்றனர்.

ஆலய வழிபாடு தொடர்பாக வல்வை மக்கள் பெருமைப் படுகின்ற விடயங்கள் ஏராளம் உள்ளன. ஆண்கள் வேறாகவும் பெண்கள் வேறாகவும் தனித்தனி நிரையில் நேர்த்தியாக நின்று வழிபாடு செய்துவருகின்ற சமய ஒழுங்கையும் பாரம்பரியத்தினை யும் நாம் மெச்சாமல் இருக்கமுடியாது. இதேபோன்று அம்பாள் உற்சவ காலங்களில் வீட்டையும் வீட்டுச் சூழலையும் மட்டுமன்றி பிரதான வீதிகளைக் கூட தண்ணீர் ஊற்றி கழுவி சுத்தம் பேணுகின்ற நடைமுறையை நாம் வேறெங்குமே காண முடியாது. ஆலய வழிபாட்டிற்காக அயல் கிராமங்களிலிருந்து வருகை தருகின்றவர்களும் மற்றும் பலரும் பல சந்தர்ப்பங்களில் மனம்விட்டு இவ்வாறான சிறப்புக்களையும், ஊரின் தனித்துவம் பற்றிய தமது உணர்வுகளையும் எம்முடன் பகிர்ந்துகொண்டும் உள்ளனர்.

அன்று அம்பாளுடைய உற்சவத்தின் நிறைவு நாட்களை எதிர்நோக்கிய காலப்பகுதி அது. அடியவர்களின் நெருக்கடிக்கு மத்தியிலும் ஆண் பெண் அடியவர்கள் வழமைபோல தனித்தனி நிரையாக நின்று வழிபாடு செய்து கொண்டிருக்கின்றனர். எல்லோருடைய உள்ளங்களும் பக்திப் பரவசத்தால் நிறைந்திருக் கிறது. நடுத்தர வயதுடைய அந்த பெண்மணியும் இவ்வாறு அம்பாளது பக்தியால் கட்டுண்டவராகக் காணப்படுகின்றார். அதேபோல அந்த அம்மையாருக்கு அந்த தருணத்தில் அம்பாளுடைய அனுக்கிரகம் சற்று உயர்வாகவே கிடைத் திருப்பது வெளிப்படுகின்றது. அந்த அம்மையார் பக்தி நிலையில் படிப்படியாக தன்னை மறந்து செல்கின்றார். அவருக்குள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பாளுடைய சக்தி உட்புகுந்ததால் அவர் உரு ஆடத் தொடங்குகின்றார். இவை எல்லாம் இயல்பானவை என்பதனை நாம் எல்லாம் நேரடியாகப் பார்த்தும் இருக்கின்றோம்.

ஆனால் அன்று அங்கே இடம்பெற்றுக் கொண்டிருந்தவை நாம் வழமையாகக் காணுகின்ற இயல்பான சூழலுக்கு முற்றிலும் வித்தியாசமானவை. அந்த பெண்மணி அம்பாளுடைய திருவருளுக்கு பாத்திரமாகி அதனால் உரு ஏற்பட்டு ஆடத் தொடங்குகின்றார். அவ்வாறு பெண்கள் நிரைக்குள் நின்று ஆரம்பத்தில் உரு ஆடிக் கொண்டிருந்தவர் பெண்கள் நிரைக்குள் நின்று வெளியேற முயற்சிக்கின்றார். அப்பொழுது அருகில் நின்ற பெண் அடியவர்கள் சிலர் அவ்வாறு செல்ல விடாது கட்டுப்படுத்த முயற்சிக்கின்றனர். ஆனாலும் உரு ஆடிய படி பெண் அடியவர்களின் கட்டுப்பாட்டையும் மீறிக்கொண்டு அந்த பெண்மணி பெண்கள் நிரையிலிருந்து வெளியேறு கின்றார்.

அவ்வாறு வெளியேறிய அந்த பெண்மணி அம்பாளுக்கு முன்பாக நின்று உரு ஆடவில்லை. ஆண் அடியவர்கள் நிரைக்கும் பெண் அடியவர்கள் நிரைக்கும் இடைப்பட்ட பாதை போன்ற அப்பகுதிக்குள் நின்றும் உரு ஆடவில்லை. இவற்றிற்கு மாறாக ஆண்கள் தனி நிரையாக நின்று வழிபட்டுக் கொண்டிருக்கும் பகுதிக்குள் பிரவேசிக்க முயற்சிக்கின்றார். இவ்வாறு ஆண்கள் பகுதிக்குள் பிரவேசிக்க முயற்சித்தவர் சாதாரண உரு ஆட்டத்துடன் சாதாரணமாக பிரவேசிக்க முயற்சிக்கவில்லை. ஆவேசமாக ஆடி ஆவேசமாக ஆண்கள் பகுதிக்குள் பிரவேசிக்க முயற்சிக்கின்றார். இந்த நிலையில் அந்த சூழலிலிருந்து ஆண்கள், பெண்கள், சிறுவர்கள்... என அனைத்து அடியவர்களது பார்வைகளும் உரு வந்து ஆடிக் கொண்டிருக்கும் அந்த பெண் அடியவர் மீது குவிகின்றது.

அதேநேரம் அம்பாள் கலை வந்து உரு ஆடிக் கொண்டிருக்கும் அந்த அம்மையார் ஆண்கள் நிற்கும் அந்தப் பகுதிக்குள் வேகமாக பிரவேசித்து விடுகின்றார். மிக நெருக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாக அங்கே ஆண் அடியவர்கள் காணப்படுகின்றனர். அந்த நெருக்கத்தின் மத்தியிலும் அம்மன் கலை வந்து ஆடிக் கொண் டிருக்கும் அந்த அம்மையார் தனது இரண்டு கைகளாலும் இரண்டு பக்கங்களிலுமுள்ள ஆண்களை விலத்தியவாறு உள் பகுதிக்குள் சென்று கொண்டிருக்கிறார். இவை எல்லாம் அந்த பகுதியில் காணப்பட்ட ஆண் அடியவர்களுக்கு சற்று சங்கடமாகத் தான் தெரிகிறது. ஆனாலும் அந்த அம்மையார் உள்ளே பிரவேசித்து செல்வதற்கு ஆண் அடியவர்கள் முடிந்த வரை ஒதுங்கி வழிவிடவே செய்தனர். இவ்வாறு ஏதோ ஒரு விதமாக அந்த அம்மையார் ஆண்கள் பகுதிக்குள் ஆவேசமாக ஊடுருவி சென்று விடுகின்றார். இவ்வாறு ஆண்கள் பகுதிக்குள் சென்றவர் அங்கே ஆலயத்திற்குள் உள்ளவர்கள் யாரும் சற்றும் எதிர்பார்க்காத ஒரு செயலை மேற்கொள்கின்றார். அங்கே அமைதியாக சராசரி அடியவர்களுள் ஒருவராக நின்று கொண்டிருந்த அந்த அடியவரிடம் தான் இவர் செல்கின்றார். அவ்வாறு சென்றவர் அமைதியும் அடக்கமும் நிறைந்த ஆனால் சராசரி அடியவரில் ஒருவராகக் காணப்பட்ட அந்த அடியவரின் கையினை கெட்டியாகப் பிடிக்கின்றார். அது மட்டுமல்ல அவ்வாறு கெட்டியாகப் பிடித்து ஆவேசமாக உரு ஆடிக் கொண்டே பின்வருமாறு ஒரு அருள்வாக்கும் கூறுகின்றார்.

"நீ வெள்ளிமலைக்கு போ... நீ வெள்ளிமலைக்குப் போ..." இதனை அந்த ஆண் அடியவர் சற்றும் எதிர்பார்க்கவில்லை. அதுமட்டுமன்றி இது பற்றி அவருக்கு எதுவும் புரியவுமில்லை. அம்பாள் கலை வந்த இந்த பெண்மணி இவ்வாறு கூறுகிறார். இதனுடைய விளக்கம் என்ன என்பது பற்றி அவருக்கு எதுவுமே விளங்கவில்லை. அருள்வாக்கு கூறிய அந்த பெண் அடியவரை யும் யார் என்றும் அவருக்கு தெரியவில்லை.

அதேநேரம் அங்கே ஆண்கள் நிற்கும் பகுதிக்குள் ஒரு பெண் அடியவர் புகுந்து ஆண் அடியவரின் கையை கெட்டியாகப் பிடித்து அருள்வாக்கு கூறுவதென்பது ஒரு சாதாரண விடயமல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதையும் அங்கே கூடியிருந்த அடியவர்கள் உணரவே செய்தனர். எது எவ்வாறு இருந்தபொழுதிலும் அந்த அம்மையார் கூறிய அருள்வாக்கினுடைய விளக்கத்தை எவராலுமே புரிந்து கொள்ள முடியவில்லை.

வருடாந்த மஹோற்சவம் நிறைவடைந்தபின் காலப் போக்கில் மற்றவர்கள் இதனை மறந்துவிடுவது என்பது இயல்பானதே. ஆனால் சம்பந்தப்பட்ட ஆண் அடியவரால் அதனை இலகுவில் மறந்துவிட முடியவில்லை. அம்பாளது ஆலயத்திற்குள் வைத்து அதுவும் வருடாந்த மஹோற்சவம் இடம்பெற்றுக் கொண்டிருக்கும்பொழுது அனைத்து அடியவர் கள் முன்னிலையில் அம்பாள் இந்த அருள் வாக்கினை வழங்கி யுள்ளார். அவர் மிக ஆழமான ஆன்மிக ஈடுபாடுள்ள ஒரு குடும்பத்திலிருந்து வந்தவர் என்பது உண்மைதான். இவ்வாறு கூறப்படும் அந்த அருள்வாக்கு அவருக்கு ஒரு புது அனுபவம். அது சாதாரணமான விடயமாக இருக்கமுடியுமா என்பதனை சம்பந்தப்பட்ட அந்த ஆண் அடியவரும் அவரது துணைவியாரும் ஆழமாகச் சிந்திக்கவே செய்தனர். அதனை மீண்டும் மீண்டும் மீட்டுப்பார்த்தனர்.

அவர்களது இவ்வாறான உணர்வுகள், எதிர்பார்ப்புகள், சிந்தனைகள் எதுவுமே வீண்போகவில்லை. அதேபோல அம்பாள் பேரருள் நிறைந்தவர், பெருங்கருணை நிறைந்தவர் என்பதனையும் மிக விரைவாகவே தமது வாழ்வியலால் அவர்கள் உணர்ந்துகொள்ளவும் ஆரம்பித்தனர்.

வெள்ளிமலைக்கு போ என அம்பாள் கூறி சில மாதங் களிலேயே இயல்பாக பல விடயங்கள் கைகூடுகின்றன. அவர் ஏற்கனவே வெளிநாட்டில் கடமைபுரிந்த சேவைகளின் பின்னணி யில் அவர் மீண்டும் வெளிநாடு செல்கின்றார். தென் ஆபிரிக்கா பகுதியில் உள்ள பொஸ்வானா நாட்டிற்கு தமது துணைவியாரு டன் செல்வதற்கு எல்லாவிதமான விடயங்களும் இயல்பாக நடந்தேறுகின்றன. அங்கே ஒரு துறையில் கணக்காளர் நாயக மாக மீண்டும் தொழில்புரிய ஆரம்பிக்கின்றார். மீண்டும் எல்லா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித வசதிவாய்ப்புக்களுடன் அந்த குடும்பம் தமது வாழ்க்கையை வாழ ஆரம்பிக்கின்றது. ஒரு வெள்ளிமலை மினுமினு எனவும் பளபள எனவும் எவ்வாறு அழகும் பொலிவும் நிறைந்து காணப் படுமோ அதேபோன்று அவர்களும் மிக உச்சமான நிறைவான வாழ்க்கையை பொஸ்வானா நாட்டில் வாழ ஆரம்பிக்கின்றனர். அப்பொழுது தான் அவரும் அவரது துணைவியாரும் படிப்படியாக அம்பாள் வெள்ளிமலைக்கு போ என்று கூறியதன் அர்த்தத்தை தமது வாழ்வியலால் உணர ஆரம்பிக்கின்றனர்.

அது மட்டுமல்ல தமது வாழ்வியலால் வெள்ளிமலை போன்ற வாழ்வியலை வாழ்ந்து கொண்டிருந்த அந்த அடியவருக்கு தனது கண்களாலும் அதனைக் காணுகின்ற அற்புத நிகழ்வையும் அம்பாள் அவருக்கு நிகழ்த்திக் காட்டுகின்றார்.

அம்பாளின் அடியவர் பொஸ்வானா நாட்டில் உயர்வான வாழ்க்கையை மட்டும் வாழவில்லை. அவர் வசித்துக் கொண்டிருந்த பகுதியான ஹபோர்னி **(Gaborne)** மலைகளும் மலைச் சிகரங்களும் நிறைந்த உயர்வான ஒரு பகுதியாகும். அன்று காலை 7.00 மணி. வழமைபோல இந்த அன்பர் வீட்டிலிருந்து வேலைக்கு தனது காரில் வளைந்து வளைந்து செல்லும் மலைகள் நிறைந்த அந்த பகுதிகளுக்கூடாகச் சென்று கொண்டிருக்கிறார். மலைகள் எங்கும் பனி படர்ந்திருக்கின்றன. ஓரளவு விடிந்துவிட்ட காலைப்பொழுது. மெதுமெதுவாக சூரியன் மேலே கிளம்பிக் கொண்டிருக்கிறான். சூரியனிலிருந்து ஒளிக்கதிர்கள் பனிபடர்ந்த அந்த மலைகள் மீதும் மலைச் சிகரங்கள் மேலும் விழுகின்றன. அந்தச் சந்தர்ப்பத்தில் அந்த மலைச் சிகரங்களுக்கு நடுவிலே ஓங்கி உயர்ந்து நிற்கும் பனி படர்ந்த அந்த பெரிய மலையின் மீதும் சூரியக் கதிர்கள் பட்டு தெறிக்கின்றன. இவற்றின் ஒட்டுமொத்த வெளிப்பாடாக அங்கே தகதகவென பட்டொளி வீசி ஜொலிக்கின்ற முழுமையான அந்த வெள்ளிமலையின் காட்சியை இந்த அன்பர் கண்குளிரக் காணுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் காட்சி அவரது உள்ளத்தை தொடுகிறது. உடல் சிலிர்க்கிறது. அம்பாள் கூறிய வெள்ளிமலையை அந்த அன்பர் காணுகின்ற பாக்கியம் அவருக்குக் கிடைக்கிறது. வெள்ளிமலைக்கு போ... என்று அம்பாள் உற்சவத்தின் பொழுது இவ்வாறு அடியார்கள் மத்தியில் கூறியதன் முழுமையான தார்ப்பரியத்தை அந்த அன்பர் அன்றுதான் ஐயம் திரிபற உணருகின்றார். அவரது வாழ்வும் வெள்ளிமலை, வாழுகின்ற இடமும் வெள்ளிமலையாக அமைந்திருக்கும் அதிசயம் அங்கே வெளிப்படுகிறது. அம்பாளின் பேரருள் நிறைந்த இந்த கருணையினை எண்ணி அவரும் அவரது துணைவியாரும் பக்திப் பரவசத்தால் திக்குமுக்காடிப் போகின்றனர். நாளும்பொழுதும் அம்பாள் நினைவுடன் அவள் கருணையால் உள்ளம் உருகியவாறு வாழ்கின்ற நிறைவும் அவர்களுக்கு கிட்டியது.

ஒரு மனிதன் ஆன்மிக ஈடுபாடு உள்ளவராகவும், மனித நேயம் மிக்கவராகவும் அதேநேரம் சமுகத்திற்காக தமது வாழ்வியால் வாழ்வதென்பது எல்லோருக்கும் சாத்தியமானதல்ல. எல்லோருக்கும் அது வாய்ப்பதும் இல்லை. ஆனால் இந்த அன்பர் அவ்வாறான ஒரு வாழ்வைத்தான் வல்வை மண்ணில் வாழ்ந்து கொண்டிருப்பதை நாம் பார்த்திருக்கின்றோம். தற்பொழுதும் பார்க்கின்றோம். இவ்வாறானவர்களைத்தான் ஆண்டவனும் அதிகம் நேசிக்கின்றான். இதனைத்தான் தெய்வப் புலவர் திருவள்ளுவரும் கனகச்சிதமாக எம் எல்லோருக்குமே வெளிப்படுத்துகின்றார்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்.

இதனால்தான் வல்வையில் தாய்க்குத் தாயாக இருக்கும் வல்வை முத்துமாரி அம்பாளது அருட்கடாட்சத்திற்கும் இந்த அன்பர் ஆளானார். இந்த அன்பர் ஏற்கனவே வெளிநாட்டில் உயர் பதவிகளில் கடமைபுரிந்தவர். கொழும்பில் சொந்தமான வீடு உட்பட வசதிவாய்ப்புக்களுடன் உயர்வான வாழ்வியலை வாழ்ந்து கொண்டிருந்தவர். 1983ஆம் ஆண்டு இடம்பெற்ற கறுப்பு ஜூலை நிகழ்வினால் அனைத்தையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழந்து எமது தாய் மண்ணுக்கு திரும்பியவர் தொடர்ந்து இன உணர்வுடன் மண்ணுக்காகவும் மக்களுக்காகவும் பொது வாழ்வில் நிறைவான சேவையை மக்களுக்காக ஆற்றிக்கொண் டிருந்தவர்.

கல்வித் தகைமை இருந்தும், தொழிற்தகைமை தொழில் அனுபவம் இருந்தும் தான் மட்டும் சுக வாழ்வு வாழ்வதில் நாட்டம் செலுத்தாது இருந்த ஓர் அன்பர். அப்படிப்பட்ட தன்னலமற்ற வாழ்வு வாழ்ந்து கொண்டிருந்த இந்த அன்பரது வாழ்வில் மீண்டுமொரு முறை ஒளி ஏற்றுவதற்காக அம்பாள் திருவுள்ளம் கொண்டுள்ளார். அந்த திருவுள்ளத்தின் வெளிப்பாடுதான் அம்பாளின் இந்த வெள்ளிமலை அற்புதம். 1996ஆம் ஆண்டு மகோற்சவ காலத்தில் அம்பாளின் இந்த அருள்வாக்கு அவருக்கு கிடைக்கிறது. அதே ஆண்டு நவம்பர் மாதம் அவர் பொஸ்வானா நாட்டிற்கு குடும்பத்துடன் செல்கின்றார். 1997ஆம் ஆண்டு முற் பகுதியில் அம்பாளின் அற்புதத்தின் தார்ப்பரியத்தை இந்த அன்ப ரும் அவரது துணைவியாரும் முழுமையாக உணருகின்றார்.

அம்பாள் கண்கண்ட தெய்வம். அம்பாள் அனைவரது துன்பங்களையும் போக்குபவர். ஆபத்பாந்தவளாக வந்து உதவு கின்றவர் என அம்பாள் தொடர்பான கருணை நிறைந்த நிகழ்வு களையும் அற்புதங்களையும் சில சம்பவங்களையும் உதாரண மாக வெளிப்படுத்தி இந்த அன்பர் அம்பாள் உணர்வுகளை மனம் விட்டு அடியேனுடன் பகிர்ந்து கொண்டார்.

அடியேன் வெளிப்படுத்தாமலே இந்த மண்ணின் மைந்தர் யார் என்பதை பல அடியார்களும் ஊகித்திருப்பீர்கள். ஆனாலும் அனைத்து வாசகர்களும் தெரிந்துகொள்வதற்காக அவர் யார் என்பதை இங்கே வெளிப்படுத்துகின்றோம். இந்த கட்டுரையை எழுதிக் கொண்டிருக்கும் சமயத்தில் வல்வையின் நகரபிதாவாக அவர் கடமையாற்றிக் கொண்டிருக்கிறார். எமது நகரபிதா திரு. சபாரத்தினம் செல்வேந்திரா தான் அந்த அம்பாளின் மெய்யடியவர். அம்பாளுடைய கருணைக்கு பாத்திரமான இந்த அன்பரது தந்தையார் சபாரத்தினம். அவரது தாயார் மருதர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதிர்காமர் மரபில் வந்த தங்கரத்தினம். இவர்களும் மிக ஆழமான ஆன்மிக நம்பிக்கை உள்ளவர்கள். இந்த குடும்ப பின்னணியிலிருந்து வந்தவர் தான் திரு. ச. செல்வேந்திரா.

செல்வேந்திராவின் துணைவியார் சரஸ்வதி அவர்களும் அம்பாளிடம் அளவில்லாத பக்தி கொண்டவர். அம்பாள் தமது வாழ்க்கைக்கு ஒளியேற்றிய இந்த திருவிளையாடல் நிகழ்வை யாருடனும் பகிர்ந்து கொள்ள விரும்பாமல் மிகுந்த தன்னடக்கத்துடன் தமக்குள்ளே பேணிவர விரும்பியுள்ளார். இதுவரை காலமும் அவ்வாறுதான் பேணப்பட்டும் வந்துள்ளது. ஆனாலும் அவர் சிவபதம் அடைந்துவிட்ட நிலையில் அம்பாள் கருணையுடன் இந்த திருவிளையாடல் நிகழ்வினை திரு. செல்வேந்திரா அவர்கள் அடியேனிடம் பகிர்ந்துகொண்டார்.

ஓம் அம்பாள் துணை

✧✧✧✧✧

## சூரனாட்டம்

**கந்தஷட்டி விரதம் இருப்பவர்களுக்கு சூரன்போர் நிகழ்வு உச்சமான பக்திப் பரவசம் நிறைந்த நிகழ்வு. சிறுவர்களுக்கு வேடிக்கை நிறைந்த கொண்டாட்டமான நிகழ்வு. சூரனும் கம்பீரமானது. சூரனை ஆட்டுகின்றவர்களும் கம்பீரமானவர்களாக விளங்கும் மண் வல்வை மண். இவ்வாறு பலம் மிக்க அதேநேரம் கைதேர்ந்தவர்களால் மண்டி போட்டு ஆகாயத்தில் வீசி எறிந்து பின்பு ஏந்தி பல சாகசங்களுடன் ஆட்டப்படும் இந்த சூரனாட்டம் உண்மையில் பிரமிக்கத்தக்கதாக இருக்கும்.**

**இவ்வாறு வல்வையைச் சேர்ந்த இந்த கைதேர்ந்தவர்கள் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம், வல்வை வைத்தீஸ்வரன் ஆலயம், பொலிகண்டி கந்தவனக்கடவை ஆலயம் என்ற ஒழுங்கில் ஒரே குழுவினர் தொடராக இந்த சூரன்போர் செயற்பாட்டில் தளராது ஈடுபட்டு வருவார்கள். 1980ஆம் ஆண்டு தசாப்தத்தின் மத்திய காலப்பகுதி வரை இந்த செயற்பாட்டை எம்மவர்கள் தொடர்ந்துகொண்டிருந்தனர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருளாட்சி - 10

உற்சவ காலங்களில் எல்லா ஆலயங்களிலும் தாகசாந்தி செயற்பாடுகள் இடம்பெற்று வருவது ஒரு இயல்பான விடயம். அதேபோல் இவ்வாறான இறை கைங்கரியங்களுக்கு விஷேட மகத்துவங்கள் இருப்பதும் இயல்பானதே. அம்பாளுடைய உற்சவ காலத்தில் ஆலயத்தின் தெற்கு வாசலில் நூற்றாண்டு வரலாற்றுடன் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் தாகசாந்தி செயற்பாட்டிற்கும் ஒரு மகத்துவம் இருக்கிறது. தாகசாந்தி அடைகின்ற ஒவ்வொருவரும் அதன் தனித்துவத்தை தாமாக உணர்ந்து உள்ளார்ந்த நிறைவு அடைகின்ற மகத்துவத்தை இங்கே நாம் பார்க்கமுடியும். இதன் ஓர் அங்கமாக தாகசாந்தி பெறுகின்ற அடியவர்கள் தமது கைகளைக் கூப்பி வணங்கி நன்றி சொல்லுகின்ற உருக்கமான நிகழ்வுகளும் சில தருணங்களில் இடம்பெறுகின்றன.

அம்பாள் ஆலயத்தின் தெற்கு வாசலில் அடியவர்கள் தாகத்தை தணிப்பதற்காக வழங்கப்படும் தண்ணீர் அம்பாளு டைய பூங்கொல்லையிலிருந்து எடுக்கப்படுகிறது. இந்த தண்ணீரில் ஒரு விஷேட புனிதமும் குளிர்மையும் இருப்பது மட்டு மன்றி அது ஒருவருடைய தாகத்தை முழுமையாகத் தணிக்கும் இயல்புள்ளதாகவும் அமைந்துள்ளது. இதனால்தான் விரதம் இருப்பவர்கள், அங்க பிரதட்சணை செய்பவர்கள் உட்பட அம்பாளுடைய உற்சவ காலத்தில் நேர்த்தி செயற்பாடுகளை மேற்கொள்பவர்கள், மற்றும் அம்பாள் ஆலயத்தில் தொண்டு புரிந்து வருபவர்கள் என அனைவரும் விருப்பத்துடன் நாடிவந்து தாக சாந்தியடைந்து மனநிறைவு பெற்று வருகின்றனர். இந்த பாரம்பரியம் இன்றுவரை தொடர்ந்து கொண்டிருக்கிறது. இந்த தாகசாந்தி செயற்பாட்டில் ஆண்களின் பங்களிப்பு இருந்தாலும் பெண்களின் பங்களிப்பு காத்திரமாக இருப்பதை காண முடிகிறது. இதேபோன்று இந்த செயற்பாடு பல பேருடைய நேரடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைமுக பங்களிப்புடன் ஒரு கூட்டு முயற்சியான செயற்பாடாக காணப்படுகின்றது. இருந்தாலும் காலங்காலமாக பொறுப்பாக இருந்து செயற்படுத்தி வருகின்ற சில மெய்யடியவர்களும் காணப்படுகின்றனர். இவர்கள் தமது தொண்டை நிறைவாக நிறைவேற்றி வருகின்றனர்.

ஏறத்தாழ ஒரு நூற்றாண்டிற்கு முன்பு நறுவிலடி ஒழுங்கை யைச் சேர்ந்த ஒரு கணவன் மனைவி இருவரும் இணைந்து மிகுந்த அர்ப்பணிப்புடன் இந்த தாகசாந்தி செயற்பாட்டை மேற் கொண்டு வந்ததை அறியமுடிகிறது. *1950*ஆம் *1960*ஆம் ஆண்டு தசாப்த காலங்களில் செல்வநாயகி என்ற அம்மையார் இதனை மிகுந்த அர்ப்பணிப்புடன், இதனை தனது பிறப்பின் கடமை என உணர்ந்து செயற்படுத்தி வந்துள்ளனர். இவரைத்தான் பெரியவர் கள் கொழுக்கட்டை ஆச்சி எனவும் சிறுவர்கள் கொழுக்கட்டை அப்பாச்சி எனவும் உரிமையுடன் அழைத்து வந்துள்ளனர். கொழுக்கட்டை ஆச்சி இறைபதம் அடைந்ததை தொடர்ந்து அவரது சகோதரனின் மகள் மாரிமுத்து என்பவர் அந்த பணியை தொடர்ந்து வந்துள்ளார். அவருக்கு பின்பு பொதுவாக ஐயர் என மக்களால் அழைக்கப்படும் இராஜேந்திரத்திடம் இந்த பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது. இராஜேந்திரம் அவர்கள் பொறுப்பாக இருந்தாலும் கொழுக்கட்டை ஆச்சியின் உறவு முறையுள்ள சொர்ணகாந்தி அம்மாதான் களத்தில் இருந்து அதனை செயற் படுத்துவதில் காத்திரமான பங்கு வகித்து வந்துள்ளார். அவர் தற்பொழுதும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

தற்பொழுது எல்லோரும் நேசத்துடன் சூரியா என அழைக் கின்ற திருமதி சிவகாந்தன் சூரியரத்தினம் அவர்கள் பழமை மாறாது இந்த தாகசாந்தி செயற்பாட்டை முன்னின்று நிறைவாக நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார். இவர் கொழுக்கட்டை ஆச்சி தாகசாந்தி செயற்பாட்டை மேற்கொண்ட காலத்திலிருந்து இதனை இன்றுவரை தொடர்ந்துகொண்டிருக்கின்றார். தான் இல்லாத காலத்திலும் இந்தத் தொண்டை தொடர்ந்து மேற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கொள்ளுமாறு தன்னிடம் கேட்டுக்கொண்ட தகவலை தன்னடக்கத்துடனும் மனநிறைவுடனும் பரிமாறிக் கொண்டார்.


தற்பொழுது நடுத்தர வயதை அடைந்த அனைவருக்கும் இங்கே இடம்பெற்றுக் கொண்டிருக்கும் தாகசாந்தி செயற்பாடு தொடர்பாக ஆழமான உணர்வுகள் இருக்கும் என நம்புகின் றோம். இந்த தாகசாந்தி செயற்பாட்டின் பொழுது பயன்படுத்தப் படும் அனைத்து பொருட்களும் வெண்கலப் பாத்திரங்களாகவே பளபளத்துக் கொண்டிருப்பதை நாம் எல்லோரும் பார்த்திருக் கின்றோம். வாய் அகண்ட அண்டா போன்ற நீர் சேமித்து வைத்திருக்கும் பெரிய பாத்திரம், பெரிய தாம்பாளம் போன்ற தட்டுகள், பெரிய சிறிய செம்புகள், குவளைகள், கிளாசுகள் என அனைத்துமே வெண்கலப் பாத்திரங்களாகவே பளபளத்துக் கொண்டிருக்கும். மட்டுமன்றி தினமும் புளி போட்டு மினுக்கப் பட்ட குவளைகளில் நீர் நிரப்பி வைத்திருக்கின்ற பாங்கு இயல்பாகவே அந்த நீரை அருந்தவேண்டும் என்ற உணர்வைத் தூண்டும். அந்த உணர்வுடன் உச்சமான தாகத்தில் அங்கே சென்று நீர் அருந்தும் பொழுது கிடைக்கின்ற அந்த நிறைவு எதற்குமே ஈடாக முடியாது. இவ்வாறான பசுமையான உணர்வு களை நாம் அனைவரும் இன்றும் நெஞ்சில் சுமந்தவர்களாகவே வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.


அம்பாளுடைய ஆலயத்தில் காலங்காலமாக இடம்பெற்று வரும் இந்த தாகசாந்தி செயற்பாடு ஒரு ஆன்மிகத் தொண்டு மட்டுமல்ல இது அம்பாளுடைய கைங்கரியமும்கூட. இங்கே தாக சாந்தி செயற்பாட்டில் ஈடுபட்டுவருபவர்கள் இதனை மிக நன்றாகவே அனுபவத்தால் உணர்ந்தவர்களாக உள்ளனர். அம்பாள் பூங்கொல்லைக் கிணற்றிலிருந்து குடங்களில் எடுத்து வரப்படும் குளிர்மையான நீர் இங்கே கிடாரங்களில் நிரப்பி வைக்கப்படும். இவ்வாறு குடங்களில் எடுத்து வருகின்ற நீர்தான் தாகசாந்திக்காக வழங்கப்பட்டு வருகிற மரபு காலங்காலமாக இருந்து வருகிறது. ஆனால் சிலர் பூங்கொல்லையிலிருந்து




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சிவலிங்கம்


ஜெயலக்ஷ்மி [லதா]


யோகேந்திரசிகாமணி


நூலாசிரியருடன் செல்வேந்திரா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தாகசாந்திச் செயற்பாட்டில்
சொர்ணகாந்தியும் சூரியரத்தினமும்



உற்சவகால தாகசாந்திச் செயற்பாடு - 2022



குகன்



அம்பாள் ஆலயத்தின் வடமேற்குப் பகுதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழாய் மூலம் இந்த இடத்திற்கு தண்ணீரைக் கொண்டுவந்து அடியார்களது தாகத்தை போக்கும் செயற்பாட்டிற்கு மாற்றி யுள்ளனர். ஆனால் அதனை அவர்களால் தொடர முடிய வில்லை.

எமது பாரம்பரியங்களை ஆகக் குறைந்தது ஆலயங்களி லேனும் நாம் தொடரவேண்டும். தெய்வங்களின் திருவுள்ளமும், அடியவர்களின் நிறைவும் எமது முன்னோருடைய இந்த பாரம் பரியங்களில்தான் தங்கியுள்ளன என்பதை நாம் தெரிந்தோ தெரியாமலோ சிந்திக்க தவறுகின்றோம். கால சூழ்நிலைக்கு ஏற்ப தற்பொழுது சில்வர் பாத்திரங்களும் பயன்படுத்தப்படு கின்றன. ஆனால் அடியவர்கள் வெண்கலப் பாத்திரங்களில் உள்ள தண்ணீரைத்தான் விரும்பி எடுத்து அருந்துகின்றனர்.

தற்பொழுது வாழ்ந்து கொண்டிருக்கும் திருமதி சொர்ண காந்தி, திருமதி சூரியரத்தினம் ஆகியோர் 10 வயதிலும் குறைவான பருவத்திலிருந்தே இந்த தாகசாந்தி செயற்பாட்டில் உள்ளார்ந்த உணர்வுடன் தாமாக விரும்பி ஈடுபட்டு வருகின்றனர். இருவருமே கொழுக்கட்டை ஆச்சியுடன் உடனிருந்து செயற்பட ஆரம்பித்தவர்கள். அரை நூற்றாண்டைக் கடந்துவிட்ட பின்பும் இதனை தமது உயிர்மூச்சுடன் கலந்த சேவையாக நினைத்து தொடர்ந்து கொண்டிருக்கின்றனர். இதனை தமது பூர்வ புண்ணிய பலனால் கிடைத்த தொண்டு என்றே இருவரும் கருது கின்றனர். அதனால்தான் வருத்தங்கள் வந்தாலும் அம்பாளது உற்சவ காலங்களில் அந்த வருத்தங்கள் இருந்த இடம் தெரியாது மறைந்து விடுவதாகவும் அதனால்தான் இடைவிடாது இந்த திருத்தொண்டை தங்களால் மேற்கொள்ள முடிவதாகவும் அடியேனிடம் மனம்விட்டு தமது உணர்வுகளை பகிர்ந்து கொண்டனர்.

இந்த தாகசாந்தி செயற்பாட்டிற்கு நேரடியாகவும் மறைமுக மாகவும் ஆண், பெண் என பல வகைப்பட்டவர்களும் தமது பங்களிப்புகளை வழங்கி வருகின்றனர். இதேபோன்று பகுதி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரமாகவும் முழுநேரமாகவும் இந்த தாகசாந்தி செயற்பாட்டில் பல மெய்யடியவர்கள் இந்த இறை கைங்கரியத்தில் ஈடுபட்டுள்ளனர். ஈடுபட்டு வருகின்றனர். நான் சிறுவனாக இருந்த காலத்தில் பாக்கியம் ஆச்சி, குஞ்சரம் ஆச்சி போன்றவர்கள் தினமும் அங்கேயிருந்து தாகசாந்தி செயற்பாட்டில் ஈடுபட்டதை பார்த்திருக்கிறேன். இதேபோன்று ஏராளமான தொண்டுள்ளம் நிறைந்தவர்கள் அடியவருக்கு அடியவராக இருந்து இந்த சேவைகளை செய்து வருகின்றனர்.

இவ்வாறான தொண்டுகளை செய்கின்றவர்களுக்கு அம்பாளுடைய அனுக்கிரகமும் நிறையவே கிடைத்துவருகிறது. கொழுக்கட்டை ஆச்சி என அழைக்கப்பட்ட செல்வநாயகி அவர்களும் ஒரு முறை தீராத துன்பத்தை எதிர்நோக்கியுள்ளார். இரண்டு கால்களும் நடக்கமுடியாத அளவுக்கு வேதனை அவரை வாட்டி எடுத்துள்ளது. ஆனால் அம்பாளிடம் மனம் உருகி தனது குறையினை போக்குமாறு வேண்டுதல் செய்து மனம் உருகி வழிபட்டுள்ளார்.

அம்பாள் தனது மெய்யடியவரின் நோயினை முழுமையாகவே குணமாக்கியுள்ளார். கொழுக்கட்டை ஆச்சியும் பூரண மனநிறைவு அடைந்துள்ளார். அம்பாளின் கருணைக்கு மனமுருகி அம்பாளுக்கு காணிக்கையாக பவுனினால் கால் பாதம் செய்து, அணிய வைத்து அம்பாளை அழகு பார்த்து நிறைவடைந்துள்ளார்.

ஓம் அம்பாள் துணை

✧✧✧✧✧



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருளாட்சி - 11

ஆன்மிகத்துடன் இயைந்த வாழ்வியல் மானிடப் பிறப்பை நிறைவடையச் செய்யும். இந்த உண்மையை வல்வையில் வாழ்ந்த எமது மூதாதையர்கள் பட்டறிவால் உணர்ந்தவர்கள். இதனால்தான் வல்வையின் எல்லாத் திசைகளிலும், எல்லா இடங்களிலும் அவர்கள் ஆலயங்கள் அமைத்து வழிபட்டுள்ள னர். அதேபோன்று அந்த பொக்கிஷங்களை எம்மிடம் கையளித்து விட்டு சென்றுள்ளனர். எமது மூதாதையர்கள் அளித்த அந்த பொக்கிஷங்களினூடாக நாமும் ஆன்மிக நிறைவை பெறுகின்றவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கின் றோம். அதேநேரம் ஆதித் தெய்வமாக அம்பாளைப் போற்று கின்ற மரபும் பேணப்பட்டு வருகின்றது.

வல்வை வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரன் ஆலய கொடியேற்றத்திற்கு முன்பு வைத்தீஸ்வரன் ஆலய பிரதம குருக்கள் வல்வை முத்துமாரி அம்மனது ஆலயத்திற்கு வருகை தருவார். அங்கே மூலஸ்தான அம்பாளுக்கு முறைப்படி பஞ்சாராத்தி தீபாராதனை காட்டி வணக்கம் செலுத்துவார். அதைத் தொடர்ந்து அம்பாள் சிங்க வாகனத்தில் வெளிவீதி உலா வருகின்ற நிகழ்வை வல்வை வைத்தீஸ்வரன் ஆலய பிரதம குருக்கள் தீபாராதனை மூலம் மங்களகரமாக ஆரம்பித்து வைப்பார். இவ்வாறு வல்வையில் வைத்தீஸ்வரப் பெருமா னுடைய வீதியுலாவிற்கு முன்பு அம்பாளுடைய வீதி உலா நிகழ்வு இடம்பெற்று வருகின்றது. மூதாதையர் காலம் தொடக்கம் இவ்வாறான பல சிறப்பான பாரம்பரியங்கள் வல்வை யில் பேணப்பட்டு வருகின்றன.

வல்வையின் தாய் முத்துமாரி அம்மன். இதனை யாரும் சொல்லித் தெரிந்து கொள்வதில்லை. வல்வையில் பிறந்து சிறுவர்களாக வளர்ந்துவரும் பொழுதே இதனை அனைவரும் உணர்ந்து உள்வாங்கிக் கொள்கின்றனர். அம்பாள் மானிட வடிவில் படகேறி வந்து வாடிவானில் கரை இறங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைப்புடன் பயணப்பட்டு வந்த அம்பாள் அங்கேயுள்ள மகிழ மரத்தடியில் தங்கி ஓய்வு எடுக்கிறார். களைப்புடன் காணப்பட்ட அந்த மூதாட்டிக்கு மனமிரங்கி பெண் ஒருவர் அவருக்கு கஞ்சியும் வழங்குகின்றார். களைப்பு நீங்கிய மூதாட்டி வடிவிலிருந்த அம்பாள் இதே வாடி ஒழுங்கையால் நடந்து செல்கின்றார். அவ்வாறு வாடி ஒழுங்கையால் நடந்து சென்ற அம்பாள் தற்பொழுது ஆலயம் அமைந்திருக்கும் இடமான தாசில்தான் மணலில் கோயில் கொள்கின்றாள். இவை எல்லாம் அம்பாளுடைய திருவுள்ளப்படி நடந்தேறிய நிகழ்வுகள். இவ்வாறான அம்பாளது அற்புத வரலாற்றை வல்வை மக்கள் காலம் காலமாக கர்ண பரம்பரைக் கதையாக அடுத்தடுத்த சந்ததியினருக்கு கடத்தி வருகின்றனர்.

கடலில் காக்கும் கடவுளாக விளங்கிய அம்பாள் நிலத்திலும் வல்வை மக்களுக்கு கருணை செய்வதற்காக தானாக நாடிவந்து கோயில் கொள்கின்றார். தெய்வங்கள் மனிதர்கள் மீது கருணை கொள்கின்றனர். இதனால் தெய்வங்கள் மனிதர் களை தாமாகவே நாடி வருகின்றனர். வல்வை மண்ணுக்கான புனிதமும் சிறப்பும் இங்கேயிருந்துதான் உருவாகிறது.

இதனால் தான் எங்கே வாழ்ந்து கொண்டிருந்தாலும் நாளும்பொழுதும் வல்வை மக்கள் அம்பாளை தமது குல தெய்வ மாக உள்ளத்தில் இருத்தி, உள்ளம் உருகி வழிபட்டுக் கொண் டிருக்கின்றனர். அம்பாளும் தினம் தினம் அடியவர்கள் குறை களை போக்கி மெய்யடியார்களுக்கு தனது திருவிளையாடல் களையும் நிகழ்த்திக் கொண்டிருக்கின்றார். அடியவர்கள் உள்ளம் உருகி வேண்டுதல் செய்கின்றபொழுது அம்பாள் அவற்றை நிறைவு செய்து வருகின்றார் என்பதை அனுபவத்தால் உணர்ந்தவர்கள் ஏராளம். யுத்த சூழ்நிலையில் அடியவர் ஒருவருக்கு இடம்பெற்ற நிகழ்வொன்றையும் இங்கே தருகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த ஆசிரியை வவுனியா வடக்கு வலயம் புளியங்குளம் மகா வித்தியாலயத்தில் ஆசிரியராகக் கடமையாற்றிக் கொண் டிருக்கிறார். 2009ஆம் ஆண்டு இடம்பெற்ற இறுதி யுத்தத்திற்குள் இவர் இருந்த பகுதியும் சிக்கிக்கொள்கின்றது. கொத்துக் கொத்தாக மக்கள் மடிகின்ற சூழ்நிலைகள் உருவாகின்றன.

வெளித் தொடர்புகள் துண்டிக்கப்பட்டன. இங்கே வல்வை யில் இந்த ஆசிரியரின் தந்தையார் இரத்தினவடிவேல் குகதாசன் அவரது மனைவி மற்றும் ஆசிரியையின் சகோதரர்கள் என அனைவரும் கண்ணீரும் கம்பலையும் ஆகின்றனர். குறிப்பாக தந்தையார் குகன் உணவின்றி நித்திரையின்றி நாளும்பொழுதும் மகளின் நிலையை எண்ணி துடிக்க ஆரம்பிக்கின்றார். அம்பாளிடம் இடைவிடாது வேண்டுதல் செய்கின்றார். அம்பாளிடம் மண்டாடுகின்றார். தனது மகள் மீது இருந்த அளவு கடந்த பாசத்தினால் தனது உயிரை வேண்டுமானால் எடுத்துக் கொள். ஆனால் எனது மகளுக்கு எதுவும் நடந்துவிடக்கூடாது என அம்பாளிடம் வேண்டுதல் செய்கின்ற அளவுக்கு குகன் துடித்து போகின்றார்.

ஆன்மிக நம்பிக்கையுள்ளவர்கள், இறை கைங்கரியங் களில் ஈடுபடுபவர்கள் தமது ஆற்றாமையால் இவ்வாறான கடுமையான வேண்டுதல்களை தெய்வங்கள் மீது வைப்ப துண்டு. இவ்வாறான சூழ்நிலைகள் ஆன்மிகத்திற்கு சோதனை நிறைந்த தருணங்களாகும். ஆயிரக்கணக்கான மக்கள் மடிந்து கொண்டிருக்கும் சூழ்நிலைக்குள் தனிநபர் ஒருவர் தப்புவ தென்பது மனிதர்களால் தீர்மானிக்க முடியாதவை. இதனை குகன் அவர்கள் மிக நன்றாகவே உணர்ந்திருந்தார். அதே நேரம் தெய்வத்தால் ஆகாதது எதுவும் இல்லை என்ற திடமான நம்பிக்கையும் அவரிடம் இருந்தது. இதனால் அம்பாளிடம் மனமுருகி வேண்டுதல் செய்கின்றார். நாளும்பொழுதும் அம்பாள் நாமங்களை உச்சரித்து அம்பாளிடமே சரணாகதி அடைகின்றார். வேதனை துன்பம் ஒரு புறமும் இறை பிரார்த்தனை மறுபுறமுமாக அவர் தன்னையே மறந்தவராக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகிக்கொண்டிருந்தார். உணவின்றி நித்திரை இன்றி பார்ப்பவர் பரிதாபப்படும் நிலைக்கு அவர் ஆளாகிக் கொண்டிருந்தார்.

இந்த சந்தர்ப்பத்தில்தான் அம்பாளின் அந்த அற்புதம் நிகழ்கின்றது. அம்பாள் இன்னொருவருக்கு கனவிலே காட்சி கொடுக்கிறார். "எனக்கு பஜனை செய்கின்ற அன்பன் என்னை நோக்கி இடைவிடாது பிரார்த்திக்கிறான், அவனது வேண்டுதல் நிறைவேறும்."

ஆன்மிகத்தில் ஆழமான ஈடுபாடு கொண்டவராக மட்டுமன்றி தான் வாழும் சமூகத்தினையும் அந்த பாதையில் ஆற்றுப்படுத்துகின்ற முயற்சியில் ஈடுபட்டுவருபவர் திரு. யோகானந்தராஜா. அத்துடன் அனைத்து ஆலயங்களிலும் பஜனைச் செயற்பாடு சிறப்பாக இடம்பெற்றுக் கொண்டிருப் பதற்கும் காத்திரமான பங்களிப்பு செய்துவருபவர். இந்த அன்பருக்குத்தான் அம்பாள் கனவிலே காட்சி கொடுக்கிறாள். இவ்வாறான அருள்வாக்கினையும் அம்பாள் வழங்குகின்றார்.

திரு. யோகானந்தராஜா தம்முடன் இணைந்து பஜனை செய்து வருகின்ற குகனுடைய வீட்டிற்குச் செல்கிறார். அம்பாள் தனக்கு கனவிலே வெளிப்படுத்திய செய்தியை தெரிவிக்கிறார். அதுமட்டுமல்ல உனது மகளுக்கு எந்த ஆபத்தும் நேராது என அழுத்தமாகவும் தெரிவிக்கின்றார். அம்பாளை நினைத்து நாளும் பொழுதும் ஆழமான வேண்டுதல் செய்து கொண்டிருந்த குகனுக்கு இந்த செய்தி சற்று நம்பிக்கையை கொடுக்கிறது. அம்பாளின் கருணையில் அவருக்கு அசைக்க முடியாத நம்பிக்கை இருந்ததினால் இந்த செய்தி அவருக்கு நம்பிக்கையை மட்டுமன்றி ஆறுதலையும் கொடுத்தது. குடும்பத்தவரும் சற்று ஆறுதல் அடைகின்றனர்.

அவருடைய நம்பிக்கை வீண்போகவில்லை. அம்பாளிட மிருந்து செய்தி கிடைத்து சில நாட்களிலேயே மகளிடம் இருந்து நல்ல செய்தி கிடைக்கிறது. அதுமட்டுமன்றி இராமநாதன் அகதிகள் முகாமிலிருந்து முதல் விடுவிக்கப்பட்டவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரிசையில் குகனுடைய மகளும் ஒருவராக இடம்பெறுகின்றார். ஒரு சிறிய காயம் கூட இல்லாமல் மகள் வீடு திரும்புகிறார்.

குகனை வல்வை மக்கள் நன்கு அறிந்தவர்கள். றேடியோ பழுது பார்க்கின்ற தொழிலை மேற்கொண்டு வந்தவர். அதே நேரம் எல்லா ஆலயங்களிலும் இடம்பெறும் பஜனைச் செயற் பாட்டில் தன்னை மறந்து பஜனை பாடல்களை பாடி பக்திப் பரவசத்தை ஏற்படுத்தி வருபவர். அது மட்டுமல்ல தினமும் தமது வீட்டு பூஜை அறையில் அம்பாளை மனதில் நிறுத்தி தேவார திருவாசகங்களை மனம் உருகி பாடிவருபவர். இவ்வாறு பாடிய பின்புதான் வேலைக்கு செல்லுகின்ற வழமையையும் பேணி வந்துள்ளார். அம்பாளுடைய கருணைக்கு எதுவுமே ஈடுஇல்லை என்பதனை நம்பி வாழ்ந்து வந்தவர்.

தற்பொழுது யா/சிவகுரு வித்தியாசாலையில் கடமை யாற்றிக் கொண்டிருக்கும் அவரது மகள் யசோதாவை அவரது வீட்டிற்கு சென்று சந்திப்பதற்கு வாய்ப்பு கிடைத்தது. யுத்தத்தின் கொடூரங்களை அவரால் தற்பொழுதும் மறக்க முடியவில்லை. அதேநேரம் புளியங்குளத்தில் விமானக் குண்டுவீச்சின் பொழுதும் வலைஞர் மடத்தில் ஷெல் தாக்குதலின் பொழுதும் தான் உயிர் தப்பியது இறையருள்தான் என்பதை அந்த சந்தர்ப்பத்திலேயே தான் உணர்ந்து கொண்டதனை மனமுருகி வெளிப்படுத்தினார். குறிப்பாக வலைஞர்மடத்தில் தமக்கு மிக அருகாமையில் ஷெல்வந்து விழுந்தும் அது வெடிக்காத அதிசயம் நடந்ததையும் விபரித்தார்.

இறை வழிபாட்டிற்கும் இறையருளிற்கும் ஈடானது வேறு ஏதும் இல்லை என்பதனை தனது தந்தையாரூடாக உணர்ந்து கொண்ட தருணங்களாக தான் உயிர் தப்பிய தருணம் இருந்ததை அடியேனுடன் மனமுருகி பகிர்ந்து கொண்டார்.

ஓம் அம்பாள் துணை

✧✧✧✧✧



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வல்வை வைத்தீஸ்வர சுவாமிகள்

காலங்காலமாக வைத்தீஸ்வரப் பெருமான் வல்வையில் மறைபொருளாக இருந்து வருகின்றார். இதேபோல வைத்தீஸ் வரப் பெருமான் அடியார்களுக்கு மானசீகமாகவே தனது அருளாட்சிகளையும் நிகழ்த்தி வருகின்றார்.

மானம்பூத் திருவிழாவை அடியார்கள் எதிர்கொண்டிருந்த காலகட்டம் அது. அப்பொழுது மனோகரக் குருக்களுக்கு சில நாட்கள் தொடர்ச்சியாக உடல் வருத்தம் நீடிக்கிறது. குருக்க ளால் இறை காரியங்களில் ஈடுபட முடியாத நிலை. குருக்களும் குடும்பத்தவரும் நெருங்கியவர்களும் குழப்பமடைகின்றனர், கவலைப்படுகின்றனர்.

ஆனால் மனோகரக் குருக்கள் உள்ளத்தால் திடம் கொள்ளுகின்றார். வைத்தீஸ்வரப் பெருமானிடம் தன்னை ஒப்படைகின்றார். மானம்பூ திருவிழாவிற்கும் செல்கின்றார். வழமைபோல வாழை வெட்டும் இடம்பெறப் போகின்றது. குருக்கள் வாளைக் கையில் எடுக்கின்றார். அவ்வளவுதான் குருக்களுக்குத் தெரியும்.... வழமைக்கு மாறாக அன்று அடியவர்கள் அவரது பாதங்களை தொட்டு வணங்கி தமது புளகாங்கிதத்தை குருக்களிடம் வெளிப்படுத்தும்பொழுதுதான் அவர் விளிப்படைகின்றார்.

வாளை எடுத்த பின்பு என்ன நடந்தது என்பது குருக்களுக்கு தெரியாது. ஆனால் குருக்கள் அன்று மானப்பூத் திருவிழாவில் வழமைக் மாறான கம்பீரத்துடன் அடியவர்கள் வியப்படையும் வண்ணம் வாள்வெட்டுத் தொடர்பான சகல சமயச் சடங்குகளை யும் செவ்வனே நிறைவேற்றியுள்ளார்.

அடியவர்கள் அடக்கமுடியாத தமது உள்ளத்து உணர்வு களை குருக்களிடம் பகிர்ந்துகொள்ளும் பொழுதுதான் அவருக்கு மானம்பூ திருவிழாவில் என்ன நடந்தது என்பது தெரிய வருகின்றது. அப்பொழுது தான் இவை எதுவும் தான் செய்த காரியங்களல்ல. அனைத்தும் வைத்தீஸ்வரப் பெருமான் செய்த காரியங்கள் என்பதையும் குருக்கள் உணருகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தமிழ்ப்பூங்கா, நெல்லியடி. 0212264014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org